
தமிழரசு
ஏப்ரல் 16-30, 1998 ரூ.3



புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

தோற்றம் : 29.4.1891

மறைவு : 21.4.1964



பொதுவுடமை வீரர் ப. ஜீவானந்தம்

தோற்றம் : 21.8.1907

மறைவு : 18.1.1963

## இந்த இதழில்...


★ ஜீவா மணிமண்டபம் திறப்புவிழா
- முதலமைச்சர் கலைஞர் உரை ... 2

★ பொதுவுடைமை வீரர் ஜீவானந்தம் ... 6

★ வீரன் சுந்தரலிங்கம் நினைவுக்கிராமம்
திறப்புவிழாவில் கலைஞர் சொற்பொழிவு ... 8

★ கல்வித்துறைச் சலுகைகள்: சட்டப்பேரவையில்
அமைச்சர் பேராசிரியர் அறிவிப்பு ... 12

★ பாவேந்தர் நோக்கில் பாரதி ... 17

வேளாண்மைத்துறை: சட்டப்பேரவையில்
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அறிவிப்புகள் ... 20

★ உயிர் காப்போம் (கவிதை) - ரஜியா பேகம் ... 26

★ மணமகள் தேவை (சிறுகதை)
- கி.ராஜநாராயணன் ... 30

★ மத்திய அரசுக்கு இணையாகத் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் ... 35

★ வருவாய்த்துறை : சட்டமன்றத்தில்
அமைச்சர் நாஞ்சிலார் அறிவிப்பு ... 41

★ மக்கள் நல்வாழ்வுத்துறை: சட்டமன்றத்தில்
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அறிவிப்பு ... 43



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு : 2029
சித்திரை
ஏப்ரல் 16 - 30, 1998
மலர்:8 இதழ்:20
விலை ரூ.3


### திருக்குறள்

*வானின் றுலகம் வழங்கி வருதலால்*
*தானமிழ்தம் என்றுணரற் பாற்று.*

- உலகத்தை வாழவைப்பது மழையாக அமைந்திருப்பதால், அதுவே அமிழ்தம் எனப்படுகிறது. (கலைஞர் உரையிலிருந்து).





# "ஜீவாவின் எளிமையான வாழ்க்கை, பொது வாழ்வில் ஈடுபட்டிருப்போருக்கு ஒரு பாடமாக அமைந்திடவேண்டும்!"

## ஜீவா மணிமண்டபம் திறப்பு விழாவில் கலைஞர் அறிவுரை

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஜீவா மணிமண்டபத்தைத் திறந்து வைத்து மண்டபத்தினுள்ளே அமைக்கப் பட்டுள்ள ஜீவானந்தம் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மணிமண்டபம் அமைத்த, கலைஞர் அவர்களுக்கு ஜீவானந்தம் அவர்களின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

பின்னர், நாகர்கோயில் எஸ்.எல்.பி. அரசு மேனிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் - அரசின் பல்வேறு கட்டடங்களைத் திறந்து வைத்து, புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப பேருரையாற்றினார்.

விழாவிற்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. வ.முல்லைவேந்தன் அவர்கள் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் திரு. விஸ்வநாத் ஷெகாவ்கர் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு அமைச்சர் திரு. சுரேஷ்ராஜன், என்.டென்னிஸ் எம்.பி., டாக்டர் எம். மோசஸ், டாக்டர் வே.ஆல்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாண்புமிகு அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன், தா. கிருட்டினன், ஆல்டி அருணா, சமயநல்லூர் செல்வராஜ், ரகுமான்கான், ஜெனிபர் சந்திரன் மற்றும் நகர்மன்றத் தலைவர் ஜமீலா ஜேம்ஸ், மனோ தங்கராஜ், சி.வேலாயுதன் எம்.எல்.ஏ., டி.மணி எம்.எல்.ஏ., குமாரதாஸ் எம்.எல்.ஏ., பொன்னாடு எம்.எல்.ஏ ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இவ்விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு :

"இன்றைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ள அண்ணன் ஜீவானந்தம் அவர்கள் பெயரால் அமைந்துள்ள மணிமண்டபம் - எப்படியும் அமைந்திட வேண்டுமென்ற கோரிக்கையைப் பலமுறை சட்டமன்றத்திலும், என்னிடத்திலே தனிப்பட்ட முறையிலும் வலியுறுத்தியவர் இந்த மாவட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மணி ஆவார். அவருடைய பெரும் முயற்சியின் காரணமாகவும் அண்ணன் ஜீவானந்தம் மீது எனக்குள்ள அன்பின் காரணமாகவும் அவருடைய வாழ்க்கை இன்றைய இளைஞர்களுக்கும், எதிர்கால இளைஞர்களுக்கும் ஒரு பாடமாக அமைவதற்கு இது ஒரு நல்ல சின்னமாக அமைந்திடும் என்ற எண்ணத்தின் காரணமாகவும் அமைக்கப்பட்டு இன்றைக்குத் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நினைவு மண்டபத்திற்குப் பதினைந்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவு ஆகியிருக்கின்றது. அதே நேரத்தில் இந்த மாவட்டத்தில் ஏறத்தாழ 38 இலட்சம் ரூபாய் செலவில் கண் மருத்துவமனைக் கட்டடம் ஒன்றும் இன்றைக்குத் திறக்கப்படுகிறது. 10 இலட்சம் ரூபாய் செலவில் நகராட்சிப் படிப்பகம் திறந்து வைகக்கப்படுகிறது. நாகர்கோவில் நகரில் குடிநீர் வினியோகத்திற்காக 49 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ள ஏழு ஊர்திகள் இயக்கி வைக்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டம் 91 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படுகிறது. எனவே, இந்த வகையில் ஏறத்தாழ 2 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, தொடங்கி வைக்கப்படுகின்றன.

அஃதன்னியில் தொடங்கப்பட வேண்டிய திட்டங்களுக்காக அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்ச்சியில் மாவட்ட நெஞ்சக நோய்க் கட்டடம் 30 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டுவிழா இன்றைக்கு நடைபெற்றிருக்கிறது. 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட வேண்டிய மாவட்ட சித்த மருத்துவப் பிரிவு கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கீழ்மணக்குடி, மேலமணக்குடி இணைப்புப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப் படவுள்ள பிற்படுத்தப்பட்ட கல்லூரி மாணவர் நலவிடுதி கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஏறத்தாழ 5 கோடி ரூபாய் மதிப்பில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மூவலூர் இராமமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்கு 360 பெண்களுக்கு 36 இலட்ச ரூபாய் நிதிஉதவி வழங்கப்படுகிறது. இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் 300 பயனாளிகளுக்கு 40 இலட்ச ரூபாய் செலவில் வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 37 பயனாளிகளுக்குச் சற்றொப்ப 4 இலட்ச ரூபாய் கடன் வழங்கப்படுகிறது. இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 25 பயனாளிகளுக்கு ஆறேமுக்கால் இலட்ச ரூபாயில் 25 தொகுப்பு வீடுகள் இன்று வழங்கப்படுகின்றன.

சிங்காரவேலர் நினைவு வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 77 இலட்சம் ரூபாயில் 240 வீடுகள் மீனவர்களுக்கு இன்று இலவசமாக வழங்கப்படுகின்றது. அதிக விளைச்சல் காட்டிய இரண்டு விவசாயிகளுக்கு ஊக்கப்பரிசுத் தொகையாக முதல் பரிசு எட்டாயிரம் ரூபாய், இரண்டாம் பரிசு நான்காயிரம் ரூபாய் மொத்தம் பனிரெண்டாயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் மூன்று சக்கர வண்டிகள் ஐந்து பயனாளிகளுக்குப் பதினைந்தாயிரம் ரூபாயில் வழங்கப்படுகிறது.

இப்படிப் பல்வேறு நலத்திட்டங்கள் ஏறத்தாழ ஒன்பது கோடி ரூபாய் மதிப்பில் இந்த மாவட்ட மக்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் வழங்கப்படுகின்றன. இவ்வளவு திட்டங்கள் இன்றைக்கு அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டாலும் கூட, இங்கே பேசிய பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் தங்கள் நாடாளுமன்ற மக்களவை அல்லது மாநிலங் களவையின் பிரதிநிதிகளாக இருந்தாலும், அல்லது சட்டப் பேரவையின்



பிரதிநிதிகளாக இருந்தாலும், அல்லது உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளாக இருந்தாலும் பல கோரிக்கைகளை இங்கே முன்வைத்திருக்கிறார்கள்.

சட்டமன்றம் நடைபெறும் பொழுது எந்தவொரு அறிவிப்பையும் வெளியில் செய்யக்கூடாது என்பது மரபு. இந்த மரபு தெரியாதவர்களா நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் என்று கேட்டால் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும்கூட உங்களுக்கு நேராகச் சில கோரிக்கைகளை வைத்து, பார்த்தீர்களா நான் சட்டமன்றத்திலே வாதாடவில்லை என்று சொன்னீர்களே, நான் வாதாடி அது பத்திரிகைகளில் வராமல் இருந்திருக்கலாம். வாதாடுவேன் என்பதை நிரூபிப்பதற்காகத்தான் இங்கு ஒருமுறை உங்கள் முன்னால் இந்தக் கோரிக்கைகளை வைக்கிறேன் என்ற வகையிலே பல கருத்துக்களை, பல கோரிக்கைகளை இங்கே எடுத்துவைத்திருக்கின்றார்கள்.

## கோரிக்கைகள் உரிய காலத்தில் நிறைவேற்றப்படும்

நான் அந்தக் கோரிக்கைகளை நிராகரிப்பவன் அல்ல. அவைகள் நிறைவேற்றப்படும் என்று மாத்திரம்தான் சொல்ல முடியுமே தவிர, என்றைக்கு நிறைவேற்றப்படும் என்றெல்லாம் அறிவித்தால் இவர்களே நாளைக்கு யாரையாவது சட்டமன்றத்தில் தூண்டிவிட்டு "சட்டசபை நடைபெறும்போது முதலமைச்சர் எப்படி வெளியே இவைகளை எல்லாம் அறிவித்தார் என்று கேளுங்கள்" என்று கேட்கச் செய்தாலும் செய்வார்கள். அந்த பயத்திலேதான் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேறுமா நிறைவேறாதா என்று திட்டவட்டமாக நான் இங்கே அறிவிக்கவில்லை. அறிவிக்கவில்லை என்றாலும்கூட, அவைகள் எல்லாம் நிச்சயமாக விரைவில், அதே நேரம் உரிய காலத்தில் நிறைவேற்றப்படும் என்பதைக் கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவக் கல்லூரியைப்பற்றி அனைவருமே பேசியிருக்கின்றார்கள். ''இந்த ஆண்டே அறிவித்து விடுங்கள்'' என்று வேலாயுதம் அவசரப்படுவதிலே அர்த்தம் இருக்கிறது. ஏனென்றால் அடுத்த ஆண்டு இவர்கள் ஆட்சியிலே இருப்பார்களோ, இல்லையோ என அதைக் கணிக்கக்கூடிய கட்சியிலே இருப்பவர் அவர். எனவே அவர், "இந்த ஆண்டே அறிவித்து விடுங்கள் அடுத்த ஆண்டு அறிவிக்க இயலாது" என்று சொல்வாரேயானால், ஒருவேளை அப்படி ஏதாவது ஏற்பட்டாலும் அடுத்த ஆண்டு வந்து நான்தான் அறிவிப்பேன் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மருத்துவக்கல்லூரிகள் இந்த ஆண்டு தூத்துக்குடி, வேலூர் ஆகிய இரண்டு இடங்களுக்கு அறிவிக்கப்பட்டபோதே சட்டமன்றத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி ''மேலும் இரண்டு கல்லூரிகள்'' என்று சொன்னதில் - அதில் நாகர்கோயிலையும் இணைத்துத்தான் சொல்லியிருக்கிறார்.

நாகர்கோயில் என்று சொல்லும் பொழுது "அது இந்த ஆண்டு வசதி இல்லாத காரணத்தால் அடுத்த ஆண்டு அறிவிக்கப்படும்'' என்று குறிப்பிட்டிருக்கின்றார். அதற்குள் ஒருவேளை வசதி வந்து விடுமேயானால், இந்த ஆண்டிலே கூட, அதை அறிவிக்காமலேகூட தொடங்க முடியும் என்ற அந்த வாய்ப்பு இருப்பதை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

## காமராசரிடம் உள்ள பற்று - மரியாதை

இன்னொன்று - ஒரு பொதுவான பிரச்சினை - தண்ணீர் பிரச்சினை. அணைக்கட்டுப் பிரச்சினை இந்தப் பிரச்சினைகளை எல்லாம் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். நம்முடைய நண்பர் குமாரதாசும், நாடாளுமன்ற உறுப்பினர் டென்னிசும், மோசசும் மற்றும் உரையாற்றிய நமது நண்பர்கள் அனைவருமே பெருந்தலைவர் காமராசருடைய நினைவு மண்டபம் அவருடைய அஸ்தி கரைக்கப்பட்ட இடத்தில் கன்னியாகுமரியிலே கடற்கரைப் பகுதியிலே அமைவதுதான் சிறப்பு என்று எடுத்துரைத்திருக்கின்றார்கள்.

கடற்கரைப் பகுதியிலே அமைய வேண்டும் என்பதிலே எனக்கு இருவிதமான கருத்து இல்லை. ஒருமுறை அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் என்னிடத்திலும் சொன்னார். பொதுவாகவும் அறிவித்தார். "கடற்கரை ஓரத்தில், கடற்கரையை ஒட்டினாற்போல் அதிகமான கட்டடங்கள் இருத்தலாகாது" என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்குப் பிறகு உச்சநீதிமன்றத்திலேகூட, ஒரு கருத்து வெளிப்படுத்தப்பட்டு, "கடற்கரை ஓரத்திலே கட்டடங்கள் இருத்தலாகாது" என்பது ஒரு நியதியாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இருந்தாலும் பெருந்தலைவர் காமராஜரிடத்தில் பல்வேறு கொள்கை வேறுபாடு களுக்கிடையே நாம் வைத்துள்ள மரியாதை, பற்று இவைகளையெல்லாம் நீங்கள் அறியாதவர்கள் அல்ல.

உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். மறைந்தவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் நாட்டுக்காக, மொழிக்காக, இனத்துக்காக, சமுதாயத்துக்காக பாடுபட்டவர்கள் என்றால், பொதுநலவாதிகள் என்றால் அவர்களை நான் சார்ந்திருக்கின்ற கட்சி ஆனாலும் அல்லது என்னுடைய ஆட்சி ஆனாலும் என்றைக்கும் மறந்ததே கிடையாது.

1969ஆம் ஆண்டு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது முதல் தடவையாகத் தில்லையாடி வள்ளியம்மாளுக்கு - தென்னாப்பிரிக்காவிலே மகாத்மா காந்தியோடு சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட தில்லையாடி வள்ளியம்மாளுக்கு தஞ்சை மாவட்டம் - தில்லையாடியில், "தில்லையாடி வள்ளியம்மாள் நகர்" என்ற ஒரு நகரத்தை நிர்மாணித்தவன் நான்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அங்கே நாகப்பன், நாராயணசாமி என்ற இரண்டு ஆதிதிராவிட இளைஞர்களுடைய பெயரால் வீடுகளைக் கட்டித் தந்தவனும் நான்தான் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## சிதம்பரனார் இழுத்த செக்கு

நீங்கள் அறிவீர்கள், சிதம்பரனார் இந்த நாட்டினுடைய விடுதலைக்காக செக்கு இழுத்தார். சிறைப்பட்டார். சித்ரவதைகளை ஏற்றுக்கொண்டார் என்பதை எல்லாம் நீங்கள் படித்திருக்கிறீர்கள். அறிவீர்கள். ஆனால் நான் கேட்கிறேன். நண்பர் குமாரசாமி உள்பட

எல்லா தேசியவாதிகளையும் கேட்கிறேன். அவர் இழுத்த செக்கு எங்கே இருக்கிறது என்றாவது இருபது ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியிலே தேடிப் பார்த்தீர்களா? இல்லை. இருபது ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் வெள்ளைக்காரர்கள் காலத்தில் சிதம்பரனார் இழுத்த செக்கு எங்கே இருக்கிறது என்று யாரும் தேடிப்பார்க்கவில்லை. அதைத் தேடிப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது இந்தக் கருணாநிதிக்குத்தான் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

நான்தான் அதைத்தேடி அலைந்து கோவைச் சிறைச்சாலையிலே அந்த செக்கு இருக்கிறது என்பதை அறிந்து உடனடியாக அதைக் கொண்டுவரச் சொல்லி, ராஜாஜி மண்டபத்திற்குப் பக்கத்திலே தனியாக அதற்கு ஒரு மண்டபம் எளிமையான முறையிலே கட்டச் செய்து அங்கே அந்த செக்கினை வைத்து - "சிதம்பரனார் இழுத்த செக்கு" என்று எழுதி அதை ஒரு கண்காட்சியாக ஆக்கிய அந்தச்செயல் தி.மு.கழக ஆட்சியிலே என்னால்தான் நிறைவேற்றப்பட்டது.

பெருந்தலைவர் காமராசருடைய நினைவு மண்டபம் சென்னையிலே - கிண்டியிலே இருக்கிறது - ராஜபவனுக்குப் பக்கத்திலே, ஏன் அங்கே வைக்கப்பட்டது என்றால், அங்கேதான் அவருடைய உடல் எரியூட்டப்பட்டது. அந்த இடத்திலே ஏன் எரியூட்டப்பட்டது என்றால், கிண்டியிலே அந்த ராஜபவனுக்குப் பக்கத்திலேதான் காந்திமண்டபம் இருக்கிறது. காந்திமண்டபத்திற்குப் பக்கத்திலே காமராசர் மண்டபம் இருப்பதுதான் சிறப்பு என்பதற்காகக் காமராசருடைய உடலை அங்கே தகனம் செய்து அந்த மண்டபத்தை அங்கே கட்டினோம். அந்த மண்டபத்தைக் கட்டி முடிக்கும்போது, மண்டப முகப்பிலே என்ன சின்னம் வைக்கலாம் என்ற பிரச்சினை எழுந்தபோது, "கைராட்டைச் சின்னம் வைக்கவேண்டும்" என்ற அந்தக் கருத்தை வழங்கியவனும் நான்தான். கைராட்டைச் சின்னத்தை வைத்துவிட்டு இரவு 12 மணிக்கு வீட்டுக்குத் திரும்பியவனும் நான்தான். மறுநாள் ஆட்சி கலைக்கப்பட்டது. அந்தச் செய்தியை அறிந்தவனும் நான்தான்.

> *சீர்திருத்தங்கள் மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும், உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும், சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவுமே அமைய வேண்டும்.*
>
> **- தந்தை பெரியார்**

அந்தக் கைராட்டைச் சின்னத்தை என்னுடைய ஆட்சி கலைக்கப்பட்ட மறுநாளே கலைத்துவிட்டார்கள். ஏன் எடுத்துவிட்டார்கள் என்றால், அது காமராஜ் காங்கிரஸ் கட்சியினுடைய தேர்தல் சின்னமாக இருந்த காரணத்தால் கைராட்டைச் சின்னம் கூடாது என்று எடுத்துவிட்டார்கள். பிறகு ஜனதா ஆட்சி வந்தபிறகு அதற்காகக் குரல் கொடுத்து மீண்டும் அந்தக் கைராட்டைச் சின்னம் அங்கே வைக்கப்பட்டது.

காமராசருக்கும் எங்களுக்கும் எத்தனையோ கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் நாங்கள் ஏற்றுக்கொண்ட தியாகச் சுடர், தியாகச் செம்மல், பெருந்தலைவர் காமராசர், அவரை நாங்கள் பெருமைப் படுத்தினோம்; அவரைப் பெருமைப்படுத்துவது, நாம் நம்மைப் பெருமைப்படுத்திக் கொள்வது போலாகும் என்ற காரணத்திற்காக.

## ராஜாஜி நினைவு மண்டபத்தின் வரைபடம்

அதைப்போலவே மூதறிஞர் ராஜாஜி மறைந்தபோது, அவருக்காக ஒரு நினைவுச் சின்னம் எழுப்பவேண்டும் என்ற கோரிக்கை வந்தது. சில பேர் சொன்னார்கள்; "ஏற்கெனவே ராஜாஜி மண்டபம் பெரிய அளவில் இருக்கிறது" என்று. இருந்தாலும் அவருடைய மறைவுக்குப் பின்னர் ஒரு நினைவுச் சின்னம் வேண்டும் என்று அதையும் கிண்டியிலே காந்தி மண்டபத்திற்கு இன்னொரு பக்கத்திலே - ஒரு பக்கத்திலே காமராசர் மண்டபம், இன்னொரு பக்கத்திலே ராஜாஜி மண்டபத்தை எழுப்பியவனும் நான்தான். "அதற்கு என்ன சின்னம் வைக்கலாம்" என்று கேட்டபோது நான் சொன்னேன்; எனக்கும் ராமாயணத்துக்கும் எவ்வளவு தூரம் என்று உங்களுக்குத் தெரியும். இருந்தாலும்கூட, "ராஜாஜி இராமாயணத்திலே மிகுந்த பற்றுடையவர். 'சக்கரவர்த்தி திருமகன்' என்ற ஒரு தொடரோவியமே எழுதியவர். எனவே அந்த மண்டபத்தினுடைய முகப்பு ராமருடைய கிரீடம் போல் இருக்க வேண்டும்" - என்று அதற்கு வரைபடம் வரைந்து கொடுத்தவனே நான்தான் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படி தேசத்தியாகிகள் யாராக இருந்தாலும், அண்மையிலேகூட பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நினைவுமண்டபத்தை எழுப்பித் திறந்துவைத்தேன். இன்றைக்கு எப்படி ஜீவா அவர்களின் குடும்பத்தினர் கலந்துகொண்டிருக்கிறார்களோ, அதைப்போல பக்தவத்சலம் அவர்களுடைய குடும்பத்தாரும் அந்த விழாவிலே கலந்துகொண்டு நன்றிப் பெருக்குடன் நினைவுகூர்ந்தார்கள்; உரையாற்றினார்கள்.

பக்தவத்சலம் அவர்களுக்கும் எனக்கும் எந்த அளவிற்கு உறவு என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் அவர் ஆற்றிய தொண்டு, அவர் செய்த தியாகம், அவர் நாட்டு விடுதலைக்காகச் சிறைப்பட்ட அந்த நாட்கள் இவைகள் எல்லாம் மதிக்கத் தகுந்தவை, மரியாதைக்கு உகந்தவை என்பதால்தான் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்பப்பட்டிருக்கின்றது.

## ஜீவானந்தத்தின் வாழ்க்கை

அண்ணன் ஜீவானந்தம் அவர்களை நான் இளமைக் காலம் தொட்டு அறிவேன். அவர்கள் தந்தை பெரியார் அவர்களுடைய வழியில் சுயமரியாதைக்காரராக விளங்கியவர். அவர் அரசியலிலே காங்கிரஸ் இயக்கத்திலே இருந்து, பின்னர் பொதுவுடைமை இயக்கத்திலே இருந்து பணியாற்றினார் என்றாலும்கூட, இறுதிக் காலம் வரையிலே சுயமரியாதைக் காரராக வாழ்ந்தவர்தான் அண்ணன் பஜீவானந்தம் அவர்கள். அவரோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பை நான் பெற்றவன். அறிஞர் அண்ணா அவர்கள் ஜீவானந்தம் அவர்களிடத்திலே பெருமதிப்புக் கொண்டவர்கள். இன்னும் சொல்ல வேண்டுமேயானால், அவருடைய எளிமையான வாழ்க்கை பொதுவாழ்வில் ஈடுபட்டிருக்கின்ற அரசியல்வாதிகள் அத்தனைப் பேருக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும்.

அவர் இறுதியாக மறைந்தபோது மருத்துவமனையில், பக்கத்திலே கூட யாரும் இல்லாத சூழ்நிலையில் இரவு அவர் மறைந்துவிட்டார். விடியற்காலையில் எனக்குச் செய்தி வந்தது. "ஜீவா மறைந்துவிட்டார். சென்னை மருத்துவமனையில் அவருடைய உடல் இருக்கிறது" என்ற செய்தி வந்தது. உடனே நான் அண்ணாவினுடைய வீட்டிற்குக் காரிலே சென்று, அண்ணாவை அழைத்துக் கொண்டு நானும், அண்ணாவும், என்.வி.நடராசனும் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று மருத்துவமனையிலே அந்த எளிய மனிதர், அந்த இரும்பு மனிதர், எழுச்சியுகம் காண்பதற்குப் 'புரட்சிக்' கீதங்களைப் பாடிய அந்தப் பெருமகன் ஜீவானந்தம் அவர்களுடைய உடல் மார்ச்சுவரியிலே (பிணக்கிடங்கு) வைக்கப்பட்டிருந்தது. மார்ச்சுவரியிலே வைக்கப்பட்டிருந்த உடலை வெளியே கொண்டுவந்ததைப் பார்த்து மாலை அணிவித்துவிட்டு அவருடைய உடலை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை எல்லாம் கவனித்துவிட்டு, கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்களுக்கெல்லாம் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தை அன்றைக்குத் தெரிவித்துக் கொண்டோம் என்றால், எந்த அளவிற்குப் பல்வேறு கருத்து வேறுபாடு களுக்கிடையிலும் அண்ணன் ஜீவானந்தம் அவர்களிடம் மதிப்புக் கொண்டிருந்தோம்; அன்பு வைத்திருந்தோம் என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

## மாற்றாரை மதிக்கும் மாண்பு

காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும், கம்யூனிஸ்ட்டாக இருந்தாலும், வேறு எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை

மதிக்கக்கூடிய அந்த மாண்பினை, பண்பினைப் பெற்றுள்ளது இந்த இயக்கம். அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த இயக்கம்.

இன்னும் சொல்ல வேண்டுமானால், பச்சையாகச் சொல்லவேண்டுமானால் மற்றவர்களை மதிக்கக்கூடிய இயக்கம். ஆனால் பொதுவாக நமது சமுதாயத்தில் இந்தப் பண்பாடு ஒருவழிப் பாதையாக இருக்கக்கூடாது. இதை நான் எல்லாக் கட்சியிலேயும் உள்ள தலைவர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கும் காமராசருடைய பிறந்தநாளில், நினைவு நாளில் நாங்கள் சென்று மலர்வளையம் வைக்கின்றோம். மாலை அணிவிக்கின்றோம். இன்றைக்கும் மூதறிஞர் ராஜாஜியினுடைய நினைவு நாளில் நாங்கள் சென்று மலர் வளையம் வைக்கின்றோம். அவருடைய சிலைக்கு மாலை அணிவிக்கின்றோம். அம்பேத்காருக்கு அனைவரும் சென்று மாலை அணிவிக்கின்றோம். ஆனால் சில கட்சிக்காரர்கள் பெரியார் பிறந்தநாளில், பெரியார் மறைந்த நாளில் அவருடைய நினைவிடத்திற்குச் சென்று அல்லது அவருடைய சிலைக்கு மாலை அணிவிக்கின்ற அந்த மனஇயல்பைப் பெற்றிருக்கின்றார்களா என்றால் இல்லை. அதைப் போல அண்ணா பிறந்தநாளில், அண்ணா மறைந்த நாளில் அவரை நினைவுகூர்கின்ற, அல்லது அவருக்கு அஞ்சலி செலுத்துகின்ற, அல்லது அவருடைய சிலைக்கு மலர் மாலை அணிவிக்கின்ற அந்த ஒரு வழிமுறையைப் பின்பற்றுகிறார்களா என்றால் இல்லை.

### பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டும்

எனவேதான் சொல்லுகின்றேன் - சமுதாயத்திலே ஒருவர் மறைந்துவிடுவாரேயானால் கட்சிகளை மறந்துவிட்டு அவர் எல்லோருடைய மனதிலும் நிறைந்தவர் என்கின்ற உள்ளத்தோடு நம்முடைய பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டும். அது ஒருவழிப்பாதையாக இருந்துவிடக்கூடாது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜீவானந்தம் அவர்களுடைய மணிமண்டபத்தைத் திறந்துவைக்கின்ற இந்த நேரத்தில் அவருடைய வாழ்க்கை இளைஞர்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ள வாழ்க்கை. இளம் பிராயத்தில் அவர் பூதப் பாண்டியிலே உள்ள கிராமத்திலே சிறுவனாக, மாணவனாக இருந்தபோது, அந்த பூதப்பாண்டி கோயிலிலே சுண்டல் வழங்குவது வாடிக்கையாம். அப்படி வழங்குகின்ற சுண்டலைக்கூட அவர் தான்ஒருவரே தின்று மகிழாமல் பலரையும் அழைத்துவந்து பல மாணவர்களையும், சிறுவர்களையும், ஏழைச் சிறுமிகளையும் அழைத்துவந்து அந்தச் சுண்டலை அவர்களுக்கெல்லாம் பகிர்ந்து கொடுத்துத்தான் தின்பார் என்பது அவருடைய இளம்பிராய வாழ்க்கையிலேயே கோடிட்டுக் காட்டப்படுகின்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

- என்றார் வள்ளுவர். அந்த வள்ளுவருக்குத்தான் குமரிமுனையிலே சிலை எடுத்துக்கொண்டிருக்கின்றோம். அந்த வள்ளுவரின் வழிநின்று தனக்குக் கிடைத்ததைப் பகிர்ந்து உண்ணுகின்ற அந்தப் பழக்கத்தை இளம் பிராயத்திலேயே அண்ணன் ஜீவா அவர்கள் பெற்ற காரணத்தால்தான் எல்லோருக்கும் சமத்துவம், சமதர்மம் வேண்டும் என்ற கொள்கை உடைய பொதுவுடைமை இயக்கத்தில் அவர் தன்னை இணைத்துக்கொள்ள முடிந்தது.

### பெரியாருடன் ஜீவானந்தம்

தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்று இளம்பிராயத்திலேயே அவர் கொண்ட கொள்கையின் காரணமாகத்தான் வைக்கத்தில் தந்தை பெரியார் அவர்கள் தீண்டாமையை ஒழிப்பதற்காக நடத்திய போராட்டத்தில் அண்ணன் ஜீவானந்தமும் அன்றைக்கே கலந்துகொள்ள வேண்டிய நிலைமை இருந்தது.

இவைகள் எல்லாம் நம்முடைய சமுதாயத்திலே எதிர்கால மன்னர்களாக விளங்க வேண்டிய இளைஞர்கள் படித்துப் பின்பற்ற வேண்டிய கொள்கைகளாகும். இந்தக் கொள்கைகளை எல்லாம் இந்த மாவட்டத்திலே உள்ள மக்களுக்குப் புதிதாக நான் சொல்ல வேண்டியதில்லை; ஏனென்றால், கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் ஒரு சில மாவட்டங்களைப் போல அறிவில் சிறந்த மாவட்டம். எதையும் தெளிந்து தீர்க்கமாக முடிவெடுக்கக்கூடிய மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். அதனால்தான் இந்தத் தேர்தலிலே கூட ஒரு தீர்க்கமான முடிவைக் கன்னியாகுமரி மாவட்டம் எடுத்தது என்பதை எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். "அப்படிப்பட்ட மாவட்டத்திற்கு ஏதாவது செய் ஏதாவது செய்" என்று என்னை அடிக்கடி கேட்கிறீர்களே! நான் சொல்கிறேன்; காமராசர் மண்டபம் கட்டப்படும் என்று சொல்லிச் சொல்கிறேன். உங்கள் விருப்பப் படியே அவருடைய அஸ்தி கரைக்கப்பட்ட இடத்தில் கடற்கரையில் அந்த மண்டபம் கட்டப்படும் என்ற உறுதியை இங்கே அளிக்கின்றேன்.

"இது சட்ட சபையிலே அறிவிக்க வேண்டிய உறுதி அல்லவா?" என்று கேட்கத் தேவையில்லை. சட்டசபை நிகழ்ச்சிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. எனவே அந்த உறுதியை அளிக்கின்றேன்.

### திருவள்ளுவர் சிலை

திருவள்ளுவர் சிலை அங்கே அமைகிறது. 1975-ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக அன்றைக்கு இருந்தபோது அமைச்சரவைக் கூட்டத்திலே எடுத்த முடிவுதான் இங்கே திருவள்ளுவர் சிலை அமைக்க வேண்டும் என்பதாகும். அதற்குப் பிறகு அதன் பணி தொடங்குகின்ற விழா, நான் 1989-ஆம் ஆண்டு முதலமைச்சராக வந்த பிறகு, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை ஓரத்தில் நடைபெற்றது.

ஏறத்தாழ 20 அல்லது 25 ஆண்டு காலப் பணி அது. அதனால்தான் ஒரு கோடி ரூபாய், இரண்டு கோடி ரூபாய் செலவிலே முடிவடையக் கூடிய அந்தச் சிலை இன்றைக்கு 8 கோடியைத் தாண்டிச் செலவாகும் போல் தெரிகிறது. 8 கோடி ஆனாலும் எத்தனைக் கோடி ஆனாலும் அங்கே அமைக்கப்படுகின்ற சிலை, உலகத்து மக்களெல்லாம், சுற்றுலாப் பயணிகள் எல்லாம் வந்து காண்கின்ற ஒரு அற்புதமான சிலையாக அங்கே அமையும் என்ற அந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அந்த மகிழ்ச்சி எனக்கு இருக்கின்றது. அந்தச் சிலையினுடைய திறப்பு விழாவும் இந்த ஆண்டு இறுதியிலே அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்திலே நிச்சயமாக நடைபெறும் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எடுத்துவைத்துள்ள இந்த மாவட்டத்தைச் சார்ந்த பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான பரிசீலனையில் இந்த அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, கோரிக்கைகள் வைத்த நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

* * *

மனம் போன போக்கிலே மற்றவர்கள்
பேசவும் எழுதவும், அதனைக் கண்டும்
மனம் பதறாமல் பணியாற்றி
வருவதே தூய தொண்டுக்கு
அடையாளம்.

- அறிஞர் அண்ணா

# பொதுவுடைமை வீரர்

# ப.ஜீவானந்தம்

'ஜீவா ஜீவா' என்று தமிழக மக்களால் அன்புடன் அழைக்கப்படும் பொதுவுடைமை வீரர் திரு. ப.ஜீவானந்தம் அவர்களுக்கு, நாகர்கோவிலில் எழில்மிகு நினைவு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், *18.4.98* அன்று அதைத் திறந்து வைத்திருக்கிறார்.

இதையொட்டி ஜீவா அவர்களின் வாழ்க்கையில் நடந்த சில முக்கியச் சம்பவங்களை இங்கே நினைவுகூர்வோம்.

அப்பழுக்கற்ற எளிய அரசியல் வாழ்க்கை அவருடையது; இன்றைய தலைமுறையினரும் தெரிந்துகொள்வதற்காக, அவற்றில் ஒருசிலவற்றை மட்டும் வாசகர்களுக்கு நினைவூட்டுகிறோம்.



கம்யூனிஸ்டு கட்சி பிளவுபடாமல் ஒரே கட்சியாக இருந்த காலத்திலேயே அதில் இருந்த முக்கியத் தலைவர்களில் ஒருவராக விளங்கினார் ஜீவா. உழைப்பைத் தோளிலும், உறுதியை மார்பிலும், துயரத்தை தன் மனதிலும் சுமந்து ஏழை, எளிய மக்களுக்காகத் தன்னலம் கருதாது பாடுபட்டார்.

குமரி மாவட்டத்தில் உள்ள நாகர்கோவிலுக்கு அருகே இருக்கும் பூதப்பாண்டி என்கிற இடத்தில் 1906-ஆம் ஆண்டு ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தில் பட்டன் பிள்ளைக்கும், உமையம்மாளுக்கும் மகனாகப் பிறந்தவர் பொதுவுடைமை வீரராம் ப.ஜீவானந்தம் அவர்கள்.

பள்ளிப் பருவத்திலேயே 'திருப்பணிச் சங்கம்' அமைத்து இந்த நாட்டின் ஏழை-எளிய மக்களின் அவல நிலைகளை எடுத்துக் கூறி, அவற்றைக் களைந்திட அரும் பாடுபட்டார். 11 வயதிலேயே தனது தாயாரை இழந்தார். ஈமச்சடங்கிற்கு வந்த உறவினர்கள் எல்லாம் ஜீவாவிற்குக் கைத்தறி ஆடை அணிவிக்க வந்தனர்.

11 வயது சிறுவனாயிருந்த அவரோ, கைத்தறி ஆடையை ஏற்றுக் கொள்ளவில்லை; "கதர் ஆடை எடுத்து வந்தாலே அணிவேன்" என்று கூறிவிட்டார். அவரது உறுதியைக் கண்டு வியந்துபோன உறவினர்கள், கதர் ஆடை எடுத்துக்கொடுத்தே ஈமக்கிரியைகளை முடித்தார்கள்.

அவர் 6ஆம் வகுப்பு படிக்கும்போதுதான் விடுதலைச் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கதான ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்தது. அதை எண்ணி உள்ளம் குமுறினார். உடனடியாகப் பள்ளிப் படிப்பைத்துறந்த ஜீவா, அரசியலில் தீவிரமாகக் குதித்தார்.

பின்னர் தான், நேரடியாக மகாத்மா காந்தியின் கொள்கையில் ஈடுபாடு கொண்டார் அவர்; காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து பணியாற்றினார். கதர் ஆடையைத் தெருத்தெருவாகச் சுமந்து சென்று விற்றார். காரைக்குடிக்கு அருகே சிறாவயல் என்ற இடத்தில் காந்தி ஆசிரமத்தை அமைத்துப் பணியாற்றினார்.

ஒருநாள் காரைக்குடியில் நடைபெற்ற தீண்டாமை எதிர்ப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு கனல் தெறிக்கப் பேசினார். இதை, அப்பகுதியைச் சேர்ந்த சில உயர் ஜாதியினர் விரும்பவில்லை; போலீசாரைத் தூண்டிவிட்டனர்.

கூட்டம் நடந்துகொண்டிருந்தபோதே தடியுடன் கூட்டத்தில் நுழைந்த போலீஸ்காரர்கள், அங்கே கூடியிருந்த மக்களை அடித்து விரட்டினார்கள். மேடையில் இருந்தோர் உள்பட எல்லோரும் கலைந்து ஓடினார்கள். ஆனால், ஜீவானந்தம் தனது உரையை நிறுத்தவே இல்லை. போலீஸ்காரர்கள் மேடையில் ஏறி கோபாவேசத்தோடு கொடுமையாக, சாட்டையால் மாறிமாறி

அடித்த போதும் ஜீவா அசைந்து கொடுக்கவில்லை. அவரது உள்ள உறுதியைக் கண்ட ஆங்கிலேய அதிகாரிகளே திகைத்துப் போய் விட்டார்கள்.

அவரது ஆசிரமத்திற்கு ஒருமுறை மகாத்மா காந்தி வந்திருந்தார். ஜீவாவிடம் "உங்களுக்கு என்ன சொத்தெல்லாம் உள்ளது?" என்று கேட்டார். அதற்கு ஜீவா, "இந்தியா ஒன்றுதான் எனது சொத்து" - என்று பதில் கூறினார். உடனே காந்தியார் பெருமையுடன், "இல்லை, நீங்கள் தான் இந்தியாவின் சொத்து" என்று கூறினார்.

அந்த அளவிற்கு மகாத்மாவின் உள்ளத்தில் ஜீவானந்தம் அவர்கள் இடம் பெற்றிருந்தார்.

காங்கிரஸ்காரராகத் தமது வாழ்க்கையைத் தொடங்கி, பின்னர் அதில் இருந்து பிரிந்து சுயமரியாதைக் கழகத்தில் தந்தை பெரியாருடன் பணியாற்றியவர் இவர்; இறுதியில் பொதுவுடைமைக் கட்சியிலே சேர்ந்து இந்த நாட்டு மக்களுக்காக இரவு பகலாக உழைத்தவரும் ஆவார்.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிலேயே இவர் வித்தியாசமானவர். அக்கட்சிக்காக இரவுபகலாக உழைத்தவர் ஜீவா.

கம்யூனிஸ்ட் என்றாலே, சோவியத் ரஷ்யா தான் என்று நினைக்கும்படி இருந்த நிலை மாறி, அக்கட்சியை மண்ணின் மணத்தோடு எங்கும் பரவச்செய்தவர் நம் ஜீவானந்தம் அவர்கள்.

கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டங்களில் முதல்முறையாகத் தமிழ் இலக்கியப் பெருமைகளைப் பேசி, தமிழ்க் கலாச்சாரத்தோடு கட்சியை வளர்த்தவர். அதுவரை இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியினர் என்றாலே பயங்கரவாதிகள் என்ற ஒரு பெயரே இருந்தது. அதை உடைத்தெறிந்தவர் தான் ஜீவா.

வள்ளுவன், கம்பன், பாரதி ஆகியோரின் இலக்கிய மணம் கமழ மேடையில் பேசும் அவர் சொற்பொழிவுப் பாங்கே அலாதியாக - நம்மைக் கவர்வதோடு இருக்கும்.

## ஜீவா நினைவு மண்டபம்

பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் நினைவாக நாகர்கோவிலில் உள்ள சி.பி.இராமசாமி பூங்காவின் மத்தியில் நூலகக் கட்டடத்தின் முன் 89.33 ச.மீட்டர் பரப்பில் 'ஜீவா நினைவு மண்டபம்' அமைக்கவும், நினைவு மண்டபத்தில் 'ஜீவாவின் மார்பளவுச் சிலை' அமைத்திடவும், 28.8.1996-ல் ஆணையிடப்பட்டு இதற்காக ரூ.15.50 இலட்சம் அரசு நிதி ஒப்பளிப்பு செய்து பொதுப்பணித்துறைக்கு வழங்கப்பட்டது.

பொதுப்பணித்துறைப் பொறியாளர்களின் சீரிய முயற்சியின் பயனாக, மிகக் குறைந்த காலக்கெடுவுக்குள், காண்பவர் கண்ணைக் கவரும் வண்ணம் மிகுந்த எழிலுடன், ஜீவா மணிமண்டபம் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் நினைவினைப் போற்றிடும் வகையில் தற்போது மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அரசால் அமைக்கப்பட்டுள்ள நினைவு மண்டபத்தில் திரு.ப.ஜீவானந்தம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை விளக்கும் புகைப்படங்கள், நூல்கள் அமைக்கப்படும்.

சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சியோடு சேருவதை எதிர்த்ததால், பெரியாரோடு கருத்துவேறுபாடு கொண்டு, சுயமரியாதை இயக்கத்தை விட்டு வெளியேறினார். பஞ்சாப் தந்த மாற்றுக் குறையாத தங்கம் பகத்சிங் தூக்கு மேடை ஏறுவதற்கு முன்னால் பேசிய பேச்சை - ஜீவா அவர்கள் 'நான் ஏன் நாத்திகனானேன்?' என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்து புத்தகமாக வெளியிட்டார். இந்த ஒரே காரணத்திற்காக ஆங்கிலேயப் போலீசார் அவரைப் பொள்ளாச்சி நகர வீதிகளிலே மிருகத்தை சங்கிலியால் கட்டி இழுத்துச்செல்வது போல, இழுத்துச் சென்று சிறையிலே அடைத்தனர்.

நாடு சுதந்திரம் அடைந்தபோது, கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டதால், சில ஆண்டுகள் தலைமறைவாக வாழ்ந்தார். பின்னர், 1952-ல் நடந்த தேர்தலில் வண்ணார்பேட்டைத் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

1952-ல் இருந்து 56 வரை தமிழகச் சட்டமன்றத்தில் அவர் பேசியபேச்சுக்கள் எல்லாம் புகழ் பெற்றவை; மறக்கமுடியாதவை. சட்டமன்றத்தில் அவர் பேசுகிறார் என்றால், சட்டமன்றத்திற்கு வெளியே நிற்பவர்கள் எல்லாம் கூட அவரது பேச்சைக் கேட்க உள்ளே வருவார்கள்.

பொதுவுடைமைக் கருத்தை வலியுறுத்தி நாடக மேடையில் பாடப்பட்ட அவரது புரட்சிகரமான பாடல்கள், தமிழகமெங்கும் வலம்வந்தன. அவர் பாடிய பாடல் பட்டி தொட்டிகளில் எல்லாம் பொதுவுடைமைக் கட்சி மேடைகளிலெல்லாம் ஒலித்தது. சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து, உற்றார், உறவினர்களை எல்லாம் மறந்து ஏழை-எளிய மக்களுக்காக உழைத்து, கடைசி வரையிலே கறைபடாத கரத்திற்குச் சொந்தக்காரராக வாழ்ந்த, தூய அரசியல் வாழ்க்கை வாழ்ந்து காட்டிய பெருமையாளர்தான் பொதுவுடமை வீரர் திரு. ப. ஜீவானந்தம் அவர்கள் என்பதில் இரண்டுவிதக் கருத்துக்கும் இடமேயில்லை.

**- தி. முருகேசன்**

# "எல்லோரும் ஒரே குலம், ஓரின மக்கள் என்ற நிலை வரப் பாடுபடுவோம்!"

ஒட்டப்பிடாரம் ஒன்றியம் கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் நினைவுக்குடியிருப்புகளைத் திறந்துவைத்தும், நலத்திட்ட உதவிகளை வழங்கியும் 18.4.98 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:



"இதயத்திற்கு இதம் தருகின்ற விழா ஒன்று மிகுந்த சீரோடும் சிறப்போடும் எழுச்சியோடும் எழிலோடும் இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த வட்டாரத்தில் 1972-க்குப் பிறகு மணலி கந்தசாமி அவர்களோடும், சுப்பு அவர்களோடும் வந்து வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவை நடத்தி, அன்று வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்று வீரபாண்டிய கட்டபொம்மனுடைய - இடிந்து அழிந்து மண்மூடிப்போன பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைப் புதுப்பிப்பேன் என்று உறுதி அளித்து அந்த உறுதியை நிறைவேற்றுகின்ற வகையிலே கோட்டைக் கொத்தளத்தை அமைத்து வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு அன்றைக்குத் தோளோடு தோள் நின்று துணைபுரிந்து விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்ட தளபதிகளுக்கெல்லாம் நினைவுச் சின்னங்கள் அமைத்து அப்படி அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களிலே ஒன்றாக வீரன் சுந்தரலிங்கத்தின் தோரணவாயிலை அப்பொழுதே அமைத்தவன் நான் என்கின்ற முறையில் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

### நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.சார்பில் நின்றவர் டாக்டர் கிருஷ்ணசாமி

இங்கே நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் - முன்னிலை ஏற்றுள்ள டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சுந்தரலிங்கத்தை நான் எப்பொழுதெல்லாம் நினைவு படுத்தியிருக்கிறேன் என்பதை எடுத்துச்சொன்னார். நான் எழுதிய நூலிலிருந்து அவர் எதை எடுத்து குறித்துக்கொண்டு வந்திருக்கிறாரோ அதையேதான் நானும் குறித்துக்கொண்டு வந்திருக்கிறேன். இதிலிருந்து எங்களுக்குள்ள் ஒற்றுமையை நீங்கள் புரிந்துகொள்ளலாம். ஏனென்றால் 14 ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணசாமி அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பொள்ளாச்சியில் நின்றவர் என்பதை ஞாபகப்படுத்தினால் இந்தக்கருத்து ஒற்றுமை எப்படி வந்தது என்பதை நீங்கள் எல்லாம் புரிந்துகொள்ளலாம்.

ஒரு 15 ஆண்டுக்கு முன்பு நான் 'குங்குமம்' இதழில் "பாயும்புலி பண்டாரக வன்னியன்"' என்ற ஒரு தொடர் ஓவியத்தைத் தீட்டினேன். அந்தத் தொடர் ஓவியத்தினுடைய முதல் அத்தியாயமே வீரன் சுந்தரலிங்கத்தை அறிமுகப்படுத்துகின்ற அத்தியாயமாகத்தான் அமைந்திருக்கிறது. உங்களில் பலபேர் அதைப் படித்திருக்க முடியாது. ஆனால் 15 ஆண்டுகளுக்கு முன்பே நினைவூட்டியவன் நான் என்ற முறையில் அதை இப்பொழுது உங்களுக்கு நினைவுபடுத்துகின்றேன். அதைத்தான் இங்கே கிருஷ்ணசாமியும் உங்களுக்கு நினைவுபடுத்தினார். அதிலே குறிப்பிட்டிருக்கின்றேன். அதைக் கிருஷ்ணசாமி படிக்கும்பொழுது நீங்கள் சற்று அமைதியில்லாமல் ஆனந்தப் பரவசத்தில் உங்களையும் மறந்து உணர்ச்சி வசப்பட்டு முழக்கம் செய்துகொண்டிருந்த காரணத்தினால் - நான் என்ன எழுதினேன், அவர் என்ன படித்தார் என்பதை உங்களில் பலபேர் காது கொடுத்துக் கேட்கவில்லை. எனவே, நானே அதைப் படிக்கிறேன்.



வீரன் சுந்தரலிங்கம்

### பாஞ்சாலங்குறிச்சிச் சிங்கங்கள்

"வீரபாண்டிய கட்டபொம்மனின் அன்புக்குரிய தளபதி வெள்ளையத்தேவனுக்கு உற்ற நண்பனும் அவனையொத்த வீரனுமான சுந்தரலிங்கம் பாஞ்சாலங்குறிச்சி படைமுகத்துச் சிங்கங்களிலே ஒருவன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்து இந்தத் தமிழ் மண்ணை அந்நியர் ஆக்கிரமிக்கக் கூடாது என்பதற்காகத் தடந்தோள் தட்டிய பெருவீரன் சுந்தரலிங்கம்".

- இது பாயும்புலி பண்டாரக வன்னியன் புத்தகத்தில் 13-வது பக்கத்திலே இடம் பெற்றிருக்கிறது.

மேலும் சொல்லுகின்றேன், "தேவர் குலத்தில் உதித்த வெள்ளைத்தேவனும், தேவேந்திரகுலத்தில் உதித்த இந்தச் சுந்தரலிங்கக் குடும்பனும் கூடப்பிறக்காத குறையொன்றே தவிர, இருவரும் இணைபிரியாத சகோதரர்கள்".

- இதையும் 36-வது பக்கத்திலே பாயும்புலி பண்டாரக வன்னியன் புத்தகத்திலே குறிப்பிட்டிருக்கின்றேன்.

மேலும் "பாண்டிய மண்ணின் உரிமைக்காக வீரப்போரிட்ட வெட்டும் பெருமாளின் பரம்பரையில் வந்தவர் இந்தச் சுந்தரலிங்கக் குடும்பன்" என்பதையும் அந்த நூலின் 17-வது பக்கத்திலே நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

200 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் வெள்ளையனை எதிர்த்த விடுதலைப் போராட்டத்தில் தளநாயகனாக, முன்னோடியாக விளங்கிய வீரன் சுந்தரலிங்கம். அவருடைய சொந்த ஊரைத் 'தென்னகத்தின் ஜிப்ரால்டர்' என்று வெள்ளையர்கள் வர்ணித்தார்கள். அத்தகைய பெருமைக்குரியவர்களிலே ஒருவர் சுந்தரலிங்கம். பாஞ்சாலங்குறிச்சி மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மனின் ஒற்றர்படைத் தளபதியாக அவர் பணியாற்றினார் என்று வரலாற்றுக் குறிப்புகள் சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கின்றன.

அந்தக் காலத்தில் அரசு கெஜட்டில் இந்த ஊரின் பெயர் 'கெவுணகிரி' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எப்படி கவர்னகிரியாக மாறிற்று? என்பதை நான் ஆச்சரியத்தோடு பார்க்கவில்லை. இப்படிப் பல பெயர்கள் மொழி மாற்றம் - பெயர் மாற்றம் பெற்றிருக்கின்றன. வெள்ளைக்காரக் கவர்னர் வந்து அடிக்கடி தங்குகிற காரணத்தால் இது போகப்போகச் சில ஆண்டுகளுக்குப் பிறகு கவர்னகிரி என்று ஆகி, பிறகு பேச்சு வழக்கத்தில் கவர்னகிரி என்று ஆயிற்று. வேறொரு உதாரணம் கூறுகிறேன். சென்னை மாநகரத்தில் ஒரு வெள்ளைக்காரருடைய பெயரால் மயிலாப்பூர் பகுதியில் ஒரு பாலம்; அந்த பாலத்திற்குப் வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்தில் ஹேமில்டன் பிரிட்ஜ் என்று பெயர் இருந்தது. அந்த பிரிட்ஜின் பெயர் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து தேய்ந்து கடைசியாக "அம்பட்டன் பிரிட்ஜ்' (மன்னிக்க வேண்டும் அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்) என்றாகிவிட்டது. அந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது என்ற கொடுமையைச் சொல்வதற்காகச் சொல்கின்றேன். அம்பட்டன் பிரிட்ஜ் என்றாகி அதற்குச் சரியான மொழியெர்ப்பாக அதை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து பார்பர்ஸ் பிரிட்ஜ் என்றே ஆக்கிவிட்டார்கள்.

ஹேமில்ட்டன் என்ற வெள்ளைக்காரத் துரையின் பெயர் கடைசியாக பார்பர்ஸ் பிரிட்ஜ் என்கின்ற அளவுக்கு மாறிற்று. அதேபோல்தான் கவர்னர் அடிக்கடி தங்கிய காரணத்தினால் இது கவர்னகிரியாக இருந்து, காலப்போக்கில் கெவுணகிரியாக ஆயிற்று. இந்த கவர்னகிரியை சார்ந்த கட்டகருப்பன்-முத்து தம்பதியரின் மகன்தான் சுந்தரலிங்கம். இளம் வயதிலேயே வீரத்தின் விளைநிலமாய், எடுத்த காரியத்தை முடிக்கின்ற ஆற்றல் வாய்ந்தவனாய் விளங்கிய காரணத்தினால் கட்டபொம்மன் சுந்தரலிங்கத்தைத் தன்னுடைய ஒற்றர்படைத் தளபதியாகவே நியமித்துக்கொண்டார் என்று வரலாறு கூறுகிறது.

வெள்ளையருடைய ஆதிக்கம் மெல்லமெல்லப் பரவி கட்டபொம்மனுடைய வீரர்களையும் அவருடைய கோட்டையையும் அவர் குறிப்பிட்டதைப் போல இந்தப் பகுதி மக்களையும் சுற்றி வளைத்துக்கொண்டு அந்தக் கோட்டையையே கைப்பற்றுவது என்கின்ற முடிவெடுத்து அதற்கான ஆயத்தங்களை வெள்ளைக்கார துரைமார்கள் செய்துகொண்டிருந்த நேரத்தில் கட்டபொம்மனிடத்திலே இல்லாத ஆயுதங்கள் போர்க்கருவிகள், பீரங்கிகள் இவைகளையெல்லாம் கோட்டையைச் சுற்றிவளைத்து அதைப் பிடிப்பது என்ற இறுதியான முடிவுக்கு வந்த காலக்கட்டத்தில் அன்றைக்கு வெள்ளையத்தேவன் ஒரு திருமணத்திற்காக வெளியூர் சென்றிருக்க இப்படி வெள்ளைக்காரர்கள் கோட்டையை முற்றுகையிட்டு அதைத் தூள்தூளாகப் பிளக்கப் போகிறார்கள் என்ற செய்தி சுந்தரலிங்கத்தின் காதில் விழுகிறது.

### தியாகப் பிழம்பான சுந்தரலிங்கம் - வடிவு

சுந்தரலிங்கத்திற்கு ஒரு முறைப்பெண்; வடிவு என்று அந்தப் பெண்ணுக்குப் பெயர். இருவரும் எப்படி வெள்ளைக்காரர்களுடைய சூழ்ச்சியை முறியடிப்பது என்று திட்டமிட்டார்கள். இரண்டு பேருமே





ஆடுமேய்ப்பவர்களைப்போல வேடம் போட்டுக்கொண்டு வெள்ளைக்காரர்கள் பதுக்கி வைத்திருந்த வெடிமருந்துகளைக் கொண்டுதான் கட்டபொம்மன் கோட்டையைத் தகர்ப்பது என்று அன்றைக்கு அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். அந்த வெடிமருந்துகளையே பயனற்றதாகச் செய்துவிட்டால் கோட்டை தப்பும் அல்லவா என்று எண்ணிய சுந்தரலிங்கத்தினுடைய முறைப்பெண் வடிவும் சுந்தரலிங்கமும் திட்டமிட்டு, இருவரும் அந்த வெடிமருந்துச் சாலைக்குள்ளேயே தீப்பந்தத்தை கட்டிக்கொண்டு உள்ளே சென்று அங்கிருந்த வெடிமருந்துகளை எல்லாம் வெடிக்கச் செய்து அழித்து முடித்து தாங்களும் அந்த வெடிமருந்துக்குள்ளே வெடிமருந்தாக மாறி மறைந்தார்கள், தியாகப் பிழம்புகளாக ஆனார்கள், சுந்தரலிங்கமும் வடிவு என்கின்ற அந்த முறைப்பெண்ணும்.இப்படித்தங்களையே வெடிமருந்துக்கு தீக்கு இரையாக்கிக் கொண்டு அன்றைக்கே - இன்றைக்குச் சொல்வார்கள் தற்கொலைப்படை தற்கொலைப்படை என்று - அன்றைக்கே வெள்ளையர்களை எதிர்த்து வீரபாண்டிய கட்டபொம்மன் தலைமையில் தற்கொலைப்படையின் தளநாயகனாக விளங்கியவன் சுந்தரலிங்கம் என்பதை எண்ணுகிற நேரத்தில் நாம் பெருமை அடைகிறோம்.

ஆனால் இந்தத் தற்கொலைப் படை எல்லாம், இந்த வீரதீரச் செயல்கள் எல்லாம் அன்றைக்குத் தேவைப்பட்டது. வெள்ளைக்காரர் பீரங்கியோடு வந்த நேரத்திலே, அவன் படை எடுத்து வந்த நேரத்தில் எதிர்க்க இவைகள் எல்லாம் தேவைப்பட்டது. ஆனால் கால மாற்றத்தால் வெள்ளைக்காரனை எதிர்க்க உத்தமர் காந்தியடிகள் அகிம்சையையே தன் ஆயுதமாகக் கொண்டார். அகிம்சையையே தன் ஆயுதமாகக் கொண்டு குமரி முதல் இமயக்கோட்டம் வரையுள்ள இந்திய நாட்டின் மக்களையும் திரட்டி அவருடைய தலைமையிலே நடைபெற்ற அந்தச் சுதந்திரப் போராட்டத்தின் காரணமாகத்தான் வெள்ளையர்கள் வெளியேறினார்கள்.

**'மண்ணுக்குக் கிடைத்த சுதந்திரம்**
**மக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை'**

வெள்ளையர்கள் வெளியேறினாலும்கூட,நாடு சுதந்திரம் பெற்றாலும்கூட,மண்ணுக்குத்தான் சுதந்திரம் கிடைத்ததே தவிர மக்களுக்கு முழுமையான சுதந்திரம் கிடைக்கவில்லை. அதை இன்றைக்கும் நாம் காண்கிறோம். அந்த சுதந்திரத்தைப் பெறத்தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அண்ணல் அம்பேத்கர் போன்ற தலைவர்கள் எல்லாம் பாடுபட்டார்கள். இன்றைக்கும் அவர்கள் வழிநின்று நாம் பாடுபட்டுக்கொண்டு இருக்கிறோம்.

அப்படி பாடுபடுகின்ற நேரத்தில் இங்கே இன்றைக்குக் கட்டப்பட்டு இருக்கின்ற 200 வீடுகளை யாரும் பெரிதாக எண்ணிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால், இன்றைக்குத் தமிழகத்திலே இதேபோன்ற வீடுகள் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும்,எந்தத்தொகுதிக்குச் சென்றாலும் 200, 300 வீடுகள் இருக்கின்றதென்றால் அதற்குக் காரணம் நான் பெருமிதத்தோடு சொல்லவில்லை - பெருமையோடு சொல்லவில்லை. இங்கே அமைச்சர் கோ.சி.மணி அவர்கள் குறிப்பிட்டது போல ஆதிதிராவிடர் பெருங்குடி மக்களுக்கு இலவசமாகக் காங்கிரீட் வீடுகளை, கட்டித்தரவேண்டும் என்ற திட்டத்தை முதன்முதலாக உருவாக்கியது - இந்தியாவிலேயே முதன்முதலாக நிறைவேற்றிக்காட்டியது, உங்கள் முன்னால் நின்றுகொண்டு இருக்கிற இந்தக் **கருணாநிதிதான்** என்பதை ஞாபகப்படுத்துகின்றேன்.

ஒருமுறை இப்படிப்பட்ட வீடுகள் திறப்பு விழாவில் அம்மையார் சத்தியவாணிமுத்து அவர்கள், அரிசனத்துறை அமைச்சராக அன்று இருந்தார்கள் - அப்போது எல்லாம் அந்தத் துறைக்கு அரிசன நலத்துறை என்று பெயர் - அந்தத் துறைக்கு அமைச்சராக இருந்தார்கள். இதுபோன்ற 100 வீடுகளை ஒரு இடத்திலேயே கட்டி முடித்து அதைத் திறந்துவைக்கும்பொழுது அவர் குறிப்பிட்டார். அவர்களும் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். இருந்தாலும் ஆதங்கத்தோடு சொன்னார்கள் - "நீங்கள் இந்த வீடுகளை எல்லாம் கட்டினீர்கள். எங்களுடைய மக்கள் நன்றியோடு இருப்பார்களா?" என்று கேட்டார்.

**அப்பொழுது நான் பேசும்பொழுது சொன்னேன். 'அம்மா' நான் பெரியாருடைய தொண்டன்; பெரியாருடைய பொன்மொழி என்ன தெரியுமா? 'நன்றியை எதிர்பார்த்து கடமையைச் செய்யாதே. நன்றி வருகிறதோ இல்லையோ - நன்றி காட்டுகிறார்களோ இல்லையோ உன்னுடைய கடமையைச் செய்துகொண்டு இரு'. இதுதான் பெரியாருடைய பொன்மொழி. எனவே, எனது கடமையைச் செய்கிறேன். நீங்கள் நன்றி சொல்வார்களா என்று கேட்டீர்கள். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. சில இடங்களில் நான் கட்டித் தந்த வீடுகளில் 'கருணாநிதி வாழ்க' என்று எழுதுகிறார்கள்.**

சில வீடுகளின் சுவர்களில் 'கருணாநிதி ஒழிக' என்று எழுதுகிறார்கள் என்று சொன்னீர்கள். பரவாயில்லை, ஒழிக என்று எழுதினாலும், வாழ்க என்று எழுதினாலும், என்னுடைய பெயரை மறக்காமல் கருணாநிதி என்று எழுதுகிறார்களே அதுபோதும் எனக்கு" என்று நான் சொன்னேன்.

எனவே, பிற்படுத்தப்பட்ட மக்களானாலும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களானாலும், தாழ்த்தப்பட்ட மக்களானாலும், இன்றைக்கு அடித்தளத்தில் இருக்கின்ற மக்களானாலும் அவர்கள் இன்றும் பல செய்திகளைப் புரிந்துகொள்ள முடியாத சூழ்நிலையில் இருளில் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ஒளி ஏற்றவேண்டும். அவர்களுடைய உள்ளத்திற்கு எல்லாம் வெளிச்சம் தரவேண்டும். நாம் யார் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கும்பொழுது எல்லாம் ஒரே குலம்; எல்லோரும் ஓரின மக்கள்! என்ற உணர்வை நாம் ஏற்படுத்தி ஆகவேண்டும். அவர்கள் ஆதிக்கச் சமுதாயம் என்று நம்மால் அடையாளம் காட்டப்பட்டாலும் அல்லது அடித்தளத்து மக்கள் என்று நம்மால் அடையாளம் காட்டப்பட்டாலும் இருசாராரும், இரு பிரிவினரும் ஒருங்கிணைந்து ஒன்றாகத் தோள்மீது தோள் கைபோட்டுக் கொண்டு தோழர்களாக, சகோதரர்களாக வாழவேண்டும்.

இந்தச் சரித்திரம் என்ன சொல்கிறது. சுந்தரலிங்கத்தினுடைய வரலாறு என்ன சொல்கிறது. வெள்ளையத்தேவனும் சுந்தரலிங்கமும் ஒரே படையிலே கைகுலுக்கிக் கொண்டு ஒருவர் தோளில் ஒருவர் கைபோட்டுக் கொண்டு படை நடத்திய பெரும் வீரர்கள். ஏன் இன்றைக்கு அந்த நிலை மாறி இருக்கிறது? மாறிய நிலையை வரலாற்றுச் சான்றுகளோடு எடுத்துச் சொல்லி, மீண்டும் அந்த பழையநிலையைக் கொண்டுவரவேண்டும் என்பதுதான் நோக்கமே தவிர, வேறல்ல.

குறிப்பாக, பழைய வீரர்களை, பழைய காலத் தியாகிகளை நினைவுபடுத்துவது நம்முடைய மிகப்பெரும் பொறுப்பாகும். இங்கு கிருஷ்ணசாமி பேசும்பொழுது சொன்னார். "சுதந்திரம் பெற்ற 50 ஆண்டுகாலத்தில் இவர்களையெல்லம் யாராவது நினைத்தார்களா? என்றார். நினைத்தார்களா என்று கேட்டவர், "இவர் ஒருவர்தான் நினைத்து இருக்கிறார்'' என்று என்னை சுட்டிக்காட்டுவார் என்று எண்ணினேன். சொல்லாமலே, நீங்களே தெரிந்துகொள்வீர்கள் என்பதற்காகச் சுட்டிக்காட்டாமல் விட்டுவிட்டார் என்று நான் புரிந்துகொள்கின்றேன்.

ஏனென்றால், நான் ஒரு காலத்திலே அவருக்குத் தலைவராக இருந்தவன்தான். அவரைப் பலமுறை தம்பி என்று அழைத்திருக்கின்றேன். இன்றைக்கும் அழைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தலைவராக இருந்தபொழுதுதான் அவர் பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக நின்றார். அவருக்காகப் பல கூட்டங்களில் பேசி வாக்குச் சேகரித்த அந்த வாய்ப்பையும் பெற்றவன் நான். எனவே இங்கே சீற்றத்தோடு பேசினார் என்றால், ஒரு புயல் போல உறுமினார் என்றால், ஒரு சிங்கம் போலக் கர்ச்சித்தார் என்றால், நான் எண்ணிக் கொள்கிறேன். இதற்கு எல்லாம் காரணம், அடித்தளம் தி.மு.கழகத்திலே அவர் இருந்ததினால் அல்லவா என்று எண்ணிப் பெருமை அடைகின்றேன். மகன் போர்க்களத்திலே புகழ் பெறுகிற நேரத்தில்தான் தாய் தன்னுடைய வயிற்றைத் தடவிப் பார்த்துக் கொள்வதைப் போல, நான் தடவிப் பார்த்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு மகனைப் பெற்றோமே என்கிற அளவில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மகிழ்ச்சியிலே உங்களோடு நானும் பங்கு கொள்கிறேன்.

- இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

## திட்டத்தின் விவரம்

தமிழக முதல்வரின் கனவுத் திட்டம் என்ற அளவுக்கு உள்ள இத்திட்டத்திற்காக அகிலாண்டபுரம் பஞ்சாயத்திற்கு உள்பட்ட சுமார் 10 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு கடந்த 23.6.97ல் பணிகள் தொடங்கப்பட்டன. அப்போது அரசு முதல் கட்டமாக ரூ.59.6 இலட்சம் நிதியை ஒதுக்கியது. பின்னர் 27.8.97 - ல் ரூ.16 இலட்சத்தையும் 25.9.97ல் ரூ.28.84 இலட்சத்தையும் ஒதுக்கியது.

இது தவிர பள்ளிக்கட்டடம் கட்ட ரூ. 4 இலட்சத்தையும் தனியாக ஒதுக்கியது.

பதினோழம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரலிங்கத்தின் வாரிசுகள் 200 பேருக்கும் வீடுகள் வழங்கப் படுகின்றன.

ஒவ்வொரு வீடும் ரூ.35,000 செலவில் மொத்தம் ரூ.70 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளன. இந்த வீடுகளுக்கு ரூ.4 இலட்சம் செலவில் 30,000 லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது.

மேலும் ரூ.7.30 இலட்சம் செலவில் 1,433 மீட்டர் நீளத்திற்கு கல் மற்றும் தார்ச் சாலை, 1,433 மீட்டர் நீளத்திற்கு மண் மற்றும் சரளைச் சாலை, ரூ.2.8 இலட்சம் செலவில் 4 குழாய் பாலங்கள், ரூ.16.74 இலட்சம் செலவில் வடிகால் வசதி, ரூ.10,000 செலவில் சிறுவர்கள் விளையாட பூங்கா, ரூ.75,000 செலவில் 20 தெரு விளக்குகள், ரூ. 4 இலட்சம் செலவில் இரண்டு வகுப்பறைகள் மற்றும் கழிப்பறை வசதியுடன் பள்ளிக் கட்டடம், ரூ. 3 இலட்சம் செலவில் படிப்பக அறை மற்றும் கழிப்பறை வசதியுடன் சமுதாயக்கூடம் என அனைத்து வசதிகளுடன் இந்தக் கிராமம் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கிராமத்தின் நுழைவு வாயிலில் சுந்தரலிங்கத்தின் பெயரைத் தாங்கி நிற்கும் தோரணவாயிலும் ரூ.1 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு வசிக்கும் மக்களுக்காக பயணிகள் நிழற் குடையும் அமைக்கப் பட்டுள்ளது. இது தவிர, தனி மின்மாற்றியும் உள்ளது.

பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுக் கோட்டையிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ள இந்த இடம் ஒரு நவீன கிராமம் போல் காட்சியளிக்கிறது. ★

★ 2000-ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் கல்வி

★ வரும் கல்வி ஆண்டில் 300 சிற்றூர்களில் புதிய தொடக்கப் பள்ளிகள்

★ 200 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்

★ அனைத்து ஓராசிரியர் பள்ளிகளிலும் குறைந்தது இரு ஆசிரியர்களை நியமிக்க அரசு முடிவு

## கல்வி மான்யக் கொள்கைக் குறிப்பில் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்கள் அறிவிப்பு

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் 15.4.98 அன்று சட்டப் பேரவையில் தாக்கல் செய்த கல்வி மான்யக் கோரிக்கை வருமாறு:

தமிழகத்திலுள்ள 5.59 கோடி மக்களில் (1991 மக்கட் கணக்கெடுப்பு) 1.80 கோடி பேர் கல்வியறிவு பெறாதவர்கள். இவர்களுள் பெண்கள் 64 சதவிகிதத்தினர், ஆதிதிராவிடர் வகுப்பினரில் 65 சதவிகிதத்தினர் கல்வி அறிவு பெறாதவர். மலைவாழ் மக்களில் 79 சதவிகிதத்தினர் கல்வி கற்காதவர்கள். கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை விரைந்து பெருகச் செய்வது துறையின் தலையாய குறிக்கோள் ஆகும்.

அனைத்துப் பிரிவினருக்கும் அவரவர் நிலைமைக்கு ஏற்ற வழியில் கல்வி கற்பிக்கும் அமைப்பை உருவாக்கும் பணியில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

தற்போது தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரித்து, விடுபட்டுள்ள சிற்றூர்களில் அடிப்படைக் கல்வி வசதி ஏற்படுத்துவதும் - தமிழகத்தில் அமைந்துள்ள பல நிலையிலுள்ள கல்விச் சாலைகளிலும் அமைந்துள்ள உள்கட்டமைப்பையும் (infrastructure) சூழ்நிலையையும் மேம்படுத்தி; பள்ளி மாணவர்களுக்கு, கற்பதை விரும்பி ஏற்கும் இனிமையான பட்டறிவாக்கி, மேலும் தொடராது இடைநிற்றலைக் குறைப்பதும், ஏற்கெனவே உருவாக்கப்பட்ட கல்வி கட்டமைப்பில் கல்வி பெறாமல் விடுபட்ட மக்களிடையே கல்வியறிவை வளர்ப்பதும், இத்துறையின் தொலைநோக்குக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக இருக்கும்.

### 1998-99 ஆம் ஆண்டின் சிறப்புகள்

தொலைநோக்குக் கொள்கைக்கு வடிவம் கொடுக்கும் வகையில் 9-வது ஐந்தாண்டுத் திட்டம் இவ்வாண்டு தீட்டப்பட்டுள்ளது. அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டுமென்ற கொள்கையைச் செயல்படுத்த புதிய தொடக்கக் கல்விப் பள்ளிகள் தொடங்கவும், தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தவும் திட்டங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொலை நோக்குக் கொள்கையைச் செயல்படுத்த பல்வேறு இயல்பான நடவடிக்கைக்கு மேலாக, முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை முடிவுகளையும் நடவடிக்கைகளையும் இவ்வாண்டு இத்துறை மேற்கொண்டுள்ளது.

### புதிய பள்ளிகள்

அகில இந்தியக் கல்வி ஆய்வுப் புள்ளி விவர அடிப்படையில், தமிழகத்தில் சுமார் 700 கிராமங்களில் இன்னமும் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் தொடக்கப் பள்ளிகள் வசதிகள் ஏற்படுத்தப் படவில்லையெனக் கணக்கிடப் பட்டுள்ளது. அதன்படி 1998-99ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 300 சிற்றூர்களில் புதிய பள்ளிகள் தொடங்கப்படும்.



நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் கற்பிக்கும் திறனை உயர்த்த அறிவியல், கணிதம் போன்ற பாடங்களைக் கற்பிக்க பட்டதாரி ஆசிரியர்களைப் படிப்படியாக நியமிக்கவும் முடிவு செய்யப் பட்டுள்ளது.

### வகுப்பறைகள்

பள்ளிக் கல்வியைப் பொருத்த வரையில் சிறந்த முறையில் கற்பிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க போதிய வகுப்பறைகள் கட்டுதல், அறிவியல் கூடங்கள் கட்டுதல், குடிநீர் வசதி அளித்தல், குறிப்பாக மாணவிகளுக்குக் கழிப்பிடங்கள் அமைத்தல், விளையாட்டு மைதானங்கள் உருவாக்குதல், நூலக வசதி ஏற்படுத்தித் தருதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள இவ்வாண்டு கூடுதலான முயற்சிகள் எடுக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

பள்ளிக் கல்வியை முடித்துவிட்டு வெளியே வரும் மாணவர்கள் பயனுள்ள வகையில் வேலை வாய்ப்புகளைத் தேடிக்கொள்ளவும், சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ளவும், அவர்களுடைய திறன்களை வளர்க்கத் தொழிற் கல்வித் திட்டத்தில் தகுந்த முயற்சி எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பல வகைப்பட்ட தொழிற் திறன்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குத் திட்ட வரைவு



தயாரிக்கவும், கணினி பாடத் திட்டப் பயிற்சியை விரிவுபடுத்தவும் இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

**தொடக்கக் கல்வி**

1997-98ஆம் கல்வியாண்டில் 168 புதிய தொடக்கப் பள்ளிகள் துவக்கவும், 41 தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தவும் அரசு இசைவளித்தது. இவை அனைத்தும் செயல்படத் தொடங்கி யுள்ளன. இதன் தொடர்ச்சியாக, இளம் மாணவர்கள் பள்ளிக்கு எளிதில் சென்றடையும் வகையில் 1998-99ஆம் ஆண்டு 300 தொடக்கப் பள்ளிகள் துவக்கவும், 200 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தவும் அரசு தீர்மானித்துள்ளது.

தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் பிள்ளைகளின் நலனுக்காக, பள்ளிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர அரசு கீழ்க்காணும் திட்டங்களைச் செயற்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது.

**ஆசிரியர்கள் நியமனம்**

தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்களை நியமிக்கப் புதிய நெறிமுறைகளை அரசு வகுத்துள்ளது. அனைத்துத் தொடக்கப் பள்ளி களிலும் குறைந்தது இரு ஆசிரியர் நியமிக்க அரசு முடிவெடுத்துள்ளது. இவ்வாண்டு முதல் இது செயல் படுத்தப்படும். இதனால் 1385 ஓராசிரியர் பள்ளிகளில் கூடுதல் ஆசிரியர் நியமிக்கப்படுவர்.

**இலவசப் பாடப் புத்தகங்கள்**

பள்ளிகளில் தொடர்ந்து படிக்க ஊக்க உதவியாக முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தில் பயனடை வோருக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை இவ்வாண்டு முதல், ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது. இப்புத்தகங்கள் கல்வியாண்டு தொடக்கத்திலேயே வழங்கப்படும்.

**கழிப்பிட வசதிகள்**

கிராமப்புறத் துப்புரவுத் திட்டத்தின் கீழ், தொடக்க, நடுநிலைப்பள்ளிகளில் குறிப்பாகப் பெண்கள் பயிலும் பள்ளிகளில் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், கல்வியின் தரத்தை மேம்படுத்த நான்கைந்து ஆண்டுகளாகக் காலியாக இருந்த 20544 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. மாவட்ட வேலைவாய்ப்பகப் பதிவு மூப்பின் அடிப்படையில் மட்டுமே இனவாரி சுழற்சி முறை கடைப் பிடிக்கப்பட்டு நியமனம் செய்யப் பட்டது. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்பெறும் பயிற்சியில் கலந்து வெற்றிபெறும் தகுதி வாய்ந்த பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர்கள் 173 பேரை இடைநிலை ஆசிரியர் ஊதிய விகிதத்தில் கொணர்ந்து ஆணையிடப் பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் பிரிவினைச் சேர்ந்த இடைநிலை ஆசிரியர் போதிய எண்ணிக்கையில் இல்லாத காரணத்தால் 1996-97ஆம் ஆண்டு நிரப்பப்படாத 1,340 பணியிடங்கள் பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்பட்டன். இவர்களுக்கு மழலையர்களுக்குப் பாடங்களைக் கற்பிப்பதற்காகச் சிறப்புப் பயிற்சியும், ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தால் அளிக்கப்பட்டது. இவ்வாறே 1997-98ஆம் ஆண்டும் 1152 பதவிகளை நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தொடக்கக் கல்வி நிர்வாகத்தை வலுப்படுத்தும் முக்கியப்படியாக உயர்நிலை வகுப்புகளுக்குரிய பட்டதாரி ஆசிரியர் தரத்தில் பணியாற்றி வந்த அனைத்து உதவிக் கல்வி அலுவலர் பணியிடங்களாக, மாற்றி ஏற்கெனவே பி.எட். தகுதியுடன் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமையாசிரியர்களை நியமனம் செய்துள்ளது.

முதல் - இரண்டாம் வகுப்பு களுக்கான மாணவர்களுக்கு முதன் முறையாகப் பயிற்சிப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை படிப் படியாக அனைத்து வகுப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**ஆசிரியர்கள் கையேடுகள்**

1998-99ஆம் ஆண்டு முதல்கட்ட மாவட்டங்களின் திட்டத்திற்காக ரூ.27.38 கோடியும், இரண்டாம் கட்ட மாவட்டங்களின் திட்டத்திற்காக ரூ.9.09 கோடியும் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்ட திட்டத்தில் பள்ளிகளுக்கு வசதிகள் மேம்படுத்தல், பயிற்சிப் புத்தகங்கள் - ஆசிரியர்கள் கையேடு தயாரித்தல் மற்றும் ஆசிரியர் பயிற்சி தொடரப் படும். பெரம்பலூர் மாவட்டத்தில் புதிய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களைப் போன்று இங்கும் ஆசிரியர் பயிற்சி தொடங்கும்.

**உயர்நிலைப் பள்ளிகள்**

1998-99ஆம் ஆண்டில் 80 ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட உள்ளன. அரசு கொள்கையின்படி ஊரக வளர்ச்சியை முதன்மை நோக்கமாகக் கொண்டு கிராமப் புறங்களில் புதிய அரசு உயர்நிலைப் பள்ளிகள் திறக்க அனுமதி வழங்கப் படுகிறது. கிராமப் பகுதிகளில் 60 நடுநிலைப் பள்ளிகளும், நகர்ப் பகுதிகளில் 20 நடுநிலைப் பள்ளிகளும் நிலை உயர்த்தப்படும்.

**மேல்நிலைப் பள்ளிகள்**

1998-99ஆம் ஆண்டில் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் 40 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கிராமப் புறங்களில் 30 உயர்நிலைப் பள்ளிகளும், நகர்ப் புறங்களில் 10 உயர்நிலைப் பள்ளிகளும் நிலை உயர்த்தப்படும்.

### அறிவியல் கல்வி முன்னேற்றம்

1998-99ஆம் ஆண்டிலும், இதேபோன்று 200 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 1998-99ஆம் ஆண்டில் நிலை உயர்த்தப்பட உள்ள 40 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ரூ.100 இலட்சம் செலவில் அறிவியல் உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது. இதேபோன்று, 119 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வகம் கட்டுவதற்காக 1997-98ஆம் ஆண்டில் அரசு ரூ.10 கோடி அனுமதித்துள்ளது. 1998-99ஆம் ஆண்டில் 250 பள்ளிகளுக்கும் ஆய்வகக் கட்டடங்கள் கட்டப்படும். இதற்கு ரூ.20 கோடிக்கு அனுமதி வழங்கப்படும்.

மாணவர்களின் இன்றையக் கல்வித் திட்டத்திற்கேற்ப மேம்படுத்திக் கொள்ளவும், கணிப்பொறித் துறையில் அதிகமாக வேலைவாய்ப்புகளைப் - பெறவும் முதற்கட்டமாக 1998-99ஆம் ஆண்டு 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.352.08 இலட்சம் செலவில் கணிப்பொறி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### பள்ளி நூலக வசதி

முதற்கட்டமாக 1998-99ஆம் ஆண்டில் 200 அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.25,000 வீதம் (அரசு பங்கு மட்டும்) ரூ.50 இலட்சம் செலவில் நூலகப் புத்தகங்கள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.50 இலட்சம் இணைமான்யமாகப் பொதுமக்கள் நன்கொடை மூலம் பெறப்பட்டு நூலகப் புத்தகங்கள் வாங்கப்படும்.

### மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகங்கள்

பள்ளிகளில் தரமான கல்வி அளிக்க வேண்டுமெனறால் ஆய்வு அலுவலர்கள் கட்டமைப்பை மேம்படுத்துவது மிகவும் இன்றியமை யாததாகும். இதைக் கருத்திற்கொண்டு 1997-98ஆம் ஆண்டில் கீழ்க்குறிப் பிட்டுள்ள நான்கு புதிய வருவாய் மாவட்டத் தலைமையிடங்களில், முதன்மைக் கல்வி அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் செயல்பாடுகளைத் திறன்படுத்த, இவ்வாண்டு 8 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு அறிவியல் ஆய்வுக்கூடக் கருவிகள், நூலகப் புத்தகங்கள், விளையாட்டுக் கருவிகள் ஆகியன ரூ.4 இலட்சம் செலவில் வழங்கப்படவுள்ளது. கல்வித்தரத்தை மேம்படுத்துதல் சார்ந்து ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இவ்வாண்டு ரூ.1.10 இலட்சம் செலவில் பணியிடைப் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முழு எழுத்தறிவுத் திட்டம் மற்றும் அறிவொளி தொடர்கல்வித் திட்டத்தின் தொடர்ச்சியாகத் தொடர் கல்வி மையங்கள் தமிழகத்தில் 9 மாவட்டங்களில் செயல்பட இருக்கின்றன. அறிவொளி மற்றும் தொடர்கல்வி இயக்கங்களின் மூலம் எழுத்தறிவு பெற்றவர்கள் தொடர்ந்து கற்றதை நிலை நிறுத்திக்கொள்ள, கிராம நூலகங்கள், மூலம் சிறு சிறு நூல்கள் வார, மாத இதழ்கள், செய்தித்தாள்கள் ஆகியவற்றைப் படித்துப் பயன்பெற உதவும் திட்டமாகச் செயல்பட உள்ளது.

மாவட்டத்திலுள்ள 8 முதல் 10 தொடர் கல்வி மையங்களுக்கு ஒரு ஒருங்கிணைப்பாளர் மையம் செயல்பட இருக்கிறது. அதற்குப் பொறுப்பாளராக ஒரு தொடர்பாளர் இருப்பார். இப்பொறுப்பை ஊராட்சியில் நியமிக்கப்பட்ட மக்கள் நலப்பணியாளர் கவனிப்பார். இம்மையங்கள் மூலம் அமையும் கிராம நூலகங்கள் நன்கு செயல்பட அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொள்வது இவரது பொறுப்பாகும். இத்திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுக்கான செலவினத்தை மைய அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளும், பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு மாநில அரசும், மத்திய அரசும் செலவினத்தை 50:50 என்ற பங்கீடு முறையில் ஏற்றுக்கொள்ளும். இதற்குப்பிறகு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஆகிய அமைப்புகளிடம் நிரந்தரமாகச் செயல் படதக்க வகையில் ஒப்படைக் கப்படும். இத்திட்டம் படிப்படியாக மற்ற மாவட்டங்களில் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### திறந்தவெளிப் பள்ளித் திட்டம்

திறந்தவெளிப் பள்ளித் திட்டம், அனைவருக்கும் தொடர்கல்வி என்ற இலக்கினை அடைய வழிவகுக்கின்றது. இத்திட்டம் டிசம்பர் 1997 முதல் செயல்பட்டு வருகின்றது. பள்ளிப் படிப்பை இடையில் விட்டவர்களுக்கு 5ஆம் வகுப்பிற்கான தேர்ச்சியைத் திறந்த வெளிப் பள்ளித் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்றது. அறிவொளி இயக்கத்தின் மூலம் புதிதாகக் கற்றவர்களுக்கு 3ஆம் வகுப்பிற்கான தேர்ச்சியைத் திறந்த வெளிப்பள்ளி மையங்கள் மூலம் வகுக்கப்படுகின்றது. ஓராண்டு காலத்தை மூன்று பருவங்களாகப் பிரித்து ஒவ்வொரு பருவத்தின் முடிவிலும் தேர்வுகள் நடத்தப்படும். தேர்ச்சி பெற்றவர்கள் அடுத்த ஆண்டில் அடுத்த வகுப்பில் சேரத் தகுதியுடையவர்களாவர். புதுக் கோட்டை, இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்களிலும் புதிதாகக் கற்றவர் களுக்கான திறந்த வெளிப்பள்ளிகள் மாவட்டத்திற்கு 20 மையங்க்ள் வீதம் 40 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. பள்ளிப் படிப்பை இடையில் விட்டவர்களுக்குப் பயிற்சி அளிக்க கடலூர், விழுப்புரம், திருவண்ணாம லை, தருமபுரி ஆகிய நான்கு மாவட்டத்திலும் 15 மையங்கள் வீதம் 60 மையங்கள் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 2,700 பேர் பயன் பெறுவார்கள்.

கல்வி மான்யக் கோரிக்கை 17 என்ற தலைப்பின் கீழ் மொத்த செலவினத் தொகை ரூ.3601.07 கோடியாகும். இதில் உயர்கல்வித் துறைக்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ.464.31 கோடியாகும். இத்தொகை மொத்த செலவினத்தில் 12.89 விழுக்காடாகும்.

### புதிய ஒற்றைச் சாளரமுறை அறிமுகம்

தமிழ்நாட்டில் பொறியியல் கல்லூரி களில் மாணவர்களைச் சேர்ப்பதற்குப்



❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄❄

## தமிழகத்தில் இசைக் கல்லூரி

தமிழ்நாட்டில், 29 மாவட்டங்களிலும் இசைப்பள்ளிகள் துவக்கப்படும்; சென்னை, கோவை, மதுரை ஆகிய ஊர்களில் ஏற்கெனவே இசைக் கல்லூரிகள் உள்ளன; திருவையாறில் துவக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு எல்லா மாவட்டங்களிலும் இசைக் கல்லூரிகள் திறக்கப்பட்டபின், இசைப் பல்கலைக்கழகம் பற்றிச் சிந்திக்கப்படும் என்று **மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. மு. தமிழ்க்குடிமகன்** அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

புதிய ஒற்றைச் சாளரமுறை நடப்பாண்டிலிருந்து அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இதனை மாணவர்களும், பெற்றோர்களும், பொதுமக்களும் நன்கு வரவேற்றுப் பாராட்டியுள்ளனர்.

இதன்படி தகுதியின் அடிப் படையிலும் அவர்கள் தெரிவிக்கும் அடிப்படையிலும்' அவர்கள் சேர்ந்து பயில விரும்பும் கல்லூரிகளில் சேர்ந்துகொள்ள அனுமதி வழங்கப் படுவதுடன் முதலாண்டிலேயே அவர் களுக்கான பாடப்பிரிவுகளும் ஒதுக்கப் படுகின்றன.

சுயநிதி பொறியியற் கல்லூரிகள் இரண்டாம் ஆண்டு தொடக்கத்தில் பாடப்பிரிவு ஒதுக்குவதை வணிகமாக்கியிருந்த இந்தப் புதிய முறை ஒருமுடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. 'ஒற்றைச் சாளரமுறை' வருமாண்டிலிருந்து தொழில்நுட்பப் பயிலகங்களிலும் அறிமுகப்படுத்தப் படும்.

### பகுதிநேர முதுகலைப் பாட வகுப்பு

சென்னை பல்கலைக் கழகத்தில் அரசியல் மற்றும் பொது மேலாண்மைத் துறையில் தமிழ் வழியில் பொது நிர்வாகம் என்ற பகுதி நேர முதுகலை பாட வகுப்பினைத் துவக்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள அதிவேக முறைக்கான **(National Centre for Ultra Fast Process)** தேசிய மையத்தில் விடுதி மற்றும் ஆய்வக வசதிகள் ஏற்படுத்துவதற்காக அரசு ரூ.80 இலட்சம் அளித்துள்ளது.

### பெரியாரியல் மையம்

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் **(Periyar Research Centre)** பெரியாரியல் மையம் ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட உள்ளது. அம்மையத்திற்கான ஓர் பேராசிரியர் மற்றும் இரண்டு ஆராய்ச்சியாளர்கள் பதவிகளுக்கு அனுமதி அளிக்கப்பட உள்ளது. அம்மையத்தின் நூலகத்திற்காக ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்படவுள்ளது.

### கணிப்பொறி பாட வகுப்பு

அனைத்து அரசு கல்லூரிகளிலும் இளம் அறிவியல் கணிப்பொறி பாடத்தினை ஒரு பாட வகுப்பாகத் துவக்குவதற்குத் திட்டமிட்டு, படிப் படியாகச் செயல்படுத்தப்பட உள்ளது. தற்சமயம் 25 அரசு கல்லூரிகளில் இளம் அறிவியல் கணிப்பொறி பாடத்திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 1998 - 99 ஆம் ஆண்டு கூடுதலாக 10 கல்லூரிகளில் இளம் அறிவியல் கணிப்பொறி பாடவகுப்பு துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### தொழிற்கல்வி பாடத்திட்டங்கள்

மாணவர்கள் நல்ல வேலை வாய்ப்பு களைப் பெறுவதற்கான வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினால் பல்கலைக்கழக மான்யக்குழு 1994-95 ஆம் ஆண்டு முதல் தொழிற் கல்வியினை முதலாம் பட்டப் படிப்புகளில் கற்பிக்கும் பாடத்திட்டத்தினைத் துவக்கியது. இதற்கான முப்பத்தாறு பாடத்திட்டங்களைப் பல்கலைக்கழக மான்யக்குழு தேர்ந்தெடுத்துள்ளது. இதுவரை அந்தந்தப் பகுதிகளின் தேவையைக் கருத்திற்கொண்டு தமிழகத்தில் 41 கல்லூரிகளில் பலவிதத் தொழிற்கல்வி பாடத்திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 4 அரசு கல்லூரிகளாகும்.

### கல்லூரிகளுக்குத் தன்னாட்சி

கல்லூரிகளுக்குத் தன்னாட்சி வழங்குவதில் தமிழகம் முன்னோடி யாகத் திகழ்கிறது. தற்சமயம் நான்கு அரசு கல்லூரிகளை உள்ளடக்கி, 38 கல்லூரிகளுக்குத் தன்னாட்சித் தகுதி வழங்கப்பட்டுள்ளது. 1978-79 முதல் தமிழகத்தில் தன்னாட்சிக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. பல்கலைக் கழக மான்யக்குழு தன்னாட்சிக் கல்லூரிகளின் தரத்தை உயர்த்து வதற்குத் தனி நிதி உதவி அளிக்கிறது. தேசியக் கல்விக் கொள்கையிலும் தன்னாட்சி வழங்கும் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. 1997-98 ஆம் கல்வியாண்டில் ஐந்து அரசுக் கலைக்கல்லூரிகளுக்கும், ஆறு உதவிபெறும் கல்லூரிகளுக்கும் தன்னாட்சி வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரிகளில் தமிழ் வாயிலாகப் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டொன் றுக்கு ரூ.400 வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. 1997-98ல் இத்திட்டத்தின் கீழ் 24,298 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.97 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் அதிக அளவில் தமிழ்வழிப் பாடப்பிரிவு நடத்திடக் கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

பயிற்றுக் கட்டணம் தொடர்பாகச் சுயநிதி மற்றும் தனியார் கல்லூரிக ளின் நிர்வாகங்களின் கருத்தினைக் கேட்பதற்காக, மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆளுடையபிள்ளை அவர்களைத் தலைவராகக்கொண்டு மாநிலக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களில் தனது அறிக்கையைத் தருமாறு இக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பி.எட். பாடவகுப்புகள் மற்றும் கல்லூரிகள் துவங்குவதற்கான அனுமதியை 1997-98 ஆம் ஆண்டு முதல் தடை செய்யலாம் என அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் தடை 1998-99 ஆம் ஆண்டுக்கும் நடை முறையிலிருக்கும்.

கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளர் நியமனத்திற்குப் பார்வையற்ற நபர் களுக்குச் செய்யப்பட்ட பணியிடங்கள் குறிப்பிட்ட அந்த வருடத்தில் நிறைவு செய்யப்படவில்லை. எனில், அதனை அதற்கடுத்த வருடத்தில் நிரப்புமாறு ஆசிரியர் தேர்வு வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்குத் தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப் பட்டுள்ளது. சிவில் சர்வீஸ் பணிக்குத் தேர்வு எழுதும் பார்வையற்ற மாணவர்களுக்கு முன் பயிற்சித் தேர்வு மையங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

### 15 பொறியற் கல்லூரி துவக்க அனுமதி

மனிதவள மேம்பாட்டுத் துறையின் கீழ் இயங்கிவரும் ஒரு பகுதியான தொழில்நுட்பக் கல்வியானது. மாணவர்களின் திறமையை

உயர்த்துவதிலும் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்குவதிலும் முக்கியமான பங்களிக்கிறது. இந் நிலையினை நன்குணர்ந்த தமிழக அரசு, தொழில் நுட்பக்கல்வி மேம்பாட்டிற்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கிறது. 1997 - 98 ஆம் ஆண்டில் அனைத்திந்தியத் தொழில்நுட்பக் கல்விக்குழு 15 புதிய பொறியியற் கல்லூரிகள் மற்றும் 13 தொழில் நுட்பப் பயிலகங்களைத் துவக்க அனுமதி யளித்துள்ளது. அவைகளை 1998-99 ஆம் ஆண்டு முதல் சுயநிதி அடிப் படையில் தொடங்க அனுமதி அளிக்கப் பட்டுள்ளன.

## ஆபரணச் செயல் முறை பாடப்பிரிவு

மும்பையில் இயங்கிவரும் உலகத் தங்கக் குழுவின் ஒத்துழைப்புடன் சென்னை டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் தொழில்நுட்பப் பயிலகத்தில் ஆபரணச் செயல் முறை தொடர்பாக சில புதிய பாட வகுப்புகளைத் தொடங்க அரசு 97-98 ஆம் ஆண்டில் ஒப்புதல் வழங்கியுள்ளது. அவை தங்க நகை செய்தல், கல் பதித்தல், உற்பத்தி நிர்வாகம், சுத்திகரிப்புச் செய்தல், மெருகேற்றுதல் மற்றும் தரக்கட்டுப்பாடு என்பது குறித்த பாடங்களாகும். வேலைவாய்ப்பினை பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதால் இப்பாட வகுப்பில் சேர மாணவர் களிடையே அதிக ஆர்வம் உள்ளது.

அரசுப் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல தொழில் நுட்பப் பயிலகங்களில் உள்ள ஆசிரியர் பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டுள்ளன. ஆரம்ப நிலையில் உள்ள விரிவுரையாளர் பணியிடங் களை 1998 - 99 ஆம் ஆண்டில் தேர்வு வாரியம் மூலம் நிரப்புவதற்குத் தேர்வுவாரியம் மூலம் நிரப்புவதற்குத் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கான முன்னர், எஞ்சிய காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கும் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள சுயநிதி பொறியியற் கல்லூரிகள், தொழில் நுட்பப் பயிலகங்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றில் போதுமான அடிப்படை வசதிகள், உள் கட்டமைப்பு, நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் கொண்ட போதுமான ஆசிரியர்கள் உள்ளனரா மற்றும் அக்கல்வி நிறுவனங்கள் போதுமான நிதி வசதி கொண்டுள்ளதா என்பது போன்ற விவரங்களை ஆராய்ந்தறிவதற்காக 1996 ஆகஸ்ட் திங்களில் அரசு டாக்டர் அனந்தகிருஷ்ணன் தலைமையில் ஒரு உயர் நிலைக்குழு அமைத்தது. அக்குழு தனது முடிவான அறிக்கையை அரசிடம் வழங்கியுள்ளது. அவ்வறிக்கையில் கண்ட அனைத்து முக்கியப் பரிந்துரைகளின் மீது நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆண்டாண்டு காலமாகக் கல்வித்துறை வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் கணிசமான அளவிற்கு அதிகரித்து வந்த போதிலும், உயர் கல்வித்துறையில் புதிய பொறி யியற் கல்லூரிகள், பாலிடெக்னிக்கு கள், கலை மற்றும் அறிவியற் கல்லூரிகள் தொடங்குவதற்குத் தேவை அதிகரித்துள்ள போதிலும், அரசின் நிதி நிலை காரணமாக அரசு மேற்கண்ட கல்லூரிகளைத் தொடங்க இயலாத சூழ்நிலை உள்ளதால், சுயநிதி அடிப்படையில் பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரி களைத் தொடங்க முன்வரும் தனியார் நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய தனியார் சுயநிதி நிறுவனங்கள், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக தொடங்கப்பட்டுள்ளதால், ஊரகப் பகுதி மக்களும் எளிதில் உயர்கல்வி பெறுவதற்கு வகை செய்யப் பட்டுள்ளது. மேலும் இந்நிறுவனங் களால் ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பும் கிடைத்துள்ளது. தொழில் நுட்பக் கல்வித் துறையில் தனியார் சுயநிதி நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, தற்போது முழுத்தேவையும் பூர்த்தி செய்யப்படும் உச்சநிலை அடையப்பட்டுள்ளது.

## அறிவியல் நகரம்

அறிவியல் நகரம் 2000 என்ற நிறுவனத்தைக் கம்பெனிகளின் சட்டத்தின் கீழ், கீழ்க்காணும் நோக்கங்களுடன் தோற்றுவிப்பதற்குத் தமிழக அரசு கருதியுள்ளது.

அ) பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காக நிதி ஆதாரங்களைத் தோற்றுவித்தல்.

ஆ) தொலை உணர்வு, சுற்றுச்சூழல் ஆராய்ச்சி, மருத்துவத் தொழில் நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி நடத்துவதற்கு ஏற்ற வாய்ப்பினை ஏற்படுத்துதல்.

இ) அறிவியல் நகரத்தின் ஆய்வுக்கூடங்களில் கண்டுபிடிப்பு களை வணிகத்துறைப் பயன்பாட்டுக்கு அளித்தல்.

ஈ) தகுதியும் திறமையும் வாய்ந்த இளம் விஞ்ஞானிகளை ஊக்குவித்தல், இளங்கலை, முதுகலைப் பட்டதாரிகள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், அறிவியல் தொழில்நுட்பவியல், பொறியியல் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வோர் இவ்வறிவியல் நிறுவனத்தால் நேரடியாகப் பயனடைவார்கள்.

**- இவ்வாறு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் சட்டப்பேரவையில் வைத்த கல்வி மானியக்கோரிக்கையின்போது அறிவித்தார்.**

★ ★ ★



# பாவேந்தர் நோக்கில் பாரதி...



## சாதி எதிர்ப்புக் கொள்கை

டாக்டர் மா. அண்ணாதுரை

புதுநெறி காண, கொலை மலிந்த அந்நாளில், கொல்லா நோன்பு நின்று நிலைபெற வேண்டி, நெடுந்தவம் புரிந்த நம் தாயகத்தில், சமண மதம் தோன்றியதுபோல், முத்தியோ சிலரின் சொத்தென இருக்கையில், இத்தமிழ் நாடு அருந்தவப் பயனாய், இராமானுசர், இராமலிங்க அடிகள் ஆகிய பெரியார்களை ஈன்றது போல், ஜார் மன்னனின் கொடுமையைத் தாங்காது, உருசிய நாடு ஏருற லெனினை ஈன்றது போல், 'செல்வர் சிலரின் நல்வாழ்வுக்கே எல்லா மக்களும்' என்ற பிரான்சு நாட்டில், 'குடிகள் குடிகளுக்காக' எனக் கவிதைகள் பல குவிக்க, விக்டர் யூகோ எனும் கவிஞன் தோன்றியது போல், தமிழரின் உயிர்நிகர் தமிழ், நிலை தாழ்ந்ததால், தமிழகம், தமிழின் மேன்மைக்கு, உயர்வு அளிக்கும் தலைவனை, எண்ணித் தவங்கிடக்கும் காலத்தில், இலகு பாரதிப் புலவன் தோன்றினான். எப்படிப்பட்ட புலவன் பாரதி?

*"பைந்தமிழ்த் தேர்ப் பாகன் ! அவனொரு*
*செந்தமிழ்த் தேனீ ! சிந்துக்குத் தந்தை*
*குவிக்கும் கவிதைக் குயில் ! இந்நாட்டினைக்*
*கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு !*
*நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா !*
*காடு கமழும் கற்பூரச் சொற்கோ !*
*கற்பனை ஊற்றாம் கதையின் புதையல் !*
*திறம்பாட வந்த மறவன் ! புதிய*
*அறம்பாட வந்த அறிஞன் ! நாட்டில்*
*படரும் சாதிப் படைக்கு மருந்து !*
*மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன் !*
*அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன் !*

- என்று பாரதியின் பண்பு நலனைப் பாங்குறப் புகழ்வார் பாவேந்தர். மகாகவியின், கவின் கவிதைகள் யாவும் சொற் புதிது; சுவை புதிது; வளம் புதிது; சோதிமிக்க நவ கவிதைகள்; எந்நாளும் அழியாத மாகவிதைகள்; இவர்தம் கவிதைகள், இந்தியத் திருநாட்டின் விடுதலையை வேண்டின; நாட்டு மக்களின் மனத்தில் விடுதலை வேட்கையை விதைத்தன; தமிழ் உணர்வைத் தமிழரிடையே தட்டி எழுப்பின; ஆன்மீகச் சிந்தனையை அகத்தில் வளர்த்தன; பெண் விடுதலையைப் போற்றின; சீர்திருத்தச் சிந்தனையைச் சிந்தையில் தோற்றுவித்தன. சாதி சமயத்தைச் சாடின.



"நீதிக்குத் தாய் - நாலு
சாதிக்குத் தாய்..."

"கண்ணன் வழிப்பிறந்த சாதி"

"சாதிகள் நால்வகையாய்த் - தொழில்
தன்னிற் பிரித்துரைத்தாள்"

- என்றும் தொடக்க காலத்தில், ஆன்மீகத்தையும், சாதியையும் போற்றிப் பாடிய பாவேந்தரின் பாட்டு நெறியை மாற்றின.

**"பாரதியாருடைய தொடர்பு, என்னுடைய பாநெறியில் ஒரு புதிய போக்கை ஏற்படுத்தியது. அவர் கண்ணெதிரில் காணப்படும் மக்களின் தேவைகளைப் பாடினார். அது என்னுடைய மனத்தைக் கவர்ந்தது. பிறகே, என்னுடைய பாக்கள் அரசியல், சமுதாயம், மொழி ஆகிய துறைகளில் உள்ள குறைநிறைகளை, எடுத்துக்காட்டத் தலைப்பட்டன. இவ்வகையில் பாரதியாருக்கு, யான் கடமைப்பட்டவன்".**

- என்று பாரதி, தமக்குக் காட்டிய பாதையை நன்றியுடன் நவில்கின்றார். மேலும், பாரதியின் பாநெறியில் தம்மை மிகவும் ஈர்த்ததும், கவர்ந்ததும், இலட்சிய நோக்கை உருவாக்கியதும், அவர்தம் இருநெறிகளே என்பதைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் பாவேந்தர்.

*"சாதி ஒழித்திடல் ஒன்று ! - நல்ல*
*தமிழ் வளர்த்தல் மற்றொன்று !*
*பாதியை நாடு மறந்தால் - மற்ற*
*பாதி துலங்குவ தில்லை !*
*சாதி களைந்திட்ட ஏரி ! - நல்ல*
*தண்டமிழ் நீரினை ஏற்கும் !*
*சாதிப் பிணிப்பற்ற தோளே ! - நல்ல*



- என்று பாடினார் பாரதியார். இத்தகைய பாடல்கள் பாவேந்தரின் உள்ளத்தில் ஆழப் பதிந்தன. இதன் காரணமாகவே, பின்னாளில் இவர்தம் பெருமைகளை - தமிழுக்கு இவர் ஆற்றிய அரிய தொண்டுகளை - சமுதாயத் தொண்டுகளைப் பல எதிர்ப்புகளுக் கிடையில், 'தமிழும் பாரதியும்' - 'மகாகவி பாரதியார்' - 'பாரதியாரைப் பற்றி பாரதிதாசன்' - போன்ற தலைப்புகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். 'பாரதியார் உலகக் கவியல்லர்' என்றும், 'அவர் பாடல்களில் வெறுக்கத் தக்கன உள்ளன' என்றும் கல்கி கிருஷ்ணமூர்த்தி அந்நாளில் 'ஆனந்த விகடன்' இதழில் எழுதிய பொழுது, பாவேந்தர், வ.ரா. போன்றோர்களால் மறுத்துரைக்கப்பட்டன. 'பாரதியார் உலகக் கவி' - என்று ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம் எனும் இதழில் பாவேந்தர் வெளியிட்டார். மேலும், பாரதியிடம் தாம் கண்ட இன்றியமையாத சமுதாயக் கொள்கையைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

*தண்டமிழ் வாளினைத் தூக் கும் !*
*என்றுரைப் பார்என்னி டத்தில் - அந்த*
*இன்ப உரைகளென் காதில்*
*இன்றும் மறைந்திட வில்லை ! - நான்*
*இன்றும் இருப்பத னாலே !"....*

- மேலும் "அரசியல் கொடுமையைவிடச் சமூகக் கொடுமையே மிகப் பயங்கரமானது. எனவே, சாதிக் கொடுமையை எதிர்த்துப் போராடும் சமூகச் சீர்திருத்தவாதியே அரசியல்வாதியைவிட அதிக தைரியசாலி."

- என்று டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் குறிப்பிடுகின்றார். பாரதியும் பாரதிதாசனும் சமூகக் கொடுமைகளை எதிர்த்துப் போராடிய கவிஞர்களாவர். பார்ப்பனக் குலத்தில் பிறந்த பாரதி, தம் இனத்தார் எதிர்த்த போதும், அஞ்சாது, 'சமுதாயத்தின் சகல சாதிக் கொடுமைகளைக் கடுமையாக எதிர்த்து, தம் வாழ்க்கையையே அதற்கு அர்ப்பணித்த பாரதி' - தாம் வாழ்ந்த காலச் சூழலில், சாதியும், சமயமும், மூடப் பழக்க வழக்கங்களும், தீண்டாமையும் போன்ற சமூகக் கொடுமைகள் மண்டிக் கிடந்த நிலையைக் கண்டார்; மனம் நொந்தார்; வருந்தினார்!

*"விடுதலை ! விடுதலை ! விடுதலை !*
*பறைய ருக்கும் இங்கு தீயர்*
*புலைய ருக்கும் விடுதலை !*
*பரவ ரோடு குறவ ருக்கும்*
*மறவ ருக்கும் விடுதலை !"*

வேண்டினார்; இந்தியத் திருநாட்டில் ஒற்றுமை வளரவும், மக்களிடையே மனிதநேயம் மலரவும், 'சாதி' எனும் சாக்காட்டில் இருந்து, சமுதாயம் மீள வேண்டும் என்றார்.

*"சாதிப் பிரிவுகள் சொல்லி - அதில்*
*தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்"*

*"சாதிக் கொடுமைகள் வேண்டாம் ! - அன்பு*
*தன்னிற் செழித்திடும் வையம்"*

*"சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே*
*தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்த மென்போம்"*

*"பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே -*
*வெள்ளைப் பரங்கியைத் துரையென்ற காலமும்*
*போச்சே !"*

**"பாரதியாருடைய முக்கியக் கொள்கை ஜாதி ஒழிப்பு! அதுதான் அவரிடம் இருந்த சிறந்த கொள்கை; குறிப்பிட்டுப் பேச வேண்டிய கொள்கை ! பாரதியார் பார்ப்பனர்; தெரிந்தும் சொன்னார் - 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று, தமிழில் - நல்ல எளிய தமிழில் எல்லோருக்கும் புரியும்படி இதைச் சொன்னார். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சந்தோஷம்கூட !"**

பாரதியின் சாதி ஒழிப்புக் கொள்கையிலும், தமிழ் வளர்ச்சிக் கொள்கையிலும் மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் கொண்ட பாவேந்தர், பின்னாளில் புனைபெயர் ஒன்றினைத் தேர்வு செய்ய எண்ணியபோது, 'பாரதியார்' பெயரே அவர் உள்ளத்தில் தோன்றியது. 'பாரதிதாசன்' என்று தம் பெயரை மாற்றிக் கொண்டார். ஆனால், திராவிட இயக்கத்தில், 'சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி'யாக இருந்த காலத்தில், கருத்து வேறுபாட்டின் காரணமாக, இயக்கத்தில் சிலர் எதிர்ப்புக் குரல் கொடுத்தனர். பாவேந்தரிடம் 'பாரதி ஒரு பார்ப்பனக் கவிஞர்'. மேலும், தாசன் என்பது அடிமை என்று பொருள்படும். எனவே, தாங்கள் 'பாரதிதாசன்' என்று புனைபெயர் வைத்துக் கொள்ளலாமா ? என்று வினவினர்.

பாவேந்தரின் கண்கள் தீப்பொறியைக் கக்கின; பாரதியையும் தம்மையும் இகழ்ந்ததாகவே கருதினார். பல இலக்கிய - அரசியல் சொற்பொழிவுகளில் பதிலுரை தந்தார். 'பாவேந்தர் நோக்கில் பாரதி' எவ்வாறு உயர்ந்து நின்றார் என்பதைப் பின்வரும் அவர்தம் கூற்றே புலப்படுத்துகிறது. "நான் அப்பொழுது பாண்டிச்சேரியில் வாத்தியார் வேலையில் இருந்தேன். அப்போதே சில பத்திரிகைகளில் கட்டுரைகளும் பாட்டுகளும் எழுதி அனுப்புவது வழக்கம். அப்போது நான் உத்தியோகத்தில் இருந்து கொண்டு இக்காரியம் செய்வது உத்தியோகத்திற்குத் தொல்லை தரும்; யாராவது புகார் செய்வார்கள் என்று கருதி, ஓர் புனைபெயர் வைத்துக் கொள்ள விரும்பினேன். அப்போது என் கண்முன்னே,

*'சூத்திரனுக்கு ஒரு நீதி - தண்டச்*
*சோறுண்ணும் பார்ப்புக்கு வேறு ஒரு நீதி'*

- என்று கேட்ட பாரதியார், பார்ப்பனனாய் இருந்தும் பயப்படாது, தீமை வருமென்று தெரிந்திருந்தும் திகைக்காது, தமிழில் புரியும்படி சொல்லிய பாரதியார்தான் நின்றார். உடனே, பாரதிதாசன் என்று புனைபெயர் வைத்துக்கொண்டேன். சாதிக்

கொள்கையை நன்றாக - உண்மையாக எதிர்த்தவர் பாரதியார்தாம்! அவருக்கு முன் அவ்வாறு சாதிக் கொள்கையை எதிர்த்தவரை நான் கண்டதில்லை. பாரதி (சாதியை) எதிர்த்துப் பணிபுரியத் தொடங்கிய பன்னாட்களுக்குப் பின்னரே பெரியார் இயக்கம் தோன்றியது. பாரதியார் இறந்த பின், சாதியை எதிர்த்துச் சீர்திருத்தங்களை ஆதரித்த பெரியாரை ஆதரிக்கத் தொடங்கினேன்".

பாரதிக்குப் பின், 1928-ஆம் ஆண்டு முதல், பெரியாரின் பகுத்தறிவு இயக்கத்தில், சுயமரியாதை இயக்கத்தில் இணைத்துக் கொண்ட பாவேந்தர், அன்று முதல், பாரதி - பெரியார் ஆகிய இருவரின் சாதி ஒழிப்புக் கொள்கையில் உறுதியாகத் திகழ்ந்துள்ளார். சாதி, சமயம், கடவுள், பெண் விடுதலை, பெண் சமத்துவம், குழந்தை மணம், விதவை மறுமணம், கலப்புமணம், குடும்பக் கட்டுப்பாடு, மதுவிலக்கு, தீண்டாமை, அரசியல், சுயமரியாதை, பகுத்தறிவு, பொதுவுடைமை, தொழிலாளர் முன்னேற்றம் போன்ற சமுதாயக் கூறுகளைக் காட்டிலும், சாதி ஒழிப்புக் கொள்கைக்கு முன்னுரிமையைத் தந்திருப்பது அவர்தம் படைப்புகளைப் படிப்போர் - ஆய்வோர் உணர்வர்.

*"மிக்குயர்ந்த சாதிகீழ்ச் சாதி என்னும்*
*வேற்றுமைகள் தமிழுக்கு இல்லை; தமிழர்க்கில்லை;*
*பொய்க்கூற்றே சாதினைல் ! ஆரியச் சொல் !*
*புறநஞ்சு ! பொன் விலங்கு ! பகையின் ஈட்டி !*
*கடற்குமிழி உடைந்திடுக ! சாதி வீழ்க !!*

*"இருட்டறையில் உள்ளதடா உலகம் ; சாதி*
*இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே"*

*"சாதி நோய் தவிர்க தோழனே !"*

*"சாதிக்கு ஆதரவு தருமோர் ஆட்சியினைத்*
*தீக்கிரை செய்க..."*

*"ஒழியாச் சாதி ஒழிய வேண்டும்*
*தமிழகம் அடிமை தவிர்த்தல் வேண்டும்"*

*"சாதி வலையினை அறுப்போம் - இனித்*
*தமிழர்கள் ஒற்றுமை கொள்வோம்"*

- என்றும் பாவேந்தர் சாதிக் கொடுமைகளால் தோன்றும் கேட்டினையும், சாதி ஒழிப்பிற்குரிய காரண - காரியங்களையும் கவிதைகள் - கட்டுரைகள் - காப்பியங்கள் - நாடகங்கள் - சிறுகதைகள் - புதினம் போன்ற இலக்கிய வடிவங்களின் வாயிலாக முழங்கியுள்ளார். மேலும், புதுவை முரசு, ஸ்ரீசுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம், குயில் (திங்கள், தினசரி, கிழமை, திங்களிருமுறை) போன்ற இதழ்களின் வாயிலாகவும், சாதி ஒழிப்பு மாநாடு, வானொலி ஆகியவற்றின் வாயிலாகவும் தமிழ்ச் சமுதாயத்திலிருந்து சாதி ஒழிய வேண்டும் என்பதைப் பாரதி வழியில் - பெரியார் வழியில் வலியுறுத்தியுள்ளார் பாவேந்தர்.

நிறைவாக, -

"வள்ளலார் வழிவந்த பாரதியார், சாதிகள் மனித குலத்துக்கு விரோதிகள். அவை சமுதாயத்திலே தோன்றும் களைகள்" என்று நினைத்துச் சாதிக் கொடுமைகளை எதிர்த்துப் போராடினார். "சாதியே கூடாது என்பது பாரதியின் கொள்கை" - பாரதி வழிவந்த பாவேந்தரும், "சாதி மதம் மனிதனுக்கு அவசியமில்லை; இருக்கக்கூடாது", "சாதி, மதம் இருப்பது கொண்டே பிழைக்கும் கூட்டத்திற்கு நான் விரோதி" என்பர். இது பாரதி உள்ளத்தின் வெளிப்பாடே ஆகும். பாரதியாரோடு பத்தாண்டுகள் நெருங்கிப் பழகிய, பாவேந்தர், யார்க்கும் அஞ்சாமல், பாரதியின் புகழ் பரப்பிய பண்பாளர்; சாதி ஒழிப்புக் கவிஞர். இவர்தம் நோக்கில், சாதி ஒழிப்புக் கொள்கையின் முன்னோடியாகத் திகழும், இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற சாதி எதிர்ப்புக் கவிஞர் பாரதியாரே ஆவார். ●



*1987 ஆம் ஆண்டு நடைபெற்ற இடஒதுக்கீட்டுப் போராட்டத்தில் உயிரிழந்த சமூகநீதிக் காவலர்கள் 13 பேருடைய குடும்பத்திற்கு, மாண்புமிகு **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் ஆணையின்பேரில் தலா 3 இலட்சம் ரூபாய் வீதம் ரூ.39 இலட்சம் விழுப்புரத்தில், அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர்கள் திரு. க. பொன்முடி, திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், திரு.கு.பிச்சாண்டி ஆகியோர் இத்தொகையினை 19.4.98 அன்று வழங்கினார்கள். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அதுல்யமிஸ்ரா, மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. மு. ரவி ஆகியோர் உடனிருந்தனர்.*

# ★ விவசாயிகளுக்குப் பரிசளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்
# ★ விவசாயக் குடும்ப மாணவ-மாணவியர்க்கு நிதி உதவி

## குறியீட்டை விஞ்சி உணவு உற்பத்தியில் சாதனை !
## பள்ளிக்கல்வியில் வேளாண்மைப் பாடம் அறிமுகம் !

### சட்டப் பேரவையில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அறிவிப்புகள்

சட்டப்பேரவையில் வேளாண்மைத் துறைக்கான மான்யத்தில் பதிலளித்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. **வீரபாண்டி ஆறுமுகம்** ஆற்றிய உரையின் முக்கியப் பகுதிகள் வருமாறு:

✶ தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் காவிரிப் படுகையில் மண்டிக் கிடந்த நெய்வேலி காட்டாமணி செடியை 2-4-டி சோடியம் உப்புக் கரைசலை தெளித்து அழிக்க முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு 1997-98ஆம் ஆண்டு ரூ.308.53 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு 4,378 ஹெக்டேர் நிலப்பரப்பில் மண்டிக்கிடந்த 'பி' முதல் 'இ' வரை உள்ள கால்வாய்களில் நெய்வேலி காட்டாமணிச் செடிகளை அழிக்க திட்டமிடப்பட்டு, சென்ற ஆண்டு 2,384 எக்டேர் மட்டுமே அழிக்க முடிந்தது.

மேட்டூர் நீர்தேக்கத்தில் இருந்து ஜூன் 12-ந் தேதி முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்ட காரணத்தினால் 4,378 எக்டேர் நிலப்பரப்பில் நெய்வேலி காட்டாமணிச் செடியை அகற்ற முடியவில்லை. நெய்வேலி காட்டாமணிச் செடியை அழிக்க 1998-99ஆம் ஆண்டில் ரூ.299.334 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

✶ காவிரி டெல்டா பகுதிகளில் நிலத்தடி நீரைக் கொண்டு ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துப் பாசனம் செய்யும் விவசாயிகள் 3 (மூன்று) குதிரை திறன் கொண்ட ஆயில் இன்ஜின்கள் நீரை உறிஞ்சி வெளியே தள்ள சிரமப்படுவதால் வெளியேற்றப்படும் நீரின் அளவு குறைகிறது.

இதனைத் தவிர்க்க மானிய விலையில் வழங்கப்படும் 3 (மூன்று) குதிரைத்திறன் கொண்ட ஆயில் என்ஜின்களுக்கு பதிலாக 5 (ஐந்து) குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்கள் வழங்குமாறு விவசாயிகள் வைத்த கோரிக்கையை, முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசிய பின் 27-7-96 அன்று வேளாண்மைத்துறை மானிய கோரிக்கையின் போது சிறுபாசனத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு இணையத்தின் மூலம் வழங்கப்படும் என சட்டப்பேரவையில் தெரிவிக்கப்பட்டது.



இத்திட்டத்தில் சிறு, மிகச்சிறு, தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் விவசாயிகளுக்கு முறையே 25,30 மற்றும் 50 சதவிகிதம் மானிய விலையில் வழங்கப்படும்.

இத்திட்டத்தில் 1998-99ஆம் ஆண்டில், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 62.5 விவசாயிகளுக்கு ரூ.50 இலட்சம் செலவில் 3 குதிரைத்திறன் கொண்ட ஆயில் என்ஜின்களுக்குப் பதிலாக 5 குதிரைத்திறன் கொண்ட ஆயில் இன்ஜின்களும், 5 எச்.பி.ஆயில் என்ஜின்களுக்குப் பதிலாக 7.5 குதிரைத்திறன் கொண்ட ஆயில் இன்ஜின்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் வேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்று 500 ஆயில் இன்ஜின்கள் ரூ.31 இலட்சம் மானியச் செலவில் விவசாயிகளுக்கு வழங்க முதலமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளார்.

✶ மாணவர்களிடையே சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுப்புறத்தைப் பசுமையாக வைத்திருக்கச் செய்வது அவசியமாகும். தமிழகத்தில் உள்ள பள்ளிகளைப் பசுஞ்சோலைகளாக உருவாக்கிட ஆண்டுதோறும் மாவட்டம் ஒன்றிற்கு 25 கல்வி நிலையங்களைத் தேர்வு செய்து அவற்றிற்கு ரூ.500 மதிப்புள்ள மரக்கன்றுகள் தோட்டக்கலைத் துறையின் மூலம் இலவசமாக வழங்கப்படும்.

முதற்கட்டமாக 1998-99ஆம் நிதியாண்டில், விளைபொருட்கள் வரத்து அதிகமுள்ள 30 ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒன்றிற்கு ரூ.0.75 இலட்சத்தில் ஒரு நிழற்குடை வீதம் ரூ.22.25 இலட்சம் செலவில் 30 நிழற்குடைகளை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இச்செலவினம் விற்பனைக் குழு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

முதற்கட்டமாக, தொடர்ந்து தங்கள் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டுவந்து விற்பனை செய்யும் சிறு/மிகச் சிறு மற்றும் இதர விவசாயிகளில், பிரிவிற்கு ஒருவர் வீதம் குலுக்கல் முறையில் தேர்வு செய்து, ரூ.2000 மதிப்பில் குடும்பத்திற்குத் தேவையான பொருட்களைப் பரிசாக வழங்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம், பொருளாதார சாத்தியக்கூறு உள்ள 260 ஒழுங்குமுறை

விற்பனைக் கூடங்களில் ரூ.15.6 இலட்சம் செலவில் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும். இதனால் பயனடையும் விவசாயிகள் எண்ணிக்கை 780 ஆகும்.



ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வரத்தின் அளவை உயர்த்துவதற்கும், தங்கள் படிப்பைப் பாதியில் விட்டுவிடும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த விவசாயக் குடும்ப, மாணவ, மாணவியருக்கு, ஆறாம் வகுப்பு முதல் கல்லூரிப் படிப்பு வரை நிதியுதவி வழங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 1620 பள்ளி/கல்லூரி மாணவ, மாணவியர் பயன்அடைவர். ஆண்டு ஒன்றுக்கு இத்திட்டத்திற்கு ஆகும் செலவு ரூ.20 இலட்சத்தை மாநில விளைபொருள் விற்பனை வாரியம் மேற்கொள்ளும்.

### மாவட்டந்தோறும் பசுமைக்கூடம்

தமிழ்நாட்டிலிருந்து நாட்டின் பிற பகுதிகளுக்கும், அயல்நாடுகளுக்கும், பூக்கள் ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. **அபீடா** நிதியுதவியுடன், சென்னைக்கு அருகில், பள்ளிக்கரணை கிராமத்தில், **பன்னாட்டு மலர் ஏலமையம்** ஒன்று நிறுவப்பட உள்ளது.

ஏற்றுமதிக்கான பூக்கீள் சாகுபடி குறித்து தொழில் நுட்பங்களை விவசாயிகள் அறியாமல் உள்ளனர். அவர்களுக்கு தொழில்நுட்பங்களை விளக்கி, ஏற்றுமதிக்குத் தகுந்த பூக்களை அதிக அளவில் உற்பத்தி செய்ய ஊக்கப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

அதனடிப்படையில், நடப்பாண்டில் பூக்கள் அதிக அளவு உற்பத்தியாகும் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், ஈரோடு, திருச்சி, மதுரை, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய 12 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு ஒன்று வீதம், தொழில்நுட்ப உத்தியுடன் கூடிய பசுமைக்கூடம் ஒன்றுக்கு ரூ.4 இலட்சம் வீதம் ரூ.48 இலட்சம் செலவில் 12 பசுமைக்கூடங்கள் அமைக்க அரசு தீர்மானித்துள்ளது. இச் செலவினம் விற்பனைக் குழு உபரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

✶ தற்போது 16 விற்பனைக் குழுக்களில், எந்த விற்பனைக் குழுக்களிலும் ஃபேக்ஸ் மற்றும் ஒயர்லெஸ் வசதி கிடையாது. கணிப்பொறி 2 விற்பனைக் குழுக்களிலும், நகல்பெருக்கிகள் 8 விற்பனைக் குழுக்களிலும் மட்டுமே உள்ளன.

நாட்டின் பிற பகுதிகளில் நிலவும் விலை விவரம், வரத்து விபரம் ஆகியவைகளை அறிய பேக்ஸ், கணிப்பொறி, ஒயர்லெஸ் கருவி மற்றும் படிப்பெருக்கி ஆகியவகைளை எல்லா விற்பனைக் குழுக்களுக்கும் வழங்குவது அவசியமாகிறது. எனவே, எஞ்சிய விற்பனைக் குழுக்களுக்கும் வேளாண்மை விற்பனை இயக்குநர் அலுவலகத்திற்கும் 1998-99ஆம் நிதியாண்டில் ரூ.47.00 இலட்சம் செலவில் மேற்படி சாதனங்களைத் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை வாரிய வளர்ச்சி நிதியிலிருந்து வாங்கி வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

### வெள்ள நிவாரணம்

✶ விற்பனைக் குழு நிர்வாகத்தை மேலும் சீராகவும், சிறப்பாகவும் நடத்துவதற்கு விற்பனைக் குழு உறுப்பினர்களை நியமனம் செய்யவும், அவர்களில் ஒருவரை குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**தலைவர் கலைஞர்** அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் ஜூன் மாதத்தில் ஏற்பட்ட புயல் காற்று மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.48.17 இலட்சம் (வேளாண்மைக்கு ரூ.47.16 இலட்சம், தோட்டக்கலைக்கு ரூ.1.01 இலட்சம்) வெள்ள நிவாரணமாக வழங்கினார்.

அந்த வெள்ளத்தின்போது இறந்துவிட்ட கால்நடைகளுக்காகவும் நிவாரணம் வழங்கப்பட்டது. அதன்படி மாடு இறந்தால் ரூ.5,000-மும், கன்று இறந்தால் ரூ.3,000-மும், ஆடு இறந்தால் ரூ.1,000-மும், மேலும் முழுமையாக வீடு இழந்தவர்களுக்கு ரூ.1000-மும் பகுதியாக வீடு இழந்தவர்களுக்கு ரூ.500-ம் வழங்கப்பட்டது.

டிசம்பர் 1996-ல் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்கான நிவாரணமாக வழங்கப்பட்ட தொகை ரூ.55.40 கோடி ஆகும்.

1996-ல் தரிசு மற்றும் மானாவாரி நிலங்களை உணவு உற்பத்தி செய்யும் விளைநிலங்களாக மாற்ற டாக்டர் வி.சி.குழந்தைசாமி அவர்களின் தலைமையில் ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது. அது தன்னுடைய அறிக்கையை அரசுக்கு அளித்து, அவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

### அரிசி உற்பத்தி

1997-ல் தமிழகத்தில் பெருவாரியான மாவட்டங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டது. அப்போது நிவாரணமாக ரூ.5.29 கோடி வழங்கப்பட்டது.

✶ அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரை 1995-96-ல் 52.06 இலட்சம் மெ.டன்னாக இருந்தது. 1996-97-ல் 60.61 இலட்சம் மெ.டன்னாக உயர்ந்தது. 1997-98-ல் இது வரை தமிழகம் எட்டாத சாதனையை - குறிப்பாக 70 இலட்சம் மெ.டன் இலக்கு என்ற நிலையில் இதனையும் மிஞ்சி உற்பத்தி 73.56 இலட்சம் மெ.டன்னாக உயர்ந்துள்ளது.

அகில இந்திய அளவில் அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும் புதிய தொழில் நுட்பங்களைப் பரிமாறிக் கொள்ளவும், அங்கீகாரமற்ற பட்டதாரிகளை தடை செய்யவும், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பிற்கு வரன்முறைகளை வகுக்கவும், வேளாண் பட்டதாரிகள் சுயதொழில் மேற்கொள்ளவும், மருத்துவம், கால்நடை மருத்துவம், சித்த மருத்துவத்தைப் போன்று, வேளாண்மையும் ஒரு தொழில் நுட்பக் கல்வி என்ற அடிப்படையில், வேளாண்மைத் தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்டு, வேளாண்மை மன்றம் அமைப்பது இன்றியமையாதது என்று வேளாண் பட்டதாரிகள் சங்கம் மற்றும் வேளாண் உயர் அலுவலர் சங்கங்கள் பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்த வண்ணம் உள்ளன. இந்தக் கோரிக்கையை, இவ்வரசு பரிசீலித்து வேளாண்மை மன்றம் அமைக்க அனுமதி வழங்கும்.

வறுமையைப் போக்குவதென்பது, பசியைப் போக்குவதாகும். பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப இருக்கும் நிலத்தைக் கொண்டு உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற முனைப்போடு செயல்பட்டு வரும் வேளாண்மைத்துறை, உற்பத்தியைப் பொறுத்தவரை ஒரு எக்டேருக்கு 5 டன் நெல் என்ற இலக்கை எட்டிவிட்டது.

அதன் பயனாகச் சென்ற நிதியாண்டில் குறியீடான 70 இலட்சத்திற்கும் மேலாக, அதாவது 73.56 இலட்சம் மெ.டன் உற்பத்தி எட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதுடன், ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஒரு எக்டருக்கு 7 மெ.டன் நெல் உற்பத்தி செய்ய இத்துறை அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளும்.

✶ இதைப்போலவே 1997ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெய்த பெருமழையினாலும், வெள்ளத்தினாலும் மீண்டும் காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், திருவண்ணாமலை, தர்மபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் சில மாவட்டங்களில் விளைந்த நெற்பயிர்கள், சிறு தானியங்கள், பயறு வகைகளும், இதர பயிர்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டன. இதன்படி அதிகமாக நெற்பயிர்கள் 2,08,115 எக்டேர் பாதிக்கப்பட்டது.

நெற்பயிருக்கும், இதர பயிர்களுக்கும் 1996 டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட சேதத்திற்கு வழங்கப்பட்டது போல் ரொக்கமாக ரூ.528.843 இலட்சங்கள் வழங்கப்பட்டு 85,059 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். வெள்ள நிவாரண நடவடிக்கைகளில் விவசாயப் பெருமக்கள் கழக அரசின் கீழ் பெருமளவிற்குப் பயன் பெற்றுள்ளனர்.

**மரம் வளர்ப்புத் திட்டம்**

✶ **மக்கள் நலம் காக்க மழை வளத்திற்கு முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டம்** சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக தமிழகத்தில் 27 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 3 ஊராட்சி ஒன்றியங்கள் வீதம் 81 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 25 கி.மீ.தூரத்திற்கு புளி, வேம்பு போன்ற பயன்தரும் மரங்கள் ஊராட்சி ஒன்றியச் சாலைகளின் இருமருங்கிலும் நடப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு இத்திட்டத்திற்காக ரூ.7.35 கோடி நிதி ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும் 2 புதிய மாவட்டங்களான பெரம்பலூர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.58.8 இலட்சம் நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டது.



1997-98ஆம் ஆண்டு பிப்ரவரி வரை ரூ.492.826 இலட்சம் செலவில் 1,615 கி.மீ. தூரத்திற்கு மரக்கன்றுகள் சாலையின் இருபுறமும் நடப்பட்டு உள்ளன. இக்கன்றுகளுக்கு நீர் ஊற்றி பாதுகாப்பதற்குக் காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1998-1999ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

**சோதனை முறை பயிர்க்காப்பீட்டுத் திட்டம்**

✶ இயற்கைச் சீற்றத்தாலும் புயல், வெள்ளம், தீ, பூச்சிகளால் பயிர்ச்சேதம் போன்ற காரணங்களால் பயிர் விளைச்சல் பாதிக்கப்படும்போது அரசு நிவாரணம் ஒரு ஆறுதலுக்காக வழங்கப்படுகின்றதே ஒழிய விவசாயிகளின் முழுச் சேதத்தையும் வழங்க முடிவதில்லை.

பயிர்க்காப்பீட்டுத் திட்டம் கொண்டுவந்தால் இதுபோன்ற நேரங்களில் விவசாயிகளுக்குக் காப்பீட்டுத் தொகையைப் பெற வழி உள்ளது.

✶ தமிழ்நாட்டில் கடன்பெறாத சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளின் நலனுக்காகத் திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மத்திய அரசின் சோதனைமுறை பயிர் காப்பீட்டுத் திட்டம் 1997-98ஆம் ஆண்டு ரபி பருவம் முதல் செயல்படுத்தப்படுகிறது.

விவசாயிகளுக்குரிய காப்பீட்டுத் தொகையை 100 சதம் மானியமாக 8:2 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசால் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

**பள்ளிக்கல்வியில் வேளாண்மைப் பாடம்**

✶ 1997-98ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இத்திட்டம் கல்வி அமைச்சர் அவர்களோடு 3-7-97 மற்றும் 16-3-98 ஆகிய நாட்களில் கூடிய கூட்டத்தில் பள்ளிக் கல்வியில் வேளாண்மையை ஒரு பாடமாக வைப்பது என்ற கொள்கை முடிவை ஏற்று, அதற்கான பாடத்திட்டத்தைத் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தயாரிக்க அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழு தனது அறிக்கையை விரைவில் அரசுக்குச் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்மட்டக் குழுவின் அறிக்கை பெறப்பட்டவுடன் அரசு பரிசீலித்து, வரும் கல்வி ஆண்டிலேயே இத்திட்டத்தை செயல்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்**

✶ தமிழ்நாடு வேளாண்பல்கலைக்கழகம் 1971ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்டது.

வேளாண்பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்ட தன்னாட்சி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என அறிய **முதலமைச்சர் கலைஞர்** அவர்களின் அனுமதியோடு "ஒரு நபர் கமிஷன்" ஒன்றினை முதலமைச்சர் அவர்களைக் கலந்து விரைவில் நியமிக்கப்படும். 3 மாதத்திற்குள் அறிக்கை பெற்று, தேவையான சட்டம் மற்றும் விதிகளை மாற்றி அமைக்க இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**ஊரகக் குடிநீர்**

ஊரகப் பகுதிகளில் மக்கள் குடிநீருக்காக அல்லல்பட வேண்டாமெனத் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் மூலம் இதுவரை ரூ.4760.91 இலட்சம் செலவில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக் குடிதண்ணீர் வழங்கப்பட்டுள்ளது.

✶ வேளாண் பெருங்குடி மக்கள் தங்கள் விளைபொருட்களை விற்பனைக்குக் கொண்டுவர, வாகன வசதிக்காகச் சாலைகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. ஊரகச் சாலைகள் என்றாலே ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செய்யப்படும் சாலைகள் மட்டுமே என எண்ணிவிட வேண்டாம். தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்மூலம் இதுவரை ரூ.86.26 கோடி செலவில் 664 கி.மீ. நீளத்திற்குச் சாலைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இச்சாலைகள் மட்டுமின்றி, சர்க்கரைத்துறை மூலம் கரும்பு பயிரிடும் பகுதிகளில் கரும்பு உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்த கரும்பினை ஆலைகளுக்கு அனுப்பும் போது வசூலிக்கப்படும் செஸ் நிதியில் இருந்து அந்தந்த ஆலைப் பகுதிகளில் சாலை அமைத்துக் கொடுக்கப்படுகிறது.

### கரும்பு அபிவிருத்தித் திட்டம்

✶ இத்திட்டம் நீலகிரி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்டங்களைத் தவிர, அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய, மாநில அரசு 75:25 சதவிகிதத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

1997-98ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.196.55 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 1998-99ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

### சர்க்கரைத் துறை

✶ திராவிட முன்னேற்றக் கழகம் 1996ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் தி.மு.க.ஆட்சி பொறுப்புக்கு வந்தால் கரும்பு விலை ஒரு டன்னுக்கு ரூ.1000 வழங்க பரிசீலிக்கும் என அறிவித்து இருந்தது.

மத்திய அரசின் சட்டபூர்வ விலையைவிட, மாநில அரசு கூடுதலாக விலை பரிந்துரை செய்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

1996-1997ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு சட்டபூர்வ குறைந்தபட்ச விலை 8.5% சர்க்கரை கட்டுமானத்திற்கு ஒரு டன்னுக்கு ரூ.459 என அறிவித்து இருந்தது. ஆனால் மாநில அரசு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அனுமதியோடு 8.5% சர்க்கரை கட்டுமானத்திற்கு டன் ஒன்றிற்கு ரூ.599 என மாநில அரசின் பரிந்துரை விலையாகவும், அதுபோல் 20 கிலோ மீட்டர் வரை உள்ள தூரத்திற்கு வண்டி வாடகையை விவசாயிகள் ஏற்க வேண்டும் என்று இருந்ததை குறைத்து 10 கிமீட்டர் வரை உள்ள தூரத்திற்கு மட்டும் விவசாயிகள் ஏற்க வேண்டுமென்று குறைத்து தமிழக அரசு சலுகை வழங்கி உள்ளது.

மத்திய அரசின் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையை விட மாநில அரசின் பரிந்துரை விலை ரூ.140 அதிகமானதாகும்.

1997-98ஆம் ஆண்டிறக்கு மத்திய அரசு சட்டபூர்வ குறைந்தபட்ச விலை 8.5% சர்க்கரைக் கட்டுமானத்திற்கு ஒரு டன்னுக்கு ரூ.484.50 என அறிவித்து இருந்தது. ஆனால் மாநில அரசு பரிந்துரை விலை 8.5% சர்க்கரை கட்டுமானத்திற்கு ஒரு டன்னுக்கு ரூ.660 ஆக தமிழக அரசு உயர்த்தி வழங்கியுள்ளது.

மத்திய அரசின் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையை விட மாநில அரசின் பரிந்துரை விலை ரூ.175.50 அதிகம் ஆகும்.

### தோட்டக்கலை

✶ தமிழ்நாட்டில் பலவகைத் தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள் மற்றும் வணிக மலர்கள் பயிர் செய்வதற்கு உகந்த தட்பவெப்ப மற்றும் குளிர் மண்டல தட்பவெப்ப நிலைகள் தமிழகத்தில் இருக்கின்றன. தோட்டக்கலை பயிர்களின் பரப்பளவு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கத் தரமான நடவுச்செடிகள், விதைகள் மற்றும் இதர இடுபொருட்களை வழங்குவதோடு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளும் தோட்டக்கலை மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

- இவ்வாறு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் கூறியுள்ளார். ●

## சென்னையில் 15 தற்காலிக புறநகர் தீயணைப்பு நிலையங்கள்

தமிழகத்தில் கடந்த ஆண்டு தீ விபத்துக்களில் 187 பேர் இறந்துள்ளனர்; ரூ.73 கோடியே 28 லட்சத்து 69 ஆயிரம் மதிப்புள்ள சொத்துக்கள் சேதமடைந்தன.

கோடை காலம் தொடங்கியிருப்பதால் தீ விபத்துக்களைத் தடுக்க சென்னையில் மட்டும் 15 புறநகர் தீயணைப்பு நிலையங்கள் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் ஏப்ரல் 14ம் தேதி இந்தியாவில் கடைப்பிடிக்கப்படும் தீயணைப்புத் தொண்டு நாள், உலகத் தீயணைப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் 277 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. மொத்தம் 6500 பேர் பணிபுரிகின்றனர். சென்னையில் 12 நடமாடும் தீயணைப்பு நிலையங்கள் உள்ளன.

கடந்த ஆண்டு 13,670 தீ விபத்துக்கள் நடந்தன. வீடுகளில் 43 சதவீதத் தீ விபத்தும், தொழிற்சாலைகளில் 2.3 சதவீதத் தீ விபத்தும் மற்ற வகையில் 54 சதவீதத் தீ விபத்துக்களும் ஏற்படுகின்றன.

தீயணைப்புத் துறையினருக்குப் பயிற்சி அளிக்க தாம்பரம் அருகே ரூ.4 கோடியில் பயிற்சி அகாதெமி அமைக்கப்படுகிறது. ஆசிய அளவில் தீயணைப்பு வீரர்களுக்கு இங்கு பயிற்சி அளிக்கப்படும்.

தமிழகத்தில் 13 இடங்களில் தீயணைப்பு வீரர் குடியிருப்புகள் உள்ளன. தர்மபுரியில் ரூ.72 லட்சத்தில் 36 குடியிருப்புகள் தமிழக அரசால் கட்டப்படுகின்றன. ரூ.95 கோடியில் மேலும் 3141 குடியிருப்புகள் கட்ட, பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

தீ விபத்து மற்றும் தீத் தடுப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

தீயணைப்பு வீரர்களுடன் மக்களும் சேர்ந்து பாடுபட்டால் தீயை வெகுவிரைவில் அனைத்து, சேதத்தைத் தடுக்க முடியும். இவ்வாறு தமிழ்நாடு தீயணைப்புத்துறை இயக்குநர் வீ. ஜெயபெருமாள் தெரிவித்துள்ளார்.

# தேவை சீரிய தத்துவம் சிறந்த படைப்புகள்

தி.க. சிவசங்கரன்

**“வங்க எழுத்தாளர் மகாஸ்வேதா தேவிக்கு ஞானபீட விருது: நெல்சன் மண்டேலா வழங்கினார்”** என்னும் செய்தியைப் படித்தேன். அதையொட்டிச் சில சிந்தனைகள் எழுந்தன.

எதற்காக மகாஸ்வேதாவுக்கு இப்பரிசு ?

ஏன் அகிலனுக்குப் பிறகு - 20-25 ஆண்டுகளுக்குப் பிறகு - தமிழனுக்கு இப்பரிசு இன்னும் கிடைக்கவில்லை ?

சற்று சுயவிமர்சன ரீதியில் சிந்திப்போம்; ஆம்.நமது ஆணவம், மேட்டிமைத் தனம், குறுங்குழு வாதம் இவற்றை ஒதுக்கித் தள்ளிவிட்டுச் சிறிது யோசிப்போம்.

மகாஸ்வேதா தேவிக்கு இப்போது வயது 73; அவர் பாட்டாளி வர்க்கக் குடும்பத்தில் பிறந்தவரல்லர்; மத்தியதர வர்க்க, வங்கக் குடும்பத்தில் பிறந்தவர்; இன்னும் சொல்லப்போனால், எழுத்தாளர் குடும்பத்தில் உதித்தவர்; உயர்கல்வி பயின்றவர். சிறிது காலம் கல்வி நிலையங்களில் (பேராசிரியராக) பணியாற்றிவிட்டு, இலக்கியத்திற்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்தவர்.

இவரது 25க்கும் அதிகமான படைப்புகள், பல்வேறு இந்திய மொழிகளிலும், ஜப்பான், இத்தாலி மற்றும் பிரெஞ்சு மொழிகளிலும், மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன.

இத்தகைய சாதனைகள் இன்றைய தமிழ் எழுத்தாளர்களுக்கும் உண்டு; ஆனால், இவர்களில் எத்தனைப் பேர் மகாஸ்வேதாவைப் போல், இலக்கியப் படைப்பிலும், சொந்த வாழ்விலும் ஒளி விளக்காகத் திகழ்பவர்கள் ? தன்னலம் துறந்து, மக்கள் நலனுக்காக, அர்ப்பண உணர்வுடன் இயங்கிக்கொண்டிருப்பவர்கள் ? தமது எழுத்தை ஓர் இலக்கிய வேள்வியாக மாற்றிக் கொண்டிருப்பவர்கள் ? நாம் ஒவ்வொருவரும் சுய விமர்சனம் செய்துகொள்ள வேண்டும்...

மகாஸ்வேதாவின் படைப்புக்கள், உலகப் புகழ் பெற்றுள்ளன என்றால், அதற்குத் தகுந்த காரணம் உண்டு.

முதலாவதாக, மகாஸ்வேதாவின் சீரிய இலக்கியத் தத்துவம்; வாழ்க்கைத் தத்துவம். இது உலகு தழுவிய மனித நேயத்தையும், மனித விடுதலையையும் ஆதாரமாகக் கொண்டது.

சுரண்டல், அடக்குமுறை, ஒடுக்குமுறை, ஏற்றத் தாழ்வுகள் இன்றி, மனித குலம் விடுதலை பெற்றுக் கவுரவத்துடன், கம்பீரமாக, வளத்துடன், வாழ்வாங்கு வாழ வேண்டும்; மனித உரிமைகளுக்கான விடுதலைப் போராட்டத்தை எழுத்தாளன் உறுதியாக ஆதரிக்க வேண்டும்; இதுவே மகாஸ்வேதா தேவியின் இலக்கியக் கோட்பாடு; அவர் அயராது பின்பற்றும் வாழ்க்கை நெறி.

இந்தியாவை எடுத்துக்கொண்டால், தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் இவர்களின் விடுதலைக்காகவும், பெண் விடுதலைக்காகவும், இவரது பேனா சொற்சித்திரங்களைத் தீட்டுகிறது; கலைப்படைப்புகளை வழங்குகிறது.

இரண்டவதாக, இலக்கியத்தில் உயர்ந்த இலட்சியங்களைப் பேசுவதுடன் நின்றுவிடாமல், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், மகளிர் ஆகியோரின் விடுதலைப் பேராட்ட இயக்கங்களுக்குத் தோள்கொடுக்கும் வீராங்கனையாகவும் இவர் விளங்குகிறார். தமது ஞானபீடப் பரிசுப் பணத்தை, இந்த இயக்கங்களின் வளர்ச்சிக்குக் காணிக்கையாகவும் வழங்கிவிட்டார்.

எனவேதான், 1996 - ஆம் ஆண்டுக்கான ஞானபீடப் பரிசு இவருக்கு. அதுவும், தென்ஆப்பிரிக்காவின் தேச விடுதலைக்காக சுமார் 27 ஆண்டுகள் தனிமைச் சிறையில் உறுதியுடன் போராடியவரும், மாவீரர், என்னும் சொல்லுக்கு இலக்கணமாகத் திகழ்பவருமான நெல்சன் மண்டேலாவின் திருக்கரங்களால் - நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களுடன் வழங்கப் பெற்ற விருது இது.

ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு, வருங்காலத்தில் ஞானபீட விருது கிடைக்கவேண்டும் என்பதே என் விருப்பம்.ஆனால், அவன் மகாஸ்வேதா தேவியைப் போல் இலட்சியத்திலும், படைப்பாற்றலிலும், மிக உயர்ந்தவனாக, மிகச் சிறந்தவனாக இருத்தல் வேண்டும்; அத்தகைய எழுத்தாளன் நம்மிடையே உருவாகிக் கொண்டிருக்கிறான் என்றே நான் நம்புகிறேன்; முழுவீச்சுடன் அவன் வெளிப்படுவதற்கு இன்னும் பத்தாண்டுகளோ, பதினைந்து ஆண்டுகளோ ஆகலாம். இது காலத்தின் தீர்ப்புக்கு உரிய விஷயம்; எனினும் அந்தத் தனிப்பட்ட எழுத்தாளனின் தத்துவப்பார்வை, தலைசிறந்த படைப்புகள், அவை இந்திய மொழிகளிலும் உலக மொழிகளிலும் அங்கீகாரம் பெறுதல், மற்றும் நம்நாட்டின் அரசியல், பொருளாதார, சமுதாய, கலாச்சார சூழ்நிலைகள், வரலாற்றுப்

போக்குகள் முதலிய அம்சங்களும் முக்கியமானவை; அடிப்படையானவை.

வேறு ஒரு கோணத்தில் பார்த்தால், மகாஸ்வேதா தேவியின் வாழ்வும் படைப்புகளும்,. நமது மகாகவி பாரதியின் இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டவை என்றும் கூறலாம்.

**சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்** என்னும் குறிக்கோள்களைச் **சமூகநீதி, சமுதாய விடுதலை** இவற்றுக் கான போராட்டத்துடன் இணைத்தவன், நமது **மகாகவி பாரதி**. அவற்றை உயிர் மூச்சாகக் கொண்டு காலத்தால் அழியாத படைப்புகளைக் கவிதையிலும், உரை நடையிலும் தந்தவன் பாரதி.

ஆகவே, மகாஸ்வேதாவை, மகாகவி பாரதியின் உலகுதழுவிய இலக்கிய வாரிசு என்று நாம் பாராட்டலாம்!

என்னைப் பொறுத்தவரையில் எனது 50 ஆண்டு இலக்கிய வாழ்க்கைக் கண்ணோட்டத்தில், என்னால் ஒன்று கூற முடியும்.

வருங்காலத் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியும், எழுத்தாளனின் மேம்பாடும் பாரதி, பாரதிதாசன், வ.ரா., புதுமைப்பித்தன் ஆகியோரின் மரபை, வரலாற்றுக் கண்ணோட்டத்துடன், இயக்க இயல் பார்வையுடன் நாம் பின்பற்றுவதிலும், இந்த மரபை மேன்மேலும் செழுமைப்படுத்துவதிலும் அடங்கியுள்ளன.

இந்தப் பாதையில் செல்லும் எழுத்தாளன் ஞானபீடப் பரிசைப் பெறலாம். பெறாமலும் போகலாம்; அது முக்கிய விஷயமல்ல.

சொல்லப்போனால், அவன் பாரதியைப் போல், எண்ணற்ற துன்பங்களை அனுபவிக்கக்கூடும், நெல்சன் மண்டேலாவைப் போல், நீண்ட நெடுங்காலம், கொடிய சிறைவாசத்தைத் தாங்க நேரிடலாம்; சிலி நாட்டுப் பெருங்கவிஞன் பாப்லோ நெரூதாவைப் போல், ஏகாதிபத்தியவாதிகளின் துப்பாகிகளுக்கு இரையாகலாம்; எனினும், தமது மக்களுக்கு மட்டுமின்றி, உலக மக்களின் விடுதலைக்காகத் தமது படைப்பாற்றலை அர்ப்பணிக்கும் கலைஞனுக்கு அழிவேயில்லை.

இன்றைய (தமிழ்) எழுத்தாளன் மகாஸ்வேதா தேவியின் நிலைக்கு உயர வேண்டுமானால், என்ன செய்யவேண்டும்? கலை இலக்கியத் துறையில், கொள்கை அளவிலும், நடைமுறையிலும், அவன் ஒரு பஞ்சசீலக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். அவை வருமாறு :

1. தலித்தியம்
2. பெண்ணியம்
3. சுற்றுச் சூழலியம்
4. தமிழியம் (இதைத் தாய்மொழி இயம் என்றும் கூறலாம்.)
5. மார்க்சியம்

“

*இன்றைய (தமிழ்) எழுத்தாளன் உயர வேண்டுமானால், என்ன செய்ய வேண்டும்? கலை இலக்கியத் துறையில், கொள்கை அளவிலும், நடைமுறையிலும், அவன் ஒரு பஞ்சசீலக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். அவை வருமாறு:*

*1. தலித்தியம்*

*2. பெண்ணியம்*

*3. சுற்றுச் சூழலியம்*

*4. தமிழியம் (இதைத் தாய்மொழி இயம் என்றும் கூறலாம்.)*

*5. மார்க்சியம்*

”

இவை வறட்டுக் கோட்பாடுகளல்ல; அடிப்படை உரிமைகளை வலியுறுத்துகின்ற, ஆழமான தத்துவக் கோட்பாடுகள்; ஒவ்வொரு படைப்பாளிக்கும் கலைஞனுக்கும் இன்று தேவையான கோட்பாடுகள்.

இன்றைய வணிக இலக்கியச் சூழலிலும், நுகர்வுக் கலாச்சார மோகம் திட்டமிட்டு வளர்க்கப்படும் சூழலிலும், இந்தப் பஞ்சசீலக் கோட்பாடுகளை ஒரு படைப்பாளியால் பின்பற்ற முடியுமா?

முடியும். நிச்சயம் முடியும் (மனம் இருப்பின், மார்க்கம் உண்டு) ஆனால், அவன் ஒரு மகாஸ்வேதாவாக இருக்க வேண்டும்; அவரைப் போன்ற விழுமிய ஆளுமையைப் பெற்றிருக்க வேண்டும்; விட்டுக்கொடுக்காத மன உறுதியையும், தெள்ளத் தெளிந்த வாழ்க்கைத் தத்துவத்தையும், தீரம் மிக்க போர்க்குணத்தையும், தன்னலம் கருதாத பண்பட்ட உள்ளத்தையும் புரட்சிகரமான இயக்கச் சார்பையும் பெற்றிருக்க வேண்டும்.

இந்திய சுதந்திரத்தின் 50ஆம் ஆண்டு பொன்விழா, வருகிற ஆகஸ்டு 15ல் நிறைவடைகிறது; கி.பி. இரண்டாயிரம் இன்னும் ஒன்றறை ஆண்டுகளில் நம்மை எதிர் நோக்குகிறது.

வருங்கால இந்தியாவின் வரலாற்றை உருவாக்குவதில் தமிழ்ப் படைப்பாளிகளுக்கும் ஒரு மகத்தான பங்கு உண்டு; இதை நாம் தட்டிக் கழிக்கமுடியாது.

வங்கம் எப்போதும்போல, இப்போதும் நமக்கு வழிகாட்டுகிறது; இந்திய இலக்கியத்தின் திசைவழியை நிர்ணயிக்கும் சக்தியாக அது மிளிர்கிறது; அதற்கு ஓர் எடுத்துக்காட்டு, மகாஸ்வேதா தேவி!

**அவர் ஒரு மக்கள் கலைஞர். அவரது சீரிய தத்துவமும், சிறந்த படைப்புகளும் போற்றத்தக்கன. இன்றைய கால கட்டத்தில், அவை நமக்கு மிகவும் தேவை.**

❑ ❑ ❑

# உயிர் காப்போம்!

பி. இரஜியா பேகம்

☒ நடைபாதையெல்லாம்
இன்று
கடைவீதி ஆனதாலே
மக்கள் -
நடுவீதியிலேயே
நடமாடுகிறார்கள்!

☒ இதனால் -
தடுமாறும் வாகனங்கள்
நம்மைக்
கதிகலங்க வைக்கின்றன!

☒ சாலையில் போக வேண்டியவை
மனிதனின்
சரீரத்தின் மேல்
சவாரி செய்கின்றன!

☒ எமன் தற்போது
எருமையில் வருவதாக
எனக்குத் தெரியவில்லை!
அவனும்
லாரி பஸ்களில்
அவசர அவசரமாகத்தான்
வாரிச்செல்கிறான் - நம்மை!
அத்தனை முன்னேற்றம்
அவனிடத்திலும்!



☒ இருப்பதை விட்டுவிட்டு
பறப்பதையே
பிடிக்க நினைப்போர்
சிவப்பு விளக்கைச்
சிந்திக்காமல் - தாமே
சிவப்பு நிறமாய்
சிதறிப் போகிறார்கள்!

☒ வாகனத்தில் செல்வோர்
வானத்தில் பறப்பதாய்
கனவு கண்டுகொண்டே
குறைப்பதில்லை வேகத்தை!

☒ சாலையில் நடப்பதே - பெரிய
சாதனை
ஆகிவிட்டது
தற்போது!

☒ இதனால் தான்
வாகனத்தில் போவோர்
வகையாய்க் கேட்கின்றார்
வீட்டில் சொல்லிவிட்டா
வீதியில் வருகின்றாய்!

☒ பத்திரமாய் வீட்டிற்கு
வந்து சேரும்வரை
உத்திரவாதமில்லை
உயிருக்கு!

☒ இப்படியே போனால்
இனிமேல் -
அடுத்த தெருவுக்குப்
போவதானாலும்
அனைவரிடமும்
சொல்லிவிட்டுத்தான்
அடியெடுத்து வைக்கவேண்டும்!

☒ வாழ்க்கையில்
முந்திச் செல்லாமல்
வாகனத்தை
முந்த நினைத்து,
வாழ்க்கையையே
இழந்துவிடாதீர்கள்!

☒ இடதுபக்கமே போவதால்
இடையூறு இல்லை
எவர்க்கும்;
சிக்னல் காட்டித்
திரும்புவதால்
சிக்கலில்லை
யாருக்கும்!

☑ விதிகளைக் கடைப்பிடித்து
வீதியில் நடந்து - தலை
விதி நம்மைவிட்டு
விலகிடச் செய்வோம்!

☑ மகிழ்வுடன் வாழ - நம்
மதிகொண்டு - என்றும்
விதிகளை மதித்து
விபத்தினைத் தடுப்போம்!

☑ வாழ்க்கை வாழ்வதற்கே
தவிர -
வாகனத்தில்
தலைகொடுத்துத்
தானம் செய்வதற்கல்ல
நினைவிருக்கட்டும்!



★

# படைப்பின் தனிமை

**புதுமைப்பித்தன் சிறுகதைகள் பற்றிச் சில குறிப்புகள்**



தத்துவம் நம்மைச் சிந்திக்க வைக்கிறது. இலக்கியமோ நம்மைப் பற்றியெரியச் செய்கிறது. புதுமைப்பித்தனின் படைப்புகளை அணுகும் எவருக்கும் இதை விளக்கிச் சொல்ல வேண்டிய தேவை இருக்காது. வாழ்வில் பிடிபடாத அதிசயத்தைப் பிரமிப்போடும் வேட்கையோடும் பார்த்து அதன் சிடுக்குகளைத் தொடர்ந்து தொடர்ந்து சென்று, அந்த சாகசத்தில் சிலிர்த்தும், குழம்பி விரியும் அதன் அர்த்தமில்லாத் தன்மையில் சலித்தும் புதுமைப்பித்தன் கூறிச் சென்ற கதைகள் அவர் ஆசைப்படாத நித்தியத்துவத்தைச் சாத்தியப்படுத்துகின்றன.

ஒளிகொண்ட சொற்கள் தனிமையில் கிடக்கும்படி சபிக்கப்பட்டுள்ளன. எதிர் காலத்திலிருந்து நிகழ்காலத்தை நோக்கி எரிகற்களாய்ப் பாயும் அவற்றைக் காணும்போது தர்க்கம் மறந்துபோகிறது. தனக்குப் பிரியமான ஒருவரைத் தவறவிட்டு ஒரு மனிதன், தான் எதிர்கொள்ளும் எல்லா முகங்களிலும் தவறவிட்ட அந்த முகத்தைத் தேடுவது போல, அதைக் கண்டு பிடித்துவிட்டதாகத் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்வது போல ஒரு நிலையை உண்டு பண்ணுகின்றன அந்தச் சொற்கள். தனிமையான, தனித்துப்போன, ஒருமைக்குணம் கொண்ட படைப்புகள்- இப்படியான ஒளிகொண்ட சொற்களின் சேர்க்கைகளேயாகும்.

படைப்பின் தனிமையென்பது, சமூக அழுத்தத்தால் ஒரு மனிதனுக்கு உருவாக்கப்படும் தனிப்பட்ட அடையாளத்தைப் போன்றதல்ல. ஒரு மனிதன், அவன் செய்வதற்கும் சொல்வதற்கும் பொறுப்பேற்க வேண்டுமென்கிற சமூக நிர்ப்பந்தத்தால் உருவாகிறது அந்த அடையாளம். சமூக நிர்ப்பந்தத்தால் உருவாக்கப்படும் இந்த அடையாளம், அடுத்து - பிறரிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டிக் கொள்ளும் இச்சையாக மாறும்போது தனிமனிதவாதமாக உருவெடுக்கிறது. ஆனால் ஒரு படைப்பின் தனிமை என்பது அப்படியானதல்ல.

படைப்பாளி அவரது படைப்பிலிருந்து இங்கே விடுவிக்கப்படுகிறார். அது அவர் அறியாமலேயே நிகழ்கிறது. தனது படைப்பு முற்றுப் பெற்றுவிட்டதா இல்லையா என்பதை அவர் உணர்வதே இல்லை. "ஒரு கலைப் படைப்பு ஒரு போதும் முற்றுப் பெறுவதில்லை" என 'பால் வலெரி' என்ற கவிஞர் குறிப்பிட்டார். ஏனெனில், கலைஞன் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவதே இல்லை. வரையறுக்கப்பட்டதொரு வெளிக்குள் அந்தப் படைப்பு முடிந்துவிடுகின்றது. சூழல் தற்காலிகமாக

**ரவிக்குமார்**

ஒரு படைப்பை முடித்துவைக்கலாம். ஆனால், அங்கு விட்டதைக் கலைஞன் வேறொரு இடத்திலிருந்து தொடர்கிறான்.

ஒரு விதத்தில் படைப்புகள் என்பது புறவாழ்வுக்கெதிரான ஒரு செயல்பாடாக அமைகிறது. படைப்புக்குள் உருவாக்கப்படும் வெளி என்பது வெளியற்ற வெளியாகும். அது, யதார்த்த வெளியாகவும் இல்லாமல் கற்பித வெளியாகவுமில்லாமல் இருக்கிறது. ஒரு கண்ணாடிக்குள் பிரதிபலிக்கப்படும் பிம்பத்தினுள் தெரியும் இடத்தைப் போல இடமற்ற இடமாக இருக்கிறது அது. கண்ணாடிக்குள் நாம், இல்லாத நம்மைப் பார்க்கிறோம். இங்கே நாமும் யதார்த்தத்தில் இருக்கிறோம். கண்ணாடியும் இருக்கிறது. ஆனால், கண்ணாடிக்குள் தெரியும் பிம்பமோ இல்லாது இருக்கிறது. வெளியற்ற வெளிக்குள் தெரியும் பிம்பத்திலிருந்து யதார்த்தத்தில் நிற்கும் நம்மை நாம் நோக்குகிறோம். வெளியற்ற வெளியில் பட்டுத்தெறிக்கும் பார்வை நம்மை வடிவமைக்கிறது.

நிர்ணயிக்கமுடியாத, முடிவற்ற இந்த நிலை மனத்தின் முடிவற்ற நிலையுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. இப்படிச் சொல்வது கலைப் படைப்பைச் சிதிலப்பட்டதாக அர்த்தம் கொள்வ தாகாது. இத்தகைய ஒருமைத் தன்மைதான் ஒரு படைப்பை மற்ற எது வொன்றாலும் மாற்றீடு செய்ய முடியாத நிலைமையை உண்டாக்குகிறது.

யாருமே படிக்கமுடியாது, எவரும் புரிந்துகொள்ள முடியாது என்கிற அர்த்தத்தில் இந்த ஒருமைத் தன்மையை எடுத்துக்கொள்ளக் கூடாது. மாறாக, அந்தப் படைப்பு தன்னைத் திறந்து வைத்திருக்கும். அதை வாசிக்கும் ஒரு வாசகன் தானும் அப்படைப்பின் தனிமைக்குள் அமிழ்கிறான். அந்தப் படைப்பின் பலாபலன்களுக்குப் படைப்பாளியைப் போல வாசகனும் தன்னை ஒப்புக்கொள்கிறான்.

புதுமைப்பித்தன் படைப்புகள் பலவற்றிலும் இத்தகைய முற்றுப் பெறாது, நிர்ணயமற்ற தன்மை உருவாக்கும் தனிமையை நாம் உணரமுடியும். எங்கே துவங்குகின்றன, எங்கே முடிகின்றன என்பதை அனுமானிக்க முடியாத வேகத்தோடு தத்திச் செல்கின்றன அவரது சொற்கள்.

"சிற்பியின் நரகம்" முன் வைக்கும் காட்சிகள் அவை சடார் சடாரென்று மாறி விரியும்போது பின்னிச்செல்லும் தத்துவங்கள். 'சாத்தன் திடுக்கிட்டு விழிக்கிறான். என்ன பேய்க் கனவு! சீ என்று விபூதியை நெற்றியில் அணிந்து கொள்கிறான். பைலார்க்கஸின் நினைவு வருகிறது. சாத்தனின் மனம் சாந்தி பெறவில்லை.' இப்படி கதை முடிகிறது. ஆனால் அங்கிருந்த இழைகளை எடுத்து

ஒரு படைப்பாளி தனது பூரணமான படைப்பை ஒருபோதும் படிப்பதில்லை. படைப்பு என்பது இவ்வாறாக அவன் வாழவே முடியாத ஒரு இடமாக - இடமற்ற இடமாகத் தோற்றம் தருகிறது.

மற்றவற்றோடு பிணைத்து கதையைத் தொடரும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறான் வாசகன்.

"கலியாணி" என்கிற படைப்பும் இப்படித்தான். முடிவற்ற ஒரு முடிவை நம்மிடம் தந்துவிட்டு நகர்கிறது. அர்ச்சகருக்கு இரண்டாம் தாரமாய் வாழ்க்கைப்பட்டு விடும் கலியாணி இயற்கையில் பரிபூரண சக்தியும் சோபையும் கொந்தளிக்கும் நிலையில் உள்ளவள். ஆனால் அர்ச்சகருக்கு அது புரியவில்லை. சுந்தரசர்மா என்கின்ற ஓவியர் அங்கு வந்து சேர்கிறார். அவளது உள்ளத்து உணர்வுகளைப் புரிந்து கொள்கிறார். மனித நாற்றமே அற்ற இடத்திற்குச் சென்றுவிடுவோம் என அவளை சர்மா அழைக்கிறார். "ஐயோடி, அது முடியாது" என்கிறாள் கலியாணி. "கலியாணியின் வாழ்க்கை அலையில் ஒரு குமிழ் உடைந்து போயிற்று"- என்ற வரியோடு முடியும் அந்த படைப்பு, அடுத்து தோன்றும் குமிழ்களைப் பற்றிய கற்பனையை வாசகனிடத்தில் விட்டுவிடுகிறது.

படைப்பாளி தான் விரும்புவது போல் தனது படைப்பை முன் வைக்க விரும்புகிறான். ஆனால் அந்த முயற்சியின் இறுதியில் அவனுக்குக் கிடைப்பது வார்த்தைகளின் கூட்டம்தான். மற்றொரு படைப்பில் தனது எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள முடியுமென அவன் நம்புகிறான். ஆனால் படைப்போ அவனை ஒதுக்கி உதாசீனப்படுத்திவிட்டுத் தன் போக்கில் சென்றுவிடுகிறது. இப்படித் தொடரும் படைப்புச்செயல் ஒரு விநோதமான முரண்பாட்டை உண்டாக்குகிறது. மரணத்தை வெல்லும் நித்தியத்துவம் பற்றிய கற்பனையில் ஆசுவாசப் படுவதற்கு விழையும் படைப்பாளி அந்தப் படைப்புச் செயலின் இறுதியில் மரணத்தையே எதிர் கொள்கிறான். முற்றுப்பெற்ற தனது படைப்பைக் காண அவன் உயிரோடு இருப்பதில்லை. இதையே வேறுவிதமாகக் கூறினால், ஒரு படைப்பாளி தனது பூரணமான படைப்பை ஒருபோதும் படிப்பதில்லை. படைப்பு என்பது இவ்வாறாக அவன் வாழவே முடியாத ஒரு இடமாக - இடமற்ற இடமாக தோற்றம் தருகிறது. இப்படித்தனது படைப்பைத் தான் வாசிக்கமுடியாத ஒரு நிலைதான் படைப்பாக்கம் உருவாக்கித்தரும் வினோத விதி. இங்கேதான் வாழமுடியாத இடமற்ற இடத்தை எழுத்தின் மூலமாக எட்ட முயற்சிக்கும் படைப்பாளிக்கு எழுதுவது தவிர வேறு மாற்றம் கிடையாது, எழுதும்போதே விலகிச் செல்லும் படைப்பு மீண்டும் அவனைத் தனிமையிலேயே கிடக்கும்படி சபிக்கிறது. இப்படியாக, தனது படைப்பாகச் செயல்பாட்டின் இறுதியில், மீண்டும் தொடக்க நிலைக்கே அவன் வந்து சேர்கிறான்.

தனது படைப்பை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாத ஒரு நிலைதான் அவனை மீண்டும் மீண்டும் எழுதத் தூண்டுகிறது. "படைப்பாளியின் நோக்கம் அவனது வாழ்க்கையோடுதான் முடிகிறது என்று சொல்வது, அவனது நோக்கத்தினூடாகநித்தியத்துவமென்னும் பேரழிவை நோக்கி அவனது வாழ்க்கை பாய்ந்துசெல்கிறது, என்ற உண்மையை மறைத்துவிடுகிறது" என்றார் மாரீஸ் ப்ளான்ஷோ (Maurice Blanchot).

எழுதுதல் என்கிற வினை எழுத்தாளனின் தான் என்ற சுயத்துக்கும், வார்த்தைக்கும் இடையிலான பிணைப்பைத் துண்டித்து விடுகின்றன. இதனால் எழுத்தாளன் மற்றவர்கள் பேசாத ஒரு மொழியைப் பேசவேண்டியதாகிறது. அந்த மொழி யாரையும் நோக்கியதல்ல, அது எதையும் வெளிப்படுத்திக் காட்டுவதுமில்லை. அது படைப்பாளியானவன் தன்னை, தனது அடையாளத்தைத் தொடர்ந்து அழித்துக்கொள்ளும் செயல்பாட்டின் விளை பொருளாகத் தோற்றம் கொள்வது. புதுமைப் பித்தனின் படைப்புகளை வாசிக்க மொழி பற்றிய இத்தகைய அணுகுமுறை அவசியமாகும்.

"நித்தியத்துவத்துக்கும் மரணப்பாதையின் சுழலுக்கும் மத்தியிலுள்ள விளைவுக்கோட்டின் எல்லை வெளியான இடைவெளியில் நின்று - அதாவது, ஆசையற்ற ஒரு குழந்தையின் மனநிலையில்" புதுமைப்பித்தனின் படைப்புக்களை அணுகுவது முக்கியம். மாறாக, ஒருமைத் தன்மை கொண்ட இத்தகைய படைப்புகளைத் தத்தமது அரசியல் பரிவர்த்தனைக்குள், இழுத்துப் போடச் செய்யப்படும் முயற்சிகள், பிரம்மராட்சஸ் கதையின் முடிவில் எஞ்சும் எலும்புக் கூடுகளைப் போல வெறும் கோட்பாடுகளாகவே எஞ்சிக் கிடக்கும். ★

# 1300 ஆண்டுகட்கு முற்பட்ட அரிய பொருட்கள்

நாகை மாவட்டம் பூம்புகார், இராமநாதபுரம் மாவட்டம் அழகன்குளம், பெரியார் மாவட்டம், கொடுமணல் ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் தொல்பொருள் ஆய்வுத்துறை அகழாய்வு செய்துவருகின்றது.

இம் மூன்று இடங்களிலிருந்தும் தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபுகளை அறிந்துகொள்ளும் வகையிலான விலைமதிப்பில்லாச் சான்றாதாரங்களான அரிய தொல்பொருட்கள் கிடைத்துவருகின்றன.

வழக்கம்போலவே இம்முறையும் இவ்வாறான அரிய வரலாற்றுச் சான்றுகளைத் தருவதில் முதலிடம் வகிப்பது அழகன்குளம் ஆகும்.

இங்கு யானையின் உருவம் ஒருபுறமும் மீன் சின்னம் மறுபுறமும் பொறிக்கப்பட்ட சதுரச் செப்புக் காசு கிடைத்துள்ளது. இது பாண்டியர் காலக் காசாகும். கி.மு.3 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது இக்காசு.தவிர, ஒருவகை மென்கல்லால் ஆன எடைக்கல், பல வடிவங்களில் அமைந்த விலை மதிப்பில்லாக் கல்மணிகள், சங்கு வளையல் துண்டுகள், பண்டைய தமிழ் எழுத்துக்கள் பொறித்த கருப்பு சிவப்புப் பானையோடுகள், புள்ளிவட்டம் பெற்றுள்ள பானையோடுகள் ஆகியனவும் இங்கு கிடைத்துள்ளன.

## அரிய பானையோடு

கிடைத்துள்ள அரிய மணிகளுள் மத்தளம், நெல்லிக்காய் வடிவிலான மணிகள் கண்ணைக் கவர்வன. எழுத்துப் பொறிக்கப்பட்ட பானையோடுகளுள் ''தானிய தூவரைமா(ன்)'' என்று பொறிக்கப்பட்டுள்ள பானையோடு குறிப்பிடத்தக்கது.



பண்டைய வரிவடிவத்தில் அமைந்துள்ள இவ்வெழுத்துக்களில் உயிர்மெய்யெழுத்தில் காணப்பெறும் படுக்கைக் கோடுகள் குற்றெழுத்துக்களைச் சுட்டுகின்றன என்று கொண்டால் மேற்கூறிய வாசகத்தைத் "தனி துவரைமான்" அதாவது "தனித்தன்மை வாய்ந்த அல்லது சிறப்பு வாய்ந்த துவரைமான்" என்று பொருள்படும். துவரைமான் என்றால் துவரையின் மகன் என்று பொருள் தருகிறது.

துவரை என்பது துவாரகையின் தமிழ் வடிவம். எனவே இம்மட்கலத்தை வைத்திருந்தவன் இறைவன் கண்ணபிரானின் பரமபக்தனாக இருந்திருத்தல் வேண்டும் என்று கூறுகிறார்கள்.

மேற்காணும் பொருட்கள் தவிர, செங்கல்லால் ஆன நீர் வடிகால் ஒன்றும் வெளிப்படுத்தப்பட்டது. இவ்விடத்தில் துறையின் துணை இயக்குநர் திரு.கு.தாமோதரன் அவர்களின் மேற்பார்வையில் திருவாளர்கள் ச.செல்வராஜ், நா.கணேசன் ஆகியோர் அகழாய்வு மேற்கொண்டுள்ளனர்.

## கொடுமணல் அகழாய்வு

அடுத்து அகழாய்வு செய்யப்படும் இரண்டு இடங்களுள் கொடுமணல், எழுத்துப் பொறிக்கப்பட்ட பானையோடுகள், குறியீடுகள் கொண்ட பானையோடுகள், எலும்பாலான அம்புமுனை ஆகிய அரிய பொருட்களையும், பூம்புகார், மிக அழகிய சுடுமண் பொம்மைகளையும், விலை மதிப்பில்லாக் கல்மணிகளையும் தந்துள்ளன.

கொடுமணலில் கிடைத்துள்ள பானையோடுகளில் உள்ள எழுத்துகளில் வரிவடிவம் ஆந்திர மாநிலம் பட்டிப்புரோலுவில் கிடைத்த கி.மு.2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டோடு ஒத்துள்ளதைப் பார்க்கையில், தமிழகத்தில் கிடைக்கும் பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகளை மேலும் ஆழ்ந்த ஆய்வு செய்ய வேண்டுமென்று எண்ணத் தோன்றுகிறது.

இவை தவிர, கொடுமணல் அகழாய்வுக் குழி ஒன்றில் சுடுமண் குழாய்களால் அமைக்கப்பெற்ற குடிநீர்க் கால்வாய் அமைக்கப்பட்டிருப்பதும் கண்டறியப் பட்டுள்ளது.

## கண்டெடுத்த தலை

பூம்புகாரில் கிடைத்துள்ள சுடுமண் பொருட்களுள் ஓர் உருவத்தின் தலைப்பகுதி தனிச்சிறப்புடையது; ஆம், தலைப்பகுதி மட்டுமே கிடைத்திருக்கிறது. எனினும், அதன் முழுமையான உருவம் எவ்வளவு எழில் மிகுந்ததாக இருந்திருக்கக்கூடும் என்பதை அத்தலைப் பகுதியைக் கொண்டே உய்த்துணர முடிகிறது.

இவ்வுருவின் முகம் குழந்தையைத் தேற்றும் கனிவான தாயின் முகம் போலக் காணப்படுகிறது. இதழில் மென்னகை, கவர்ந்திழுக்கும் காந்தக் கண்கள், பிற்காலப் பல்லவர் அல்லது முற்காலச் சோழர் கலை மரபினுக்கே உரிய மூக்கு மற்றும் உருவத்தின் முகப்பகுதி முழுவதுமே அமைதி தவழும் வகையில் அமைந்துள்ளது.

மேலும் இங்கு கிடைத்துள்ள காளை, யாளி ஆகிய சுடுமண் உருவங்களும் குறிப்பிடத்தக்கவையாகும்.



தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் திரு.அ.அப்துல்மஜீத் அவர்களின் மேற்பார்வையில் பூம்புகார் அகழாய்வினை அகழாய்வாளர்கள் திரு.க.குழந்தைவேலன், திரு.இரா.முத்து ஆகியோரும், கொடுமணல் அகழாய்வினை அகழாய்வாளர்கள் திரு.இரா.செல்வராசு, திரு.பொ.கௌதமபுத்திரன் ஆகியோரும் மேற்கொண்டுள்ளனர். ★

# மணமகள் தேவை



## கி.ராஜநாராயணன்

எனக்குக் கலியணமாகி பேரம்பேத்தியெல்லாம் எடுத்தாச்சி. ஆனாலும், 'மணமகள் தேவை' காலத்தைப் பத்திரிகையில் ஒருபார்வை பார்க்கிற வழக்கம் இருக்கிறது!

ஒரு நாள் இப்படிப் பார்த்துக் கொண்டிருந்தபோது "சம்பிரதாய வித்தை தெரிந்த ஒரு பொண்ணுக்கு, சம்பிரதாய வித்தைகள் அறிந்த ஒரு மணமகன் தேவை" என்றிருந்தது.

"என்னத்தப் படிச்சி மண்ணள்ளிப் போட்டாலும் நமக்குத் தெரியாத வார்த்தைகள், விசயங்கள் இருக்கத்தான் செய்யுது; என்ன எளவு கொண்டாட" என்று வருத்தத்தோடு முகம் திரும்பியபோது, கழனியூரன் வந்து கொண்டிருப்பது தெரிந்தது வாசல் பக்கம்.

'வாங்க வாங்க' என்று உபசரித்து உட்கார வைத்துப் பேசிக்கொண்டிருந்தபோது, பத்திரிகையை அவர் பக்கம் நீட்டி, "இது என்னென்னு பாருங்க"ன்னு காட்டினேன். நாலு திக்கும் போயி வந்தவர். நாலா தண்ணியும் குடிச்சவர். இவருக்குத் தெரியாமல் இருக்காது' என்று நினைத்துக் கொண்டிருந்தபோது, "தெரியலையே" என்று பதில் வந்தது என்றாலும்," இது பற்றி ஒரு கதையிருக்கு" என்றார்.

"அதெச் சொல்லும் முதல்லெ" என்று கேட்டேன். "ஒரு ஊர்ல ஒரு கலியாணம் ஆகாத ராசா இருந்தாராம்", என்று ஆரம்பித்தார்.

"சரி" என்று ஆட்டினேன் தலையை.

"ஒரு நா ராசா, மந்திரியக் கூப்பிடனுப்பி, வேய் எனக்குக் கலியாண ஆசெ வந்துட்டது. ஒரு நல்...ல பொண்ணா பாரும்ன்னார்"

"எப்படியான பொண்ணு இருக்கணும்"ன்னு கேட்டார் மந்திரி.

சம்பிரதாய வித்தைன்னா என்னென்னு கேக்க மந்திரிக்குப் பயம்.

ராசா எது சொன்னாலும் முதல்ல யாருஞ் சொல்லவேண்டியது

"சரி!"

மந்திரியும் அதைத்தாம் சொன்னார்.

நே... ரெ வீட்டுக்கு வந்தார். பொண்டாட்டியக் கூப்பிட்டு, "அடியே... ஒனக்கு சம்பிரதாய வித்தைன்னா என்னதுன்னு தெரியுமா"ன்னு கேட்டார்.

"யாரு கண்டா அந்தக் கருமாந்திரத் தயெல்லாம்; முதல்ல காலுகையெக் களுவிட்டுவாங்க; சோத்த போடுதம்"ன்னா. மந்திரிக்கு வெறுத்துப் போச்சி. தட்டத்துல சோத்தைப் போட்டு வச்சிருக்கு. மந்திரி முகட்டை வெறிச்சிப் பார்த்துகிட்டிருக்காரு.

மந்திரி மகன் வந்தாம். அப்பா சாப்பிடாம இப்படி இருக்கதப் பார்த்துட்டு, "என்னப்பா சங்கதி" ன்னு விசாரிச்சாம். இன்னதுன்னு மந்திரி சொன்னார்.

"இம்புட்டுத்தானா; இதுக்குத்தாம் இந்தக் கவலையா? நீங்க பேசாம வீட்டுக்குள்ளெயே இருங்க. நாம் போயி அப்படியான அந்தப் பொண்ணெப் பார்த்துட்டு வாரே"ன்னான்.

மந்திரி மகன் அந்தப் பொண்ணெத் தேடி தேசாந்திரம் புறப்பட்டுப் போனான். காடுவனம் வனாந்திரப் பாதை வழியா இப்படிப் போறப்போ, வழித்துணைக்கு ஒருத்தர் கிடைச்சார். அவரோட பேசிக்கிட்டே ரெண்டு பேரும் நடந்து போயிக் கிட்டிருக்காங்க. அப்பொ, இவங்களுக்கு எதரெ ஒருத்தன் வந்தான். கூட வந்தவர், "தம்பி யாரோ வர்ற மாதிரி தெரியி"தென்னார்.

அந்தக் காலத்துல திருட்டுப்பயம், கொள்ளைக்காரங்க பயம் அதிகம்.

மந்திரி மகன் சொன்னான் "இவனா; இவன் வேறயாருமில்ல பிணம்"ன்னான்.

அவருக்கு இது விளங்கல; இருந்தாலும், சரி இருக்கட்டும்னு மனசுக்குள்ள நினைச்சுக் கிட்டார்.

கொஞ்சதூரம் போனாங்க.

எதுக்கெ ரெண்டு பேர் வந்தாங்க.

"தம்பி இவங்க யாருன்னு தெரியலையே" -ன்னு கேட்டார்.

"இவங்களா; இவங்க ரெண்டு பேரும், ஒன்னு பிணம்; மத்தவன் பிணங்காத்தான்" -ன்னார்!

இதும் அவருக்கு விளங்கல.. சரி, இருக்கட்டும்ன்னு நினைச்சுகிட்டார்.

இன்னுங் கொஞ்சதூரம் நடந்து போனாங்க.

கொஞ்சதூரத்துல எதுக்க மூணுபேரு வந்தாங்க.

"தம்பி மூணு பேர் வர்றாங்களே இவங்க யாராயிருக்கும்"ன்னு கேட்டார்.

"ஊரெழுப்பி"ன்னு பதில் சொன்னாம் மந்திரி மகன்.

இதும் அவருக்கு விளங்கல!

சரி; இருக்கட்டும்னு நினைச்சிக்கிட்டே நடந்து போயிக்கிட்டிருக்கும்போது, நாலு பேரு வந்தாங்க. இவங்க யாருன்னு கேட்டாரு இவர்.

"ராஜா"ன்னு பதில் வந்தது.

இதுக்குள்ள அந்த வழித்துணைக் காரரோட ஊர் வந்துவிட்டது. நுழையிற பாதையில சத்திரம் இருந்தது. மந்திரி மகன் அதுக்குள்ளே போயிட்டாம். இவரு ஊருக்குள்ளெ போயிட்டார்.

வீட்டுக்கு வந்த அந்த வழித்துணைக் காரருக்கு ஒரே அதிசயம், வேடிக்கை, இதெ யாரிட்டயாவது சொல்லித் தீர்க்கணும்.

தன்னோட மகளெக் கூப்பிட்டார். "யம்மா இங்க வா. கேளு இந்த வேடிக்கைய"ன்னு, நடந்ததெ அப்பிடியே சொன்னார்.

அவரோட மக மகா புத்திசாலி.சம்பிரதாய வித்தைகள்ளாம் தெரிஞ்சவ. அறிவிலேயும் அழகுலயும் ரொம்பக் கூடுனவ.

எல்லாத்தையும் கேட்டுட்டு, "அப்பா அவரு சொன்ன ஒவ்வொண்ணுக்கும் ஒரு அர்த்தம் இருக்கு. விவரமாச் சொல்றோம், கேட்டுக்குங்க"ன்னு சொல்லி,

"முதல்ல வந்தவனெப் பிணம்ன்னு ஏஞ்சொன்னார்ன்னா, அந்த அத்துவானக் காட்டுல தனிய ஒருத்தன் போனா, எது நேர்ந்தாலும் அது அவனோட முடிஞ்சி போயிரும்; வெளியே தெரியாது. அப்பிடிப் போறவனெ ஒரு பாம்பு கடிச்சாலுஞ் சாவவேண்டியதுதாம். பிணமாத்தங் கிடக்கணும். அதாம் அப்படிச் சொன்னது"ன்னா.

சரிதான்னு பட்டது அவருக்கு.

ரெண்டுபேர் வந்தபோது, "பிணாங்காத்தான்னு சொன்னாரெ ?"

ரெண்டு பேர் வந்தாலும் பயனில்லெங்கிறதுதான்! பிணமாக் கிடக்கிறவனெக் காத்துக்கிட்டுத்தான் கிடக்கணும் அவனும். அத்துவானக் காட்டுல அந்தப் பிணத்தை விட்டுட்டுப் போனா காட்டுநாய்க! நரிக வந்து தின்னுட்டுப் போயிரும். அதனாலதாம் ரெண்டாமவனெ "பிணங்காத்தான்னு" சொன்னது.

அதுசரி; மூணு பேரு வந்தாங்களே அதெ, ஊரெழுப்பின்னு சொன்னது எப்படி ?"

"முதலாமவன் பிணம், ரெண்டாமவன் காத்தான், மூணாமவன்தான் ஊருக்குள்ளெபோயி ஆட்களெ எழுப்பிக்கொண்டாராணும். அதனால தான் ஊரெழுப்பி"

"ஓஹொ"; சங்கதி அப்படியா. செரி செரி நாலமவன் வந்தப்பொ (நாலுபேரும் சேர்ந்து) 'ராஜா'ன்னு சொன்னானே ?

அதுக்கு மகள் சொன்னா; "நாலாவது ஆள் ராசாயில்லெ; பிணமா இருந்தவன் ராசா!"

"எப்படி அது ?!"

"நாலு பேராயிருந்தா, செத்துப் பிணமாக்கிடக்கிறவனெ தலைமாட்டுல ஒருத்தம் கால்மாட்டுல ஒருத்தம் நடுவுல ஒருத்தம்ன்னு மூணுபேரும் சேர்ந்து தூக்கிட்டுப் போயிருவாங்க. பிணமாக்கிடந்து நாறவேண்டாம். செத்தாலும் அவன் ராசாதானெ!



அந்த மகளெப் பெத்த அப்பனுக்குத் தன்னோட மக சாமர்த்தியத்தெப் பார்த்துப் பிரமிச்சிப்போயிட்டார்.

பிறகு, மக கேட்டா, “உங்ககூட வந்த அந்த ஆளு எங்கெ ?”

“நம்ம ஊரு சத்திரத்துல தங்கியிருக்காம்” - ன்னார் அப்பா. சரீன்னு சொல்லி மக அவரிட்டெ ஒரு துட்டக் கொடுத்து கடையில போயி முன் நக்கி பின்நக்கி வாங்கிட்டு வாங்க”ன்னா. அவருக்கு அது விளங்கலெ. என்ன சொல்றான்னு முளிச்சார். நீங்க போயி கேளுங்கப்பா; தருவாங்கன்னா. சரீன்னு புறப்பட்டுப் போனார்.

ஒவ்வொரு கடையாகப் போயி, ஒரு துட்டுக்கு முன்நக்கி பின்நக்கி கொடுங்கன்னு கேட்டார். கடைக்காரங்களுக்கும் அது என்னதுன்னு தெரியல. ஆனாலும் கெத்துவிடாம, நாளைக்கி வாங்க கிடைக்கும்ன்னாங்க (எதும், இல்லேன்னு சொல்லமாட்டாங்க; சொன்னா அப்படியே இல்லாதவங்களா ஆயிருவோம்ன்னு நம்பிக்கை).



இந்தப் பேருலதாம் ஏதோ கோளாறு இருக்கு. அது என்னதுன்னு மகளும் சொல்லமாட்டேங்கா; நமக்குந் தெரியல. ஒருவேளை அந்த சத்திரத்துல இருக்க இளவட்டத்துக்குத் தெரிஞ்சிருக்கும்; போயிக் கேப்போம்ன்னு போனார். அதேபடியா அவனும் இருந்தாம். கொஞ்சநேரம் உக்கார்ந்து பேசிக்கிட்டிருந்தாங்க. அவஞ் சொன்ன வார்த்தைகளுக்கெல்லாம் தன்னோட மகள் சொன்ன அர்த்தத்தை அவங்கிட்டெச் சொன்னார். அப்பதாம் தெரிஞ்சது அவனுக்கு; நாம தேடிவந்த ‘சம்பிரதாய வித்தை’ தெரிஞ்ச பொண்ணு இவதாம்ன்னுட்டு.

அவரிட்டெ அந்த மந்திரிமகன் சொன்னாம், “என்னோட கடைக்கு வாங்க, நா அந்த பின்நக்கி முன்நக்கிய வாங்கித் தாரே”ன்னு கூட்டிட்டுப் போயி தேன் வாங்கி அவரு கையைப் பிடிக்கச் சொல்லி ஊத்தினாம். தொன்னையில வாங்கின தேனை அவரோட இடது கையில் கொடுத்து வீட்டுக்கு அனுப்பிவச்சாம். இடது கையில இருந்த தொன்னையில உள்ள தேன் அப்பிடியே இருந்தது”. வலது கையில் ஊத்துன தேன் புறங்கை வழியா வழிய ஆரம்பிச்சதும், வம்பாக் கீழெபோகுதேன்னுட்டு நக்க ஆரம்பிச்சப்பொ, முன்கைத் தேனும் வழிய ஆரம்பிச்சது. ஆக் ரெண்டு பக்கமும் நக்கி சுத்தப்படுத்தினார். இப்பொ விளங்கிப் போச்சி; இது முன் நக்கி பின் நக்கி தாம்ன்னுட்டு சிரிப்புத்தாங்கல அவருக்கு.

மகள் சொன்னா, “அப்பா அவரெ நம்ம வீட்டுக்கு சாப்பிடக் கூப்பிடுங்க.”

போயி, அப்பா அவனெக் கூட்டிட்டு வந்தார். வாசலுக்கு வந்து மகள் அவனை வாங்கன்னு சொன்னா. அவளைப் பார்த்து மந்திரிமகன், இது வந்த வாசலா வராத வாசலான்னு விசாரிச்சாம். இது வராதவாசல் தான்ன்னு பதில் சொன்னான்.

கால் கை கழுவ சொம்பில் தண்ணீர் கொண்டுவந்து வைத்தாள்.

இது தொட்ட சொம்பா தொடாத சொம்பான்னு கேட்டாம். தொடாத சொம்புன்னு பதில் வந்தது.

பாய்தந்து விரித்து உட்காரச் சொன்னாள். விரிச்ச பாயா விரிக்காத பாயான்னு கேட்டாம்.

விரிக்காத பாய்ன்னு பதில் சொன்னா.

பாயில உக்காந்தவனுக்கு விருந்து படைச்சா. திருப்தியா சாப்புட்டு முடிச்சாம். தாம்பூலம் கொடுக்கும்போது, யாரும் தரியாத தாம்பூலம்ன்னு தந்தா.

எல்லோரும் கொஞ்சநேரம் உக்காந்து பேசிக்கிட்டிருந்தபோது, மந்திரிகுமாரனைப் பார்த்து அவ, நீங்க நாடுவிட்டு நாடு வந்த விசயம் என்னன்னு கேட்டா. அவன் நடந்த கதைய எல்லாம் விவரமாச் சொன்னான். சரி; அப்பிடின்னா வாங்க உங்க நாட்டுக்குப் போவம். போயி, உங்க ராசாவுக்கு நம்ம சம்பிரதாயவித்தையக் காட்டுவோம்னா அவ.

ஊருவந்து சேந்தாக. ஊர் வாசல்ல இருக்கிற அம்மன் கோயிலுக்குப் பக்கத்துல இருக்கிற கால்வாய்க் கரையோரம் ராவோட ராவா ஒரு விஸ்தாரமான குடிசையைக் கட்டி அதுல அவமட்டும் தனியா இருந்துக்கிட்டா. மறுநா காலையில முதஆளா ஊத்தலையாரி வந்தாம். யாரு இங்க குடிசை போட்டு இருக்கதுன்னு விசாரிச்சாம். வேறயாரு மில்லை. தனியா ஒரு பொண்ணு அழகுப் பதுமையா இருக்கதைப் பார்த்தாம். ஓம்மேல ஆசைப்பட்டு வந்தேம்ன்னான். அப்பா இது

பகலு; ராத்திரிக்குப் பாக்கலாம்ன்னா. அது வரைக்கும் என்ன செய்வோம்ன்னு கேட்டாம். புறவாசப் பக்கம் ஒரு மூட்டைக் கேப்பையும் திரிகையும் இருக்கு; திரிச்சிக்கிட்டு இருன்னாள். சரின்னு போயி திரிக்க உக்காந்துட்டாம். அந்த குடிசை வீட்டுக்குப் பக்கத்துலேயே மந்திரி குமாரன் மற்றவர் கண்ணுக்குத் தெரியாம மறைஞ்சிருந்து காவல் காத்துக் கொண்டிருந்தாம்.

இளம் மத்தியான நேரத்துல அந்த ஊரு கர்ணம் வந்தார். யாரு இங்கெ தனியா குடியிருக்கதுன்னு விசாரிச்சார். அவளெப் பார்த்தாரோயில்லியோ சொக்கிப் போயிட்டார். யேத்தா நீ இப்பிடி ஒரு பொண்ணு இருக்கது இத்தினிநா தெரியாமப் போச்சேன்னு வருத்தப்பட்டார். சரி; எப்பொ வச்சிக்கி டுவன்னு கேட்டார். ராத்திரிக்கு வாங்கன்னா இவ. அதுவரைக்கு என்ன செய்யன்னு கேட்டார்.

வீட்டுக்குப் பொறத்தால புழுங்க நெல்லு ஒரு மூடை கிடக்கு. பக்கத்துலயே குந்தாணியும் உலக்கையும் இருக்கு. எடுத்துப் போட்டு குத்தி அரிசி ஆக்குங்க. ராத்திரிச் சாப்பாட்டுக்கு அந்த அரிசிதாம்ன்னா.

கர்ணம் போயி நெல்லுக் குத்த ஆரம்பிச்சிட்டார்.

சாயந்திரம் அரண்மனை வைத்தியர் வந்தார். அவரும் முன்னால சொன்னவங்க போலவேதாம் சொன்னார். ராசா வாற நேரமாப்பாத்து வந்திருக்கீரவே; அவரு வந்துட்டுப் போகட்டும்ன்னா இவ.

அதுவரைக்கும் நா என்ன செய்யன்னு கேட்டார் வைத்தியரு.

இப்பிடி இந்த மூலையில உக்காரும்ன்னு சொல்லி அவரு தலையில சாணி உருண்டைய வச்சி, அது மேலெ உலைமூடி தீபத்தைப் பொருத்தி வச்சிட்டா. அசையாம பொம்மைபோல் இருந்துக்கிட்டார் வைத்தியர். ராசாவும் வந்துட்டார்.

அவரும் முன்னால சொன்னவாங்க போலதாம் அவளெப் பார்த்துச் சொன்னார்.

இப்பவே இருக்கணும்ன்னார்.

மகாராசா இப்பிடி அவசரப்பட்டா எப்பிடி? நடுச்சாமத்துக்கு மேலதாம் எல்லாம்ன்னுட்டா; அப்பொ பொழுதெ எப்படிப் போக்கன்னு கேட்டார் ராசா.

ஒரு கதை சொல்லுங்கன்னு கேட்டா இவ. அய்யோ எனக்குக் கதை தெரியாதேன் னார். நீ வேனா ஒரு கதைசொல்லேம்ன்னு கேட்டார்.

சொல்லலாம்; அதுக்கு நாங் கேக்கத நீங்க தரணும். சம்மதமானா ஒரு அருமையான கெட்டவார்த்தெக் கதை இருக்கு சொல்லுதேம்ன்னா.

சொல்லு சொல்லு, அது எனக்கு ரொம்ப...ப் பிடிக்கும்ன்னார் ராசா ரொம்ப ஆசையா.

அப்பா நாங் கேக்கதை தாரும்ன்னா.

என்ன கேட்டாலும் தாரேன்னார்.

ஓங்க மீசை வேணும்ன்னா இவ. ஒனக்கென்னதுக்கு மீசெ ?

அதெப்பத்தி ஓங்களெக்கென்ன; சொன்னபடி தரமுடியுமா முடியாதா?

ராசா ரோசிச்சார். மீசைதானெ; போனாப் போகுது. திரும்பவும் மூளைச்சிருந்தானென்னு நினச்சி, சரி எடுத்துக்கொன்னார்.

ராசா, இடுப்புல கட்டியிருந்த வாளை உருவினார். ரெண்டு பக்கத்து மீசையவும் கொத்தா இறுக்கிப் புடிச்சி கரகரன்னு அறுக்கும்போது கொஞ்சம் உதடும் சேந்து வந்துட்டது! அய்யோ அய்யோன்னு கூப்பாடு போட்டார். அவ கையில வாள் இருக்கதும் அவ பார்வையும் ராசவுக்கு சரியாப்படல. இனி இங்க நிக்கப்படாதுன்னு ஓடப்பார்த்தார். அதுக்குள்ளெ தலைவாசக் கதவை மாறுவேசத்துலயிருந்த மந்திரிமகன் அடைச்சி வெளித்தாப்பா போட்டுட்டாம்.

புறவாசக் கதவு வழியா ஓட்டம் பிடிச்சார். மீசை இல்லாம ரத்தம் வழிய ஓடுற ராசாவப் பாத்து சிரிச்சாங்க தலையாரியும் கர்ணமும் உள்ளெ விளக்கு எரிஞ்சதே தவிர அரமனை வைத்தியரைக் காணம்! ராத்ரியே போயி அரண்மனையில அவள் ராசாவைப் பார்த்து சம்பிரதாயவித்தை தெரிஞ்ச பொண்ணு வேணும்ன்னு சொன்னீங்களாமே; வந்திருக்கேம்ன்னு ராசாவுக்கு எதுக்கெபோயி நின்னா. வேண்டாந் தாயீ; எனக்கு வேண்டவே வேண்டாம்ன்னு ரெண்டு கையவும் தலைக்கு மேல ஒசத்திக் கும்புடு போட்டாராம் அவளெப் பாத்து.

மே உதட்டுப் புண்ணெல்லாம் ஆறி, கிழிஞ்ச உதட்டை மறைக்க மீசையெல்லாம் வளர்ந்த பிறகு ஒருநா மந்திரியக் கூப்பிட்டனுப்பினாரு ராசா.

மந்திரிக்கானா பயம்! ராசா சொல்லி எம்புட்டு நாளாகுது, சம்பிரதாய வித்தை தெரிஞ்ச பொண்ணு வேணும்ன்னு கேட்டு, என்ன ஆக்கினை வரப்போகுதோன்னு போயி நின்னார் மந்திரி.

“யப்பா, நமக்கு இந்த சம்பிரதாயவித்தை தெரிஞ்ச பொண்ணெல்லாம் வேணாம். சாதாப்பொண்ணே போதும்”ன்னுட்டார். அதேபோல, பக்கத்து ஊர் ராசாவோட பொண்ணெப்பாத்து நிச்சயம் செய்தாங்க.

“அதே முகூர்த்தத்துல, சம்பிரதாய வித்தெ தெரிஞ்ச மந்திரிமகனுக்கும் சம்பிரதாய வித்தை தெரிஞ்ச அந்தப் பொண்ணுக்கும் கலியாணம் நடந்து இப்புவம் சவுகரியமா இருக்காளாம்” என்று முடித்தார் கழனியூரன்.

## தொழிலாளி

சுடப்பட்ட குதிரை இறந்த பிறகு, அதன் குட்டிகளை அடுத்தவர் யாராவது வாங்கி வளர்த்துக் கொள்வர்; ஆனால், நலிவடைந்த தொழிலாளி மாள நேர்ந்தால், அவனுடைய குடும்பத்தை யார் காப்பற்றுவது ?

- அறிஞர் அண்ணா

# மணிச்சத்து உபயோகத் திறனை அதிகரிக்கும் வழிமுறைகள்

பயிர்களின் வேர் வளர்ச்சிக்கும் தானிய முதிர்ச்சிக்கும் மணிச்சத்து மிகவும் அவசியம். ஆனால் மணிச்சத்தினை மண்ணிலிடும் பொழுது மண்ணில் நிலவும் பல்வேறு பௌதிக - இரசாயனத் தன்மைகளினால் மண்ணில் நிலைநிறுத்தப் படுவதால் பயிர்களுக்கு எளிதாகக் கிடைக்கப் பெறுவதில்லை. அமில மண்வகைகளில் அலுமினியம் மற்றும் இரும்பு பாஸ்பேட்டுகளாகவும், கார மண்வகைகளில் ட்ரைகால்சியம் பாஸ்பேட்டாகவும் மாற்றப்படுகிறது. அதனால், பயிர் வளர்ச்சிக்கு மணிச்சத்து கிடைக்கப் பெறாமல் மகசூல் குறைய வாய்ப்பேற்படுகிறது. எனவே, மணிச்சத்தின் உபயோகத் திறனை அதிகப்படுத்துவது அவசியம்.

### மணிச்சத்து குறைவாகக் காணப்படும் மண்வகைகள்

★ அமில மண்

★ களர் நிலங்கள்

★ நீண்ட நாட்கள் நீர்த்தேக்கமுள்ள சதுப்பு நிலப் பகுதிகள்

### எப்பொழுது இடவேண்டும்?

மணிச்சத்து வேர் வளர்ச்சிக்கே அதிகமாகத் தேவைப்படுவதால், பயிர்களின் தொடக்க வளர்ச்சி காலத்திலேயே இடுவது நல்லது. அதனால், விதைப்பு/நடவுக்கு முன் அடியுரமாக இடுவதே நல்லது. ஆனால், மணிச்சத்து உரங்களைப் பொதி உருவாகும் பருவம் வரை, மகசூல் இழக்காமல் இடலாம் என்று நிகழ்கால ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. எனவே, அடியுரம் இடத் தவறினாலும், மேலுரமாகவும் இடலாமெனத் தெளிவாகிறது.

### எவ்வாறு இடவேண்டும்?

மணிச்சத்தை இயற்கை மற்றும் செயற்கை உரங்கள் வாயிலாக அளிக்கலாம். கீழ்க்கண்ட முறைகளில் மணிச்சத்து இடப்படுகிறது.

★ அடியுரமாக மண்ணில் தூவுதல்

★ வேர்மண்டலத்தில் மட்டும் இடுதல்

★ நாற்றுக்களின் வேர் நனைப்பு

★ இலைவழித் தெளிப்பு முறை

★ தொழுஉரத்துடன் ஊட்டம் ஏற்றி இடுதல்

தூவுதல் முறையில் உரம் பரவலாக வீசப்படுவதால், வேர்ப் பகுதிகளுக்கு அப்பால் விழுந்து உபயோகப்படாமல் போவதற்கு வாய்ப்புண்டு. ஒரு குறிப்பிட்ட பகுதியான வேர்மண்டலத்தில் மட்டும் இடும்பொழுது, உரமிட அதிக அளவில் ஆட்கள் தேவைப்படும்.

எனவே, செலவு குறைவான, அதே சமயத்தில் போதுமான ஊட்டச்சத்து எளிதில் கிடைக்கக் கூடிய தொழில் நுட்பமுறையே ஒரு சிறந்த மேலாண்மை முறையாகும்.

சூப்பர் பாஸ்பேட் கலவையில் நெல் நாற்றுக்களின் வேர்களை நனைத்து இடுவதன் மூலம் மணிச்சத்து பரிந்துரையில் 10 முதல் 20 விழுக்காடு மணிச்சத்தினைக் குறைத்துக் கொள்ளலாம்.

பொதுவாக மணிச்சத்து உரத்தை நாற்றுநடுமுன் அடியுரமாக இட்டபோதிலும் பொதி உருவாகும் பருவம் வரையிலும் இடலாமென அண்மைக்கால ஆராய்ச்சி முடிவுகள் தெளிவுபடுத்துகின்றன. எனவே மணிச்சத்தை அடியுரமாக இடத்தவறிய வேளாண் பெருமக்கள், பொதி உருவாகும் பருவத்திற்குள்ளாக இட்டுப் பயனடையலாம். அதற்குப் பின்னர் அளித்துப் பயனில்லை.

தழைச்சத்துப் போல் மணிச்சத்தைப் பிரித்திட வேண்டிய அவசியமில்லை. காரணம் முதிர்ந்த இலைப் பாகங்களிலிருந்து கொழுந்துப் பகுதிகளுக்கு, மணிச்சத்து எளிதாக நகரும் தன்மை கொண்டவை. மேலும் நெல்வயல்களில் நீர்த்தேக்கம் தொடர்ச்சியாகக் காணப்படுவதால் மணிச்சத்தின் கரைதிறன் அதிகரித்து, கிடக்கை



மேலும் அதிகரிக்கிறது. மேலும் சூப்பர் பாஸ்பேட் உரம் மாவு வடிவத்தில் இருப்பதால், மேலுரமாக இடும்பொழுது இலைகளின் மீது விழுந்து கருகிப்போவதற்கு வாய்ப்புண்டு. இருப்பினும், குருணைவடிவ சூப்பர் பாஸ்பேட், டை அம்மோனியம் பாஸ்பேட் போன்ற உரங்களைத் தாராளமாக மேலுரமாக இடலாம். மேலும், மணிச்சத்து நீரில் கரைந்து வீரியத்திற்கு இலக்காகுதல் மிகவும் குறைவு.

கரைதிறன் குறைவாகக் கொண்ட மலைப்பாசுவரத்தை நெல்லுக்கு உபயோகப்படுத்தும் போது கவனம் தேவை. நெல் வயல் நடுநிலை கார அமிலநிலை கொண்டது. இந்நிலையில் மலைப் பாசுவரத்தை இட்டால் பயிருக்குக் கிடைக்காது. அதனால், நெல்லுக்கு முந்தைய பயறு வகைப் பயிர்களுக்கு இட்டு, அப்பயிர் விட்டுச் சென்ற மணிச்சத்தை அடுத்த நெல்பயிருக்கு உபயோகப்படுத்தும்படி செய்யலாம்.

மானாவாரிப் பயிர்களுக்கு மணிச்சத்து இடும்பொழுது, அதனைத் தொழுஉரத்தில் ஊட்டமேற்றி பின் இடுதல் நலம். தொழுஉரத்தில் ஊட்டமேற்றுவதால், மணிச்சத்து எளிதில் கிடைக்கும் படிவத்திற்கு மாற்றப்பட்டு, சிறிது சிறிதாக நீண்ட நாட்களுக்குக் கிடைக்க வழிவகுக்கிறது.

தற்சமயம் மணிச்சத்தின் உபயோகத் திறனை அதிகரிக்க உயிர் உரங்கள் பயன்படுத்தப் படுகின்றன. பாஸ்போ பேக்டீரியம், மைகோரைசா பூசணம் போன்றவை கரையாப் படிவத்தில் இருக்கும் மணிச்சத்தினைக் கரைத்து பயிர்கள் எளிதில் எடுத்துக் கொள்ளும் படிவத்திற்கு மாற்றிக் கொடுப்பதால் பயிர்களின் தேவை முழுமையாக நிவர்த்திக்கப்பட்டு, மகசூல் அதிகரிக்க வழிகோலுகிறது. மேலும் பூசணத்தின் இழைகள் நீண்டு வளரும் தன்மை கொண்டதால், வேருக்கு வெகுதொலைவில் காணப்படும் மணிச் சத்தினையும் சேகரித்துப் பயிருக்கு அளிக்கிறது. இதன் மூலம் 20 முதல் 25 விழுக்காடு வரை மணிச்சத்து சிக்கனம் ஏற்படுகிறது.

பயறுவகைப் பயிர்களின் மகசூலை அதிகரிக்க டி.ஏ.பி.2.0 சதக் கரைசல் தெளிப்பு முறையில் பயன்படுத்தப் படுகிறது. இம்முறையில், மண்ணில் நிலைநிறுத்தப்படுதல் குறைக்கப்பட்டு நேரடியாகப் பயிர்களுக்குக் கிடைக்க வழியேற்படுகிறது. மேலும் டி.ஏ.பி. உரத்தில் மணிச்சத்தோடு தழைச்சத்தும் காணப்படுவதால், பயிர் வளர்ச்சி மேலும் ஊக்குவிக்கப்படுகிறது. பருப்பினப் பயிர்களின் வேர்களில் சுரக்கும் திரவம் அமிலத்தன்மை கொண்டவையாக இருப்பதால் கரையாப் படிவத்தில் இருக்கும் மணிச்சத்தினைக் கரைத்து பயிர்கள் எளிதாக எடுத்துக் கொள்ள வழிவகுக்கிறது.

மணிச்சத்தினைச் செயற்கை உரங்கள் வாயிலாக மட்டுமல்லாமல் இயற்கை உரங்கள் வாயிலாகவும் அளிக்கலாம். இயற்கை உரங்களில் முக்கியமானவை "எலும்புத்தூள்" மற்றும் "ஆவியேற்றப்பட்ட எலும்புத் தூள்களாகும்". எலும்புத் தூள்களை ஆவியேற்றுவதால் அவற்றின் மணிச்சத்தின் கிடக்கை அதிகரிக்கிறது.

எனவே, வேளாண் பெருமக்கள் மேற்கண்ட முறைகளைக் கையாண்டு மணிச்சத்தின் உபயோகத் திறனை அதிகரிக்கலாம்.

- கோ.ஆண்டி, முனைவர் ஜி, செல்வக்குமார் மற்றும் முனைவர் கே.கே.மாதன், மண்ணியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை-3.

★ ★ ★

## மத்திய அரசுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதப் பட்டியல்

| நிலை | தற்போதைய ஊதிய ஏற்றமுறை ரூ. | திருத்தப்பட்ட ஊதிய ஏற்றமுறை ரூ. |
|---|---|---|
| I | 5500-200-6500 | 17400-500-21900 |
| II | 5100-150-5700 | 16400-450-2000 |
| III | 4500-150-5700 | 15000-400-18600 |
| IV | 4100-125-4850-150-5300 | 14300-400-18300 |
| V | 3950-125-4700-150-5000 | 12750-375-16500 |
| VI | 3700-125-4700-150-5000 | 12000-375-16500 |
| VII | 3000-100-3500-125-4500 | 10000-325-15200 |
| VIII | 2500-75-2800-100-4200 | 9100-275-14050 |
| IX | 2200-75-2800-100-4000 | 8000-270-13500 |
| X | 2000-60-2300-75-3200-100-3500 | 6500-200-11100 |
| XI | 2000-60-2300-75-3200 | 6500-200-10500 |
| XII | 1820-60-2300-75-3200 | 5900-200-9900 |
| XIII | 1640-60-2600-75-2900 | 5500-175-9000 |
| XIV | 1600-50-2300-60-2660 | 5300-150-8300 |
| XV | 1400-40-1600-50-2300-60-2600 | 5000-150-8000 |
| XVI | 1350-30-1440-40-1800-50-2200 | 4500-125-7000 |
| XVII | 1320-30-1560-40-2040 | 4300-100-6000 |
| XVIII | 1200-30-1560-40-2040 | 4000-100-6000 |
| XIX | 1100-25-1150-30-1660 | 3625-85-4900 |
| XX | 975-25-1150-30-1660 | 3200-85-4900 |
| XXI | 950-20-1150-25-1500 | 3050-75-3950-80-4590 |
| XXII | 825-15-900-20-1200 | 2750-70-3800-75-4400 |
| XXIII | 800-15-1010-20-1150 | 2650-65-3300-70-4000 |
| XXIV | 775-12-835-15-1030 | 2610-60-3150-65-3540 |
| XXV | 750-12-870-15-945 | 2550-55-2660-60-3200 |

## திருத்தப்பட்ட தேர்வுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறை

| வரிசை எண் | சாதாரண நிலை ரூ. | தேர்வு நிலை ரூ. | சிறப்பு நிலை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2550-55-2660-60-3200 | 2650-65-3300-70-4000 | 2750-70-3800-75-4400 |
| 2 | 2610-60-3150-65-3540 | 2750-70-3800-75-4400 | 3050-75-3950-80-4590 |
| 3 | 2650-65-3300-70-4000 | 3050-75-3950-80-4590 | 3200-85-4900 |
| 4 | 2750-70-3800-75-4400 | 3050-75-3950-80-4590 | 3200-85-4900 |
| 5 | 3050-75-3950-80-4590 | 4000-100-6000 | 4300-100-6000 |
| 6 | 3200-85-4900 | 4000-100-6000 | 4300-100-6000 |
| 7 | 3625-85-4900 | 4300-100-6000 | 4500-125-7000 |
| 8 | 4000-100-6000 | 5000-150-8000 | 5500-175-9000 |
| 9 | 4300-100-6000 | 5000-150-8000 | 5500-175-9000 |
| 10 | 4500-125-7000 | 5300-150-8300 | 5900-200-9900 |
| 11 | 5000-150-8000 | 5500-175-9000 | 6500-200-10500 |
| 12 | 5300-150-8300 | 6500-200-10500 | 8000-275-13500 |
| 13 | 5500-175-9000 | 6500-200-10500 | 8000-275-13500 |
| 14 | 5900-200-9900 | 8000-275-13500 | 9100-275-14050 |
| 15 | 6500-200-10500 | 8000-275-13500 | 9100-275-14050 |
| 16 | 6500-200-11100 | 9100-275-14050 | 10000-325-15200 |
| 17 | 8000-275-13500 | 9100-275-14050 | 10000-325-15200 |
| 18 | 9100-275-14050 | 10000-325-15200 | 12000-375-16500 |

## திருத்தப்பட்ட ஊதிய விகிதப்படி வீட்டு வாடகைப்படி

| வ.எண். மற்றும் ஊதிய விகிதம் | மாத வீட்டு வாடகைப்படி (ரூபாயில்) | | | | |
|---|---|---|---|---|---|
| | நிலை (அ) சென்னை நகரம் மற்றும் 32 கி.மீ. வரை நகர எல்லைக்குட்பட்ட இடங்கள் ரூ. | நிலை (ஆ) கோவை, மதுரை நகரங்கள் மற்றும் 16 கி.மீ. நகர எல்லைக்குட்பட்ட இடங்கள் ரூ. | நிலை (II)ல் உள்ள இடங்கள் மற்றும் 8 கி.மீ. நகர எல்லைக்குட்பட்ட இடங்கள் ரூ. | நிலை (III) ல் உள்ள இடங்கள் ரூ. | வரைமுறைப்படாத இடங்கள் ரூ. |
| 1. Upto 2849 | 250 | 150 | 120 | 80 | 60 |
| 2. 2850-3599 | 280 | 200 | 150 | 100 | 70 |
| 3. 3600-4399 | 340 | 250 | 180 | 120 | 80 |
| 4. 4400-4999 | 400 | 300 | 220 | 150 | 90 |
| 5. 5000-5699 | 500 | 360 | 270 | 190 | 100 |
| 6. 5700-6399 | 600 | 420 | 320 | 230 | 110 |
| 7. 6400-7399 | 700 | 480 | 380 | 280 | 120 |
| 8. 7400-7799 | 800 | 550 | 440 | 330 | 130 |
| 9. 7800-8599 | 900 | 620 | 500 | 380 | 140 |
| 10. 8600-9299 | 1000 | 690 | 560 | 430 | 150 |
| 11. 9300-10499 | 1100 | 740 | 620 | 450 | 160 |
| 12. 10500-10799 | 1200 | 800 | 680 | 500 | 170 |
| 13. 10800-11299 | 1300 | 850 | 700 | 500 | 180 |
| 14. 11300-11599 | 1400 | 900 | 700 | 500 | 190 |
| 15. 11600-11899 | 1450 | 900 | 700 | 500 | 200 |
| 16. 11900-13499 | 1500 | 900 | 700 | 500 | 200 |
| 17. 13500 and above | 1600 | 900 | 700 | 500 | 200 |

## திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் நகர ஈட்டுப்படி

| வ.எண். | ஊதிய விகிதம் (ரூ.) | நிலை (அ) சென்னை நகரம் மற்றும் 32 கி.மீ. வரை நகர எல்லைக்குட்பட்ட இடங்கள் (ரூ.) | நிலை (ஆ) கோவை, மதுரை நகரங்கள் மற்றும் 16 கி.மீ. நகர எல்லைக்குட்பட்ட இடங்கள் (ரூ.) |
|---|---|---|---|
| 1. | Below 3000 | 90 | 45 |
| 2. | 3000 - 4499 | 125 | 65 |
| 3. | 4500 - 5999 | 200 | 100 |
| 4. | 6000 and above | 300 | 180 |

## அகவிலைப்படி

### அரசு ஊழியருக்குக் கீழ்க்கண்டவாறு அகவிலைப்படி வழங்கப்படவுள்ளது

| | | | |
|---|---|---|---|
| 1-7-1996 | முதல் | 4% | அடிப்படை ஊதியத்தில் |
| 1-1-1997 | முதல் | 8% | " |
| 1-7-1997 | முதல் | 13% | " |

## அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்பு-திருத்தப்பட்ட பிடிப்பு விவரம்

| ஊதிய ஏற்றமுறை | நிலை-I(அ) நிலை-I(ஆ) | நிலை-II | நிலை-III | இதர |
|---|---|---|---|---|
| | | (சதவிகிதத்தில்) | | |
| 3050 - 4590 | - | NIL | - | - |
| 3200 - 5464 | 1.5 | 1.5 | 1 | 1 |
| 5465 - 9999 | 3 | 3 | 3 | 2 |
| 10,000 - அதற்குமேல் | 4 | 4 | 4 | 3 |

# நெருப்பும் பஞ்சும்

- முக்தா சீனிவாசன்

என்மீது என் அலுவலகத்தில் பணிபுரியும் அத்துணைப் பேருக்கும் ரொம்ப கோபம். "என்ன இந்த எம்.டி. இப்படிச் செய்துட்டாரு'' என்று என்னைக் குறைகூறிப் பேசாதவர்கள் இல்லை. நான் செய்ததெல்லாம் ஒன்றே ஒன்றுதான். ஹெட் கிளார்க் வனஜாவைக் கடலூர் பிராஞ்ச்சுக்கு மாற்றிவிட்டேன்.

கடந்த எட்டு ஆண்டுகளாக வனஜா எங்கள் நிறுவனத்தில் வேலை பார்க்கிறாள். ஆபிஸில் அவளுக்கு ரொம்ப நல்ல பெயர். எல்லோரும் தமது வேலைகளில் ஒரு பகுதியையாவது வனஜா தலையில் கட்டிவிட்டுப் போவார்கள். கொஞ்சம் கூட முகம் சுளிக்காமல் தன் வேலைகளோடு மற்றவர்கள் வேலையையும் சேர்த்துச் செய்து முடித்துவிட்டுத்தான் வீட்டுக்குப் போவாள். ஆபீஸில் பணிபுரியும் யாருக்காவது உடல் நலம் சரியில்லையென்றால் முதலில் அவரைப் போய்பார்த்து டாக்டரிடம் இட்டுச் செல்வாள். ப்யூன் பெரியசாமியின் மூத்த மகள் மஞ்சள் நீராட்டு விழாவை முன்னின்று நடத்தியதும் வனஜாதான். கஷ்டப்படுபவர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சம் பண உதவியும் செய்வாள். இப்படியிருக்கும் வனஜாவை அனைவரும் நேசிப்பது இயற்கைதானே - அவளைப்போய் நான் மாற்றிவிட்டால் கோபம் வராதா என்ன?

வனஜாவின் தகப்பனார் ராஜகோபாலன் வந்து என்னை ஆபீஸில் சந்தித்தார். தன் மகளை நான் கடலூருக்கு மாற்றம் செய்திருப்பதினால் தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை விளக்கிச் சொன்னார். "என் மகள் வனஜா ஒரு விதவை. அவளுக்கு முப்பது வயதுதான் ஆகிறது. கணவன் இறந்து போய் எட்டு வருஷங்களாகின்றன. இப்படி திடீரென்று கடலூருக்குப் போகச் சொன்னால் அங்கே போய் எப்படித் தனியாக இருப்பாள்? எங்கே தங்குவாள்?" என்று கேட்டார்.

"ஏன்? பணிபுரியும் பெண்கள் மட்டும் தங்கும் ஹாஸ்டல் ஒன்று அங்கே உள்ளது. மிக்க வசதியானது அது. அதில் நானே சொல்லி இடம் வாங்கித் தருகிறேன்." என்றேன்.

சோர்ந்த முகத்துடன் என்னைப் பார்த்த அவர் "வயதான என்னையும் என் மனைவியையும் விட்டுவிட்டு அவள் போனால், எங்களை யார் பார்த்துக்கொள்வது?" என்று கேட்டார்.

"ஏன் சார், உங்களைப் பற்றியே நீங்கள் சிந்தித்துக் கொண்டிருந்தால் எப்படி? இந்த டிரான்ஸ்பரினால் உங்கள் மகளுக்கு பிரமோஷன் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. வனஜாவை அங்கே சூப்பரின்டெண்டா போடறோம், ஆயிரம் ரூபாய்க்கு பக்கமா சம்பளம் கூட வரும். பேசாமல் வனஜாவைப் போய் கடலூரில் டியூட்டில ஜாயின் பண்ணச் சொல்லுங்க'' என்று கூறி ராஜகோபாலனை அனுப்பி வைத்தேன். தனக்கு ஏதோ பெரிய பாதகம் விளைவித்து விட்டது போல் என்னை ஒரு வித அசூயை நிறைந்த பார்வையோடு பார்த்துவிட்டுப் புறப்பட்டார் வனஜாவின் தந்தை.

அன்று இரவு - என் மனைவி எனக்கு உணவு பரிமாறிக்கொண்டே "வனஜாவைக் கடலூருக்கு டிரான்ஸ்பர் பண்ணிட்டீங்களாமே, ஏன்?" என்று கேட்டாள். "அங்கு ஆபீஸை நடத்த சரியான ஆள் போதாமல் மானேஜர் ஸ்ரீராமன் திண்டாடுகிறார். இவளைப்போட்டால் ஆபீஸ் நிர்வாகம் சரியாகிவிடும். அதனால்தான் டிரான்ஸ்பர் செய்தேன்." என்றேன். "பாவம் வனஜா. இருபது வயதில் கல்யாணமாகி இருபத்திரெண்டு வயதிலேயே விதவையாகிவிட்டாள். அடக்க ஒடுக்கமாக வந்த அவளை உங்கள் ஆபீஸில் வேலைக்கு எடுத்துக் கொண்டீர்கள். நன்றாகப் பாடுபட்டு முன்னுக்கு வந்தாள். எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்கினாள். ஒரு தமையனுக்கு உண்டான அனுதாபத்தோடு அவளுக்கு எல்லா உதவிகளையும் நீங்க செய்து வந்தீர்கள். இப்ப போய் அவளை டிரான்ஸ்பர் செய்தது நீங்கள் அவளுக்குச் செய்யும் கொடுமை" என்று கூறி முடித்தாள் என் மனைவி. 'இது அவளுக்கு நான் கொடுக்கும் துன்பமல்ல, இதுவரை அந்த இளம் விதவைக்கு நான் செய்து வந்த உதவிகளின் அடுத்த கட்டம்' என்று நினைத்துக் கொண்டு பேசாமல் இருந்தேன்.



வனஜா கடலூர் பிராஞ்சில் போய் வேலைக்குச் சேர்ந்தாள். பிரமோஷனும் சம்பள உயர்வும் அவளுக்கு அளிக்கப்பட்டுவிட்டதாக மானேஜர் ஸ்ரீராம் ரிப்போர்ட் அனுப்பியிருந்தான். என்ன இருந்தாலும் என் மனைவி உட்பட இங்கு என் ஆபீஸில் உள்ள அனைவரும், நான் அவளை டிரான்ஸ்பர் செய்ததற்காக என்மீது வருத்தமும் கோபமும் பட்டுக்கொண்டுதான் இருந்தார்கள்.

ஆறு மாதம் கழிந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை.

வனஜாவும் அவளது அப்பா ராஜ கோபாலனும் என்னைப் பார்க்க வீட்டுக்கு வந்திருந்தார்கள். நான் அவர்கள் நலன் விசாரித்தேன். என் மனைவி அவர்களுக்கு காபி கொண்டுவந்து கொடுத்தாள். அப்போது ராஜகோபாலன், தன் ப்ரீப் கேஸைத் திறந்து ஒரு இன்விடேஷனை எடுத்து என் பெயரை எழுதி நீட்டினார். அதில் வனஜாவுக்கும் கடலூர் பிராஞ்ச் மானேஜர் ஸ்ரீராமுக்கும் திருமணம் வருகிற பத்தாம் தேதி என்று குறிப்பிட்டிருந்தது.

வனஜாவுக்கு வாழ்த்துச் சொன்னேன். "உங்கள் மகள் மறுமணம் செய்து கொள்வதை நீங்கள் தடுக்காமல் ஏற்றுக் கொண்டமைக்காக உங்களைப் பாராட்டுகிறேன்'' என்று நான் ராஜகோபாலனைப் பாராட்டினேன். அவர்கள் சந்தோஷமாகப் புறப்பட்டார்கள்.

காப்பி டம்ளரை எடுத்துச் செல்ல வந்த என் மனைவி, ''அவளைக் கடலூருக்கு நீங்க டிரான்ஸ்பர் செய்தது தேவையில்லாம அவளுக்கு தந்த கஷ்டம்ன்னுதான் நான் நினைச்சேன். ஆனா அதுவே அவளுக்கு ஒரு வரப் பிரசாதம் ஆயிடுச்சு. நாம ஒன்னு நினைக்கிறோம் - அது ஒன்று நடக்குது" என்றாள்.

"அடி பைத்தியம். அதா ஒன்னும் நடக்கலை. நானாத் திட்டமிட்டுச் செய்ததுதான் அது. கடலூர் பிராஞ்ச் மானேஜர் ஸ்ரீராமுக்கு இப்ப 38 வயது. அவனது மனைவி ஹார்ட் அட்டாக்கிலே போய் ஆறு வருஷமாகிறது. எனக்கு ஒரு சமயம் திடீரென்று ஒரு யோசனை தோணிச்சு. நல்லவர்களான ஸ்ரீராமையும் வனஜாவையும் ஒரே இடத்தில் பணிபுரிய வைத்தால், ஒரு வேளை அவர்கள் இழந்து போன தங்கள் இருவரது வாழ்க்கையையும் நினைத்துக்கொண்டே இருப்பதை விட்டு, தங்களுக்குள் ஒரு புதிய வாழ்க்கைக்கு வழி தேடலாம் அல்லவா? நெருப்பையும் பஞ்சையும் அருகில் வைக்கக்கூடாது என்பார்கள்.... ஆனால் நான் அந்த நெருப்பையும் இந்த பஞ்சையும் வேண்டுமென்றே அருகாமைக்கு கொண்டு வந்தேன். அதற்காகத்தான் வனஜாவைக் கடலூருக்கு டிரான்ஸ்பர் செய்தேன். நான் எதிர்பார்த்த நல்ல முடிவு கிடைத்துவிட்டது என்றேன்.

திறந்த வாய் மூடாமல் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள் என் மனைவி. ★

‘தமிழரசு’ ஒரு தரமான பத்திரிகையாக அமைந்திருக்கிறது; அரசின் பத்திரிகையொன்று, அரசுத் திட்டங்கள் - சாதனைகள் பற்றிய விளக்க ஏடாக மட்டுமன்றி, இவ்வாறு கதை, கட்டுரை, கவிதையெல்லாம் தாங்கி வெளிவருவது அரிது. தொடரட்டும் தங்கள் தூய தமிழ்ப் பணி.

- தி.வே.நடேசன், திம்மலை.




திரு.வி.க., அவரது சீடர் கல்கி, வேலூர் ஜமதக்னி போன்றோரின் நூற்கள் நாட்டுடைமை பற்றித் தமிழரசு மூலம் அறிந்து மகிழ்ந்தேன்; வளர்க முதல்வர் கலைஞரின் தமிழ் வளர்ச்சிப்பணி - வாழ்க தமிழரசின் இலக்கியப் பணி.

- தா.பகவதி, மதுரவாயில்.

அட்டையிலேயே - சி.சுப்பிரமணியம், எம்.எஸ்.சுப்புலட்சுமி, அப்துல் கலாம் ஆகியவர்களின் புகைப்படங்களை அழகுற வெளியிட்டு, அவர்கள் பாரத ரத்னா விருதுபெற்றது பற்றிக் குறிப்பிட்டுப் பெருமைப்படுத்தியிருந்தீர்கள்; ‘தமிழரசு’க்கு இதயம் கனிந்த எனது நல்வாழ்த்துக்கள்.

- மு.சிவக்குமார், நெடுவயல்.

உலக மகளிர்நாள் குறித்து முதல்வர் கலைஞர் அவர்கள் விடுத்திருந்த வாழ்த்துச் செய்தி, மகளிர் நலம் காக்கும் வகையிலும், அவர்களை விண்ணளவிற்கு உயர்த்தும் நோக்கிலும் அமைந்திருந்தது; நன்றி.

- அ.பா.சேகர், நா.காட்டூர்.



வன்முறை தலைதூக்கவிடாமல், இவ்வுலகத்தை இனிய பூஞ்சோலையாக்க மனிதனால் நிச்சயம் முடியும் என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது ‘உலகம் இனியது’ என்ற கட்டுரை.

- சீனி.தேவராசன், ஈரோடு.



ஒருமைதரும் தமிழகத்தின்
ஓங்குபுகழ் பரப்பிடவே
பெருமையொடு உதித்தாய் நீ,
பேருலகில் - அருமையென
இப்போது பவனிவரும்
இன்பத்தமிழ் அரசிதழே
எப்போதும் வாழ்க இனிது!

- ப. அருணாசல சண்முகம், வீரளூர்.




அள்ளஅள்ளக் குறையாத இலக்கியப் புதையலாகத் தமிழரசை வெளிவரச் செய்து, எம்உள்ளம் துள்ளிக் குதிக்கச் செய்துவிட்டீர்; நன்றியுடன் பாராட்டுகிறேன்.

- கா.நா.ராஜசேகர், மங்களபுரம்.

# "வருவாய்த்துறை அலுவலர்களுக்கு ஆண்டுதோறும் அண்ணா பதக்கம்!"

## சட்டப்பேரவையில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சிலார் அறிவிப்பு!

சட்டப்பேரவையில் வருவாய்த்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் அறிவித்ததாவது:

தமிழக மக்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களது அன்றாட வாழ்க்கை நடைமுறைகளுக்கு எந்தவொரு வகையிலாவது உறுதுணையாக வருவாய்த் துறை அமைந்திருக்கிறது என்று கூறுவதிலே நான் பெருமிதம் அடைகிறேன்.

மனிதனுக்குத் தேவையான உணவு, உடை, உறையுள், வேலை உள்ளிட்ட அனைத்து அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் வருவாய்த்துறை தனது சீரிய பணியை ஆற்றி வருகிறது.

சென்ற அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் திங்களில் ஏறபட்ட இயற்கை சீற்றத்தினால் தமிழகத்தின் சில மாவட்டங்கள் பெரிதும் பாதிப்புற்றன.

பாதிக்கப்பட்ட மக்களை நேரில் பார்த்து ஆறுதல் அளித்ததுடன் பல இடங்களில் நிவாரண உதவிகளை நான் வழங்கினேன். இந்த வெள்ள நிவாரணப் பணிகளில் அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், சென்னை மாநகரப் பகுதிகளில் மேயர்-தம்பி ஸ்டாலினும் பங்கு கொண்டு மக்களின் துயர் துடைப்பதில் முனைப்புடன் செயலாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வெள்ளச் சேதங்களினால் 234 பேர் உயிர் இழந்தனர்; 631 கால்நடைகள் மடிந்தன. 1,33,000 எக்டேர் நிலங்களில் பயிர்கள் சேதமடைந்தன. பொதுமக்களுக்கு உணவு வழங்குவது, பாதைகள் மற்றும் பாலங்களை மராமத்து செய்வது அகியவை மூலம் இயல்பு வாழ்க்கை வெகு விரைவில் கொண்டு வரப்பட்டது.

இறந்தவர்கள் மற்றும் கால்நடைகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகைகள் உடனுக்குடன் வழங்கப்பட்டன. முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்த ஆணைக்கேற்ப, பொதுமக்களின் முறையீடுகளை உடனுக்குடன் பரிவுடன் கவனிக்க அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

வெள்ள நிவாரணப்பணிகளுக்காக ரூ.58.95 கோடியை அரசு வழங்கியது.

அது மட்டுமல்ல, அந்த கனத்த மழையினால் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு நடப்பு ஆண்டிற்கான நிலவரி முழுவதையும் - அதாவது சுமார் 44 கோடி ரூபாயை ரத்து செய்து முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே அறிவித்துள்ளார்கள்.

வெள்ள நிவாரணம் மற்றும் புனரமைப்புப் பணிகளில் வருவாய்த்துறை உரிய முறையில் பணியாற்றியுள்ளது. தகவல் தொடர்பு சாதனங்கள் இயங்காத நிலையில், வருவாய்த்துறையில் நிறுவப்பட்ட 'ஹோம்ரேடியோ' போன்ற சாதனங்கள் மிகப் பயனுடையவையாக இருந்தன.



நடப்பு ஆண்டில், குடியிருப்பு மனைப் பட்டாக்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட குறியளவு 75,000. ஆனால் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு மட்டும் சுமார் 74,000 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது நாம் பெருமைப்படத்தக்க ஒரு சாதனையாகும்.

பல ஆண்டு காலமாக ஆட்சேபணையற்ற வகைப்பாட்டு நிலங்களில் குடியிருந்தாலும் கூட, மலைப்பிரதேசங்களில் இயற்கைச் சூழல் சீரழிவைத் தடுக்கின்ற காரணத்தால் வீட்டுமனை ஒப்படை செய்வது தடை செய்யப்பட்டு இருந்தது. குறிப்பாக நிலகிரி மாவட்டத்தில் இத்தகைய ஏழை எளிய மக்கள் சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் குடியிருந்து வந்தாலும் அண்மையில் இந்த அரசுதான் இப்பகுதியில் ஒப்படை செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையைத் தளர்வு செய்து ஆணை வெளியிட்டிருக்கிறது.

அதேபோல நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை ஒப்படை செய்வதற்கு இந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்டிருந்த குறியீடு 2,550 ஏக்கர் ஆகும். ஆனால், குறியீடுகளுக்கு மேலாக சுமார் 110 விழுக்காடு அதாவது 2,826 ஏக்கர் நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. குறியீடு 4,000 பேருக்கு நிலம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது.

வேளாண்மை வருமான வரியைப் பொறுத்தவரை இந்த ஆண்டு ரூ.20கோடி வசூல் செய்ய வேண்டும் என்ற குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 37.98 கோடி ரூபாய் - அதாவது 189 விழுக்காடு வசூல் செய்யப்பட்டிருக்கிறது என்பதும் கலைஞர் அரசின் மற்றும் ஒரு சாதனையாகும். ஆகவே, கடந்த ஆண்டில் வருவாய்த்துறையின் பணிகள் சிறப்பாக அமைந்தன என்று இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதிலே நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இருப்பினும், மக்களின் தேவைகளும் எதிர்பார்ப்புகளும் வளர்ந்து கொண்டேதான் இருக்கும். அவைகளை நிறைவேற்ற இந்த அரசு தொடர்ந்து முனைப்புடன் செயலாற்றும்.

சட்டம் - ஒழுங்கு, புயல் வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற இயற்கைச் சீற்ற காலங்கள்; மிக முக்கிய விருந்தினர் வருகை ஆகிய சமயங்களில், மாவட்ட மற்றும் மாநில தலைமையிடங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியது ஒரு இன்றியமையாத தேவையாகும். இதைக் கருத்தில் கொண்டு, மாவட்டாட்சியர், கோட்டாட்சியர் அலுவலகங்களுடன் துரிதமான, பயனுள்ள தொடர்பு வசதிகளை உருவாக்கவும்; மாவட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளவும் வி.எச்.எப் போன்ற நவீன தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்த அரசு பரிசீலிக்கும்.

கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் ஆகிய வருவாய்த்துறை அலுவலர்கள் பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறார்கள். காலம், நேரம் கருதாமல் அவர்கள் ஆற்றி வரும் பணிகளைச் சிறப்பிக்க அரசு விரும்புகிறது.

காவல்துறை அலுவலர்களுக்கு வழங்கப்படும் பதக்கங்கள் போல வருவாய்த்துறையில் சிறப்பாகப் பணியாற்றி, எந்தவிதத் தண்டனையோ, குற்றச்சாட்டோ இல்லாத அலுவலர்கள் - அதாவது, கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர் ஆகிய அலுவலர்களில் சிறந்த ஒவ்வொரு நபருக்கும் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும், அவர்கள் ஆற்றிய பணியைச் சிறப்பிக்கும் வகையில் விருதும், பதக்கமும், ஒவ்வொரு ஆண்டும் வழங்கலாமா என்பது குறித்து அரசு பரிசீலனை செய்யும். மேற்படி விருது, 'பேரறிஞர் அண்ணா விருது' என்று அழைக்கப்படும்.

தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமைஉரிமை வழங்குதல்) சட்டத்தின் கீழ் 19.6.71 அன்று குத்தகை அல்லது உரிமம் பெற்றவர் என்ற முறையில் குடியிருப்பு மனை வைத்துக்கொள்ள உரிமை உண்டு. இவர்களில், பலர் சிறு குடிசைகளிலேயே வாழ்ந்து வருகிறார்கள். பெரும் மழை மற்றும் வெள்ளக்காலங்களில் இவர்களது குடியிருப்புகள் நீரால் சூழப்பட்டு இன்னல் அடைகிறார்கள். ஆகவே அவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள, அரசு மானியத் திட்டங்கள் வாயிலாக உதவி அளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களின் நிலங்கள் குறித்த புல எல்லையை அளவிட்டுக் காட்டவும், பாகப் பிரிவினை போன்ற நில மாற்றங்கள் காரணமாகப் புலங்கள் உட்பிரிவு செய்யப்படுவதற்கும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இத்தகைய பணிகளை எவ்விதத் தாமதமும் இல்லாமல், உடனுக்குடன் முடித்துக் கொடுக்கத் தக்க அறிவுரைகளை அரசு வெளியிடும்.

நில உரிமைப் பதிவேடு திட்டம் ஏற்கெனவே எட்டு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சேலம், நாமக்கல், தருமபுரி, இராமநாதபுரம், திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் கடலூர் ஆகிய ஏழு மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இப்பணிகளை விரைவில் முடித்து, நில உரிமைப்பதிவேடுகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நில அளவைத் திட்டம் முதன்முதலில் தமிழகத்தில்தான் துவங்கப்பட்டது. இருப்பினும், நவீன தொழில் நுட்ப உத்திகள் பயன்படுத்தப்படவில்லை. ஆகவே, நில அளவைத் துறையை, தொழில்நுட்பச் சாதனங்கள் மூலம் நவீனப்படுத்தவும், நில அளவைத் துறை அலுவலர்களுக்கு நவீனத் தொழில் நுட்ப முறைகளில் தகுந்த பயிற்சி அளிக்கவும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதை அரசு பரிசீலிக்கும்.

நில அளவைத் துறையில் பலதரப்பட்ட பணியாளர்களுக்கு, நில அளவை செய்தல், நிலப்பரப்பு கணித்தல், நிலப்படம் வரைதல் போன்ற பணிகளில் பயிற்சி வழங்க தற்போது தஞ்சை மாவட்டம், ஒரத்தநாட்டில் ஒரு பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இங்கு வழங்கப்படும் பயிற்சி முறைகள் இன்னமும் பழமையானதாகவே இருந்து வருகிறது. வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில்நுட்ப உத்திகளையும், கருவிகளையும் பயன்படுத்தி, மேற்கண்ட பயிற்சிகளை சென்னையில் அளிக்க ஏதுவாக ஒரு கூடுதல் பயிற்சி மையம் நிறுவ இயலுமா என்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

நில அளவைத் துறையில், தற்போது புலப்படங்களை அச்சிட்டு வழங்குவதற்கு ஒரு நிழற்பட அச்சகம் சென்னையில் இயங்கி வருகிறது. இது மிகவும் பழமையானது. இதன் காரணமாக, காலதாமதம் ஏற்படுகிறது. குறிப்பிட்ட கால வரம்பிற்குள் பணி முடிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. கிராம, வட்ட மற்றும் மாவட்ட புலப்படங்கள் தயாரிக்கவும், தேர்தல் காலங்களில் தேவைப்படும் புலப்படங்கள் தயாரிக்கவும் இந்த அச்சகத்தை நவீன வசதியுடன் செயல்படும் வகையில் உருவாக்க வேண்டியுள்ளது. ஆகவே, 'லித்தோ' மற்றும் 'லேசர்' அச்சுமுறைகளை இந்த அச்சகத்தில் அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வீட்டுமனை மற்றும் விவசாய நிலங்கள் கோரிக்கை மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, வீட்டு மனை மற்றும் நில ஒப்படை செய்யப்படுகின்றன. ஆனால், உண்மை நிலையைக் கூறாது, தவறான தகவல்கள் அடிப்படையில் பலர் ஒப்படை பெற்றிருப்பதும், ஒப்படை பெற்ற நிலங்களை உரிய முறையில் பயன்படுத்தாமல் இருப்பதும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. ஆகவே, இந்தத் தவறுகளையும், குறைகளையும் களைகின்ற வகையில், வீட்டு மனை மற்றும் நில ஒப்படைகள் ஆய்வுசெய்யப்பட்டு, தவறான தகவல்கள் அடிப்படையில் பலர் ஒப்படை பெற்றிருப்பதும், ஒப்படை பெற்ற நிலங்களை உரிய முறையில் பயன்படுத்தாமல் இருப்பதும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. ஆகவே, இந்தத் தவறுகளையும், குறைகளையும் களைகின்ற வகையில், வீட்டு மனை மற்றும் நில ஒப்படைகள் ஆய்வு செய்யப்பட்டு, தவறான தகவல்கள் அடிப்படையில் அல்லது உரிய முறையில் பயன்படுத்தாமல் உள்ள இனங்களில், அவற்றை மீளக் கொள்ள அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

வீட்டு மனை மற்றும் விவசாய நிலங்களை ஒப்படை செய்வதற்கு, வாட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், நில நிர்வாக ஆணையர் மற்றும் அரசுக்குத் தனித் தனியே நிதிஅதிகார வரம்பு உள்ளது. இந்த நிதிவரம்பு பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. தற்போது நில மதிப்புக் கூடியுள்ள காரணத்தால் இந்த நிதி வரம்பை உயர்த்துவதற்குத் தேவை எழுந்துள்ளது. ஆகவே, மேற்சொன்ன அலுவலர்களின் நிதி வரம்பை உயர்த்துவதற்குத் தக்க நடவடிக்கையினை அரசு மேற்கொள்ளும்.

> *பண முதலாளித்துவத்தைவிட, நில முதலாளித்துவமிருக்கிறதே - அதுதான் மனிதத் தன்மையை மாய்ப்பதிலே முதல்தரமானது.*
>
> - அறிஞர் அண்ணா

உறுப்பினர்கள் பலர் பல்வேறு கருத்துகளை தெரிவித்திருக்கிறார்கள்.

இவை யாவற்றையும் கருத்திற்கொண்டு, தேவையான நடவடிக்கைகள், முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி உரிய நேரத்தில் மேற்கொள்வோம் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் இந்த அவைக்குத் தேவையான பொருத்தமான ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மார்ட்டின் லூதர் கிங் என்ற கறுப்பர் இனத் தலைவர், தமது இன மக்களின் விடுதலைக்காகப் பாடு பட்டு வந்தார். அவரது விடுதலை வேட்கை முயற்சிகளைக் கண்டு பொறுக்காத வெள்ளையர் அவரைச் சுட்டுக் கொன்றனர்.

மார்ட்டின் லூதர் கிங்கைப்போல நாமும் சமத்துவம், சகோதரத்துவம், மனித நேயம், மத நல்லிணக்கம் ஆகியவைகளையே வேண்டுகிறோம்.

அதற்காக இந்த அரசு, கலைஞர் தலைமையில் இயங்கும் அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் வருவாய்த்துறையின் மூலமும் செய்வதில் எந்தத் தயக்கமும் காட்டாது.

நான் ஒன்று சொல்வேன்...

**``The crow has begun to caw - the dawn is not far off".**

அதாவது -

"காகம் கரையத் தொடங்கியது. விடியல் வெகு தொலைவில் இல்லை" பேரவைத் தலைவர் அவர்களே !

- என்று கூறி அமைகிறேன்."

- மேற்கண்டவாறு தமது பதிலுரையில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் குறிப்பிட்டார். ★

# மக்கள் நல்வாழ்வுத் துறையின் மகத்தான செயல் திட்டங்கள்!

**சட்டப்பேரவையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி அவர்கள் 17.4.98 அன்று ஆற்றிய உரை.**

"ஏற்கெனவே மருத்துவத்துறைக்கு 1045.72 கோடி நிதி ஒதுக்கியிருந்தாலும், பகுதி 2 திட்டத்தின்கீழ் 15 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருந்தாலும் இன்னமும் நிதி போதாது என்று உங்கள் சார்பிலே முதல்வரிடத்திலே எடுத்துச் சொல்லி, ஒவ்வொரு கோரிக்கையாக வைத்த நேரத்திலே இன்றுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு இடையிலேயும் அவர் 10 கோடி ரூபாய் தாராளமாக இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறார்.

**முதல்வர் கலைஞர் பரிந்துரை**

இந்த ஆண்டு முதல் எம்.பி.பி.எஸ். மற்றும் பி.டி.எஸ். படிக்க வேண்டும் என்று நினைக்கின்ற கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவீதம் இடஒதுக்கீடு நிச்சயமாகச் செய்து தரப்படும்.

பட்டதாரிகளே இல்லாத குடும்பங்களில் இருந்து வருகின்ற எம்.பி.பி.எஸ். படிக்கவேண்டும் என்று வருகின்ற பட்டதாரிகளுக்கு அவர்கள் படிக்கின்ற வரையில் முழுச்செலவையும் அரசே ஏற்றுக் கொள்ளும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்த வரையில் 1408 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்ட போது 652 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டடங்களே இல்லாமல் இருந்தது. அதை முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி அவர்களும் உடனடியாக 2 ஆண்டு காலத்தில் கட்டி முடிக்கவேண்டுமென்று ஆணை பிறப்பித்து 300 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. இந்த ஆண்டு 352 கட்டடங்களுக்கான பணி நடைபெற்று வருகின்றது.

**தொழில் அதிபர்களே தத்து எடுக்கும் திட்டம்**

இங்கே ஆரம்ப சுகாதார நிலையங்களின் பராமரிப்பைப் பொறுத்தவரையில் இந்தியாவில் யாருமே எடுக்காத முயற்சியை நமது முதலமைச்சர் அவர்கள் எடுத்து இருக்கிறார்கள்.

ஆனால், தொழில் அதிபர்கள், வசதி படைத்தவர்களுக்கு ஒரு சர்வீஸ் மெண்டாலிட்டி வேண்டும் என்ற அந்த நல்ல நோக்கத்தோடு தொழில் அதிபர்களை எல்லாம் அழைத்து நீங்கள் எங்கெங்கே தொழிற்சாலைகள் வைத்து இருக்கிறீர்களோ அங்கே இருக்கக் கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை எடுத்துக்கொண்டால் - பராமரிப்புக்கு எடுத்துக்கொண்டால் நீங்கள் உங்களுடைய நிறுவனத்திற்கு விளம்பரத்தையும் பெறலாம்; அதே நேரத்தில் நோயாளிகளுக்கு உதவி கிடைக்கும் என எடுத்துச்சொன்னார் முதலமைச்சர். நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கின்ற தொழில் அதிபர்கள் அவர்களே முன்வந்து 100 இடங்களில் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களை அவர்கள் தத்து எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த மருத்துவமனைகள் எது எது என்று இப்போதே தேர்வு செய்யப்பட்டு விட்டது.

அதேபோல் எதிர்காலத்தில் தொழில் அதிபர்கள் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவமனைகளைத் தத்து எடுக்க முயற்சிகள் தொடர்ந்து செய்யப்படும்.

இப்படி 24 மணி நேரம் சேவை செய்கின்ற இந்த மருத்துவமனைகளைப் பொறுத்த வரையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்ற போது, திட்டக் கமிஷன் துணைத் தலைவர் அவர்களை நேராகச் சந்தித்துச் சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட மருத்துவமனைகளிலேயே, தாலுகா மருத்துவமனைகளிலேயே 24 மணி நேர சேவை கிடைக்காதபோது, தமிழ்நாட்டில் எப்படி கிராமப்பகுதியில் - அதுவும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணி நேரம் டாக்டர்கள் இருக்கிறார்கள் என்று கேட்டு அதற்கு முதலமைச்சர் அவர்கள் விவரங்களை எடுத்துச் சொன்ன பிறகு உண்மையிலேயே இது இந்தியாவிலேயே பாராட்டக்கூடிய மிகச்சிறந்த திட்டம் என்று முதலமைச்சர் அவர்களுக்கும் அவர்கள் பாராட்டுக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.





## டி.ஆர். பாலு,எம்.பி. நிதி உதவி

வட்டார மருத்துவமனைகள், முதல்நிலை மேல் சிகிச்சை மையங்களாகச் செயல்பட்டு வருபவற்றில் 100 படுக்கைகளுக்குக் குறைவாக இருந்தால், அதையெல்லாம் 100 படுக்கைகளாக உயர்த்தவேண்டும் என்று அரசாங்கம் திட்டமிட்டு, இப்பொழுது 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

சென்னை மாநகரின் தென் பகுதியில் புதிய குடியிருப்புகள் பெருகுவதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மனத்திலே கொண்டு, குறிப்பாக மகாபலிபுரம் சாலையிலே ஏற்படுகின்ற விபத்துக்களையெல்லாம் தடுப்பதற்கும், அங்கே ஏற்படுகின்ற அந்த விபத்துக்களிலே பாதிக்கப்படுகின்றவர்களுக்கு ஒரு மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று எண்ணி, நீலாங்கரையில் ஏறக்குறைய முதல் கட்டமாக 10 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையைத் தொடங்குவதற்கு இந்த ஆண்டு அனுமதி வழங்கியிருக்கின்றார்கள்.

அதற்கு அந்த நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்களும், அவருடைய நிதியிலேயிருந்து 15 இலட்சம் ரூபாய் பணத்தைத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்.

முதலமைச்சரவர்கள் நிதிநெருக்கடிக்கு இடையிலேயும் 13.5 இலட்சம் ரூபாய் நிதியைத் தந்து கிட்டத்தட்ட 350 ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்குவதற்கு உதவி செய்திருக்கிறார்கள்.

## தொழுநோயாளிகளே இல்லாத நிலை

தொழுநோயாளியைப் பொறுத்தவரையிலே 1983ல 10 ஆயிரத்திலே 118 பேர் என்று இருந்த நிலை மாறி, பிறகு 6 பேர் என்று குறைந்து கி.பி. 2000 க்குள் ளாக தமிழகத்திலே ஒரு தொழுநோயாளி கூட இருக்கமாட்டார் என்ற நிலை உருவாக இருக்கிறது.

போலியோவைப் பொறுத்தவவரையிலே இந்தியாவிலேயே நாம்தான் சிறப்பாக இந்தத் திட்டத்தை அமல்படுத்திவருகிறோம்.

கி.பி. 2000-ல், போலியோவால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் ஒருவர் கூட தமிழ்நாட்டிலே இருக்கமாட்டார் என்று திட்டவட்டமாக நான் சொல்வேன்.

## எய்ட்ஸ் கட்டுப்பாடு

எய்ட்ஸ் நோய், இரத்த வங்கிகளில் கொடுக்கப்படுகின்ற தவறான இரத்தம் மூலமாகவும் பரவுகிறது. இதிலிருந்து காப்பதற்காக உரிமம் கொடுப்பதிலே நம்முடைய அரசாங்கம் கண்டிப்பாக இருக்கிறது. யார் உரிமம் பெற்றிருக்கிறார்களோ அந்த இரத்த வங்கியிலேயிருந்துதான் இரத்தம் கொடுக்க வேண்டும் என்றும் இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

தாம்பரம் நெஞ்சக நோய் மருத்துவமனையில் இதற்கான சிகிச்சையை நாம் அளிக்கிறோம். சித்த மருத்துவத்தின் மூலம் நாம் கொடுக்கின்ற மருந்துகளினால் நோயாளி குணமடைந்தாலும்கூட, விஞ்ஞான ரீதியாக நாம் முழுமையாகத் திருப்தியடைய முடியவில்லை; எனவே, விஞ்ஞான ரீதியாக இந்த மருந்து வேலை செய்து அவர்கள் குணமானார்கள் என்பதற்காக ஒரு கருவி வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு 50 இலட்சம் ரூபாய் செலவாகும் என்றார்கள். எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் அந்தக் கருவி இந்த ஆண்டு வழங்கப்பட்டிருக்கின்றது.

நம்முடைய சித்தமருத்துவர்கள் அதைப் பயன்படுத்தி, மருந்து கண்டுபிடிப்பார்களேயானால் எய்ட்ஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடித்தவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் என்ற நல்ல பெயர் நமக்குக் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கொசுவை ஒழிப்பதற்கு நாம் இன்றையதினம் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். மாநகராட்சி, நகராட்சிகள் மூலமாக மருந்து தெளிக்கிறோம். இருந்தாலும், இந்தக் கொசுத் தொல்லையிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக இன்றைய தினம் இந்த அரசு நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு குழுவை அமைக்கலாம் என்று இருக்கிறது.

## கண்ணொளி வழங்கும் திட்டம்

கண்ணொளி வழங்கும் திட்டம் இந்தியாவிலேயே இன்று இந்த மாநிலத்திலே தான் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. 1972-ஆம் ஆண்டு நம்முடைய கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அறிவிக்கப்பட்ட திட்டம் இந்தத் திட்டம். அங்கெல்லாம் கண் டாக்டர் சென்றதால் அந்தக் கண்ணொளி வழங்கும் திட்டத்தின் மூலமாக இலட்சக் கணக்கானவர்கள் பயனடைந்தார்கள். அந்தத் திட்டத்தை இந்த அரசு தொடர்ந்து செய்யவேண்டும் என்று நினைக்கிறது. சென்ற ஆண்டு 3 இலட்சத்து 17,000 பேருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுப் பயனடைந்திருக்கிறார்கள்.

அந்த எண்ணிக்கை இந்த ஆண்டு 3,50,000 பேருக்குச் சிகிச்சை அளிக்கவேண்டுமென்று முயற்சி எடுத்து, முதல் கட்டமாக முதலமைச்சர் பிறந்த ஜூன் 3-ஆம் தேதியிலிருந்து இந்தக் கண்ணொளி வழங்கும் திட்டம் அமல்படுத்தப்படும்.

கோவை மாவட்டத்தில் முதல்கட்டமாகக் கண்பார்வை அளிக்க வேண்டுமென்பதற்காகத் திட்டமிடப்பட்டு, இந்த ஆண்டு முதல் கட்டமாக அந்த மாவட்டத்தில் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படும்.

## பெண் குழந்தைகளுக்கு அரசு முன்பணம்

முதலமைச்சர் அவர்கள் மககள் பெண் குழந்தைகளைக் கொல்வது தவறு என்று உணரும்வகையில்அதற்காகத் திட்டமிட்டு முதல் பெண் குழநதை பிறந்தால் 1500 ரூபாய், இரண்டாவது பெண் குழந்தைக்கு இன்னொரு 1500 ரூபாய் என்று சொல்லி, அவர்களுக்குப் பிறந்தவுடனேயே டெபாசிட் செய்து அந்தப் பணத்தை அவர்களுடைய திருமண வயதை எட்டும் காலத்திலே பெற்றோர்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் - அதாவது இப்போது பெண்

குழந்தை பிறந்தவுடன் செய்தால், 21 ஆண்டுகளுக்குப் பிறகு அது 28 ஆயிரம் ரூபாயாக வளர்ந்து பெற்றோர்களுக்குக் கிடைக்கிறது.

அதன் மூலமாவது பெண்குழந்தைகள் கொல்லப்படாமல் இருப்பார்களா என்ற நல்ல எண்ணத்தோடு நமது முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்.

ஆனால், அதையும் மீறி யாராவது பெண் குழந்தைகளைக் கொல்வதற்குக் கணவன்மார்கள் அதற்குத் தூண்டுதலாக இருப்பார்களானால், அவர்கள் மீது இந்த அரசு கருணையில்லாமல் கடுமையான கிரிமினல் குற்றம் சாட்டி வழக்குத் தொடரும்.

குடும்பக் கட்டுப்பாட்டிலே இந்தியாவிலேயே நாம் இரண்டாவது இடத்திலே இருக்கிறோம். 19.2 என்ற புள்ளிவிவரம் இன்று இந்தியாவிலேயே நமக்குப் பெருமை தரத்தக்கதாக இருக்கிறது. அதாவது பிறப்பு விகிதம்.

**திருச்சியில் மனநலக் காப்பகம்**

மனநலக் காப்பு மையங்கள், இந்தியாவிலேயே மிகச் சிறந்த - மெண்டல் ஆஸ்பிடல் - மனநலக் காப்பு மையம் கீழ்ப்பாக்கத்திலே இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு இதுபோன்ற இடங்களைத் தயார் செய்யவேண்டுமென்று எண்ணி, இந்த அரசாங்கம் இந்த ஆண்டு திருச்சியிலே புதிதாக ஒரு மெண்டல் ஹாஸ்பிடல் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையிலே இயங்கிக்கொண்டிருக்கும் கைஅறுவை ஆய்வு மற்றும் புனரமைப்பு மையத்தை சிறந்த சேவை மையமாக இந்த ஆண்டு அறிவிக்கிறது. இதற்காக முதலமைச்சர் அவர்கள் 25 இலட்சம் ரூபாயை நிதியாக ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

இராஜாஜி மருத்துவமனைக்கு ஒரு 50 இலட்சம் ரூபாயை நிதியாக பார்ட்-2 ஸ்கீமிலே ஒதுக்கினார்கள். நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்களிடத்திலே போய்ச் சொன்ன உடன் - எப்பொழுதுமே சபாநாயகருக்கு ஒரு தனிக்கவனம் உள்ளது. அதை ஒரு கோடி ரூபாயாக உயர்த்தி உடனடியாக அந்தப் பிரச்சினையைத் தீர்த்துவையுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

## அட்டைப்பட விவரம்

**முதலாம் பக்க அட்டையில்...**

கவர்னகிரியில், மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் திறந்துவைத்த **வீரன் சுந்தரலிங்கம்** நினைவுக் கிராமம்.

**இரண்டாம் பக்க அட்டையில்...**

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்,
பொதுவுடைமை வீரர் **ப.ஜீவானந்தம்.**

**கடைசிப் பக்க அட்டையில்...**

நாகர்கோவிலில், மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் திறந்து வைத்த பொதுவுடைமை வீரர் **ப.ஜீவானந்தம்** மணிமண்டபம்.

**மேலும் புதிய மருத்துவக் கல்லூரிகள்**

மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் தமிழகத்திலே 10 மருத்துவக் கல்லூரிகள், அரசு மருத்துவக் கல்லூரிகளே இயங்கிவருகின்றன. பல ஆண்டுகளாகப் புதிய கல்லூரிகளே தமிழகத்தில் ஏற்படுத்தப்படவில்லை. நாம் இன்னும் ஒரு 4 மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கவேண்டும் என்பது முதலமைச்சருடைய ஆசை. ஆனால் நிதிநிலைமை சரியாக இல்லை.

அது மட்டுமல்ல; இந்தியாவிலேயே தேர்வு முறையை நாம் தான் சிறப்பாகச் செய்கிறோம். அந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது தகுதி அடிப்படையிலே மட்டுமல்ல, இடங்களை ஒதுக்கீடு செய்யும்போதும் மருத்துவமனைகளிலே மருத்துவக் கல்லூரிகளிலே அதிலேயும் இடஒதுக்கீடு பார்க்கிறோம்.

சென்னை பொது மருத்துவமனை என்று சொன்னால் மெரிட்டிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு எவ்வளவு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, முன்னேறிய சமுதாயத்திற்கு எவ்வளவு என்று பார்த்து விகிதாச்சார அடிப்படையிலே தான் நாம் இடங்களை ஒதுக்குகிறோம். இது இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலேயும் கிடையாது.

அதுவும் என்றைக்குத் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்களைப் பத்திரிகையிலே வெளியிடுகிறோமோ அன்றைக்கே எந்தக் கல்லூரி என்பதையும் வெளியிட்டுவிடுகிறோம்.

**ரூ.5 இலட்சம் முன்பணம்**

நம்முடைய தமிழகத்திலே கேரளாவில் உள்ளது போல அப்படிப்பட்ட சொசைட்டி மூலமாக மருத்துவக் கல்லூரிகளை கோ-ஆபரேட்டிவ் சங்கங்கள் மூலமாக அங்கே எப்படி நடைபெறுகிறதோ அப்படி நாமும் நடத்த ஆரம்பிக்கலாம் என்று ஒரு முடிவு செய்திருக்கிறோம்.

அதிலே வேடிக்கை என்னவென்றால் அதிலே தேர்ந்தெடுக்கப்படுகிற மாணவர்களும் நம்முடைய எப்போதும் போல தேர்ந்தெடுக்கப்படுகிற பட்டியலிலிருந்து தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர்கள் போய்ச் சேருகிற நேரத்திலே 5 இலட்ச ரூபாய் முன்பணம் கட்ட வேண்டும். அவர்கள் திரும்பிப் போகும்போது அந்த 5 இலட்ச ரூபாயை நாம் திருப்பிக் கொடுத்துவிடுகிறோம்.

இப்போது பல கல்லூரிகளில் தனியார் கல்லூரிகளில் 20 இலட்ச ரூபாய் என்று வாங்குகிறார்கள். 5 இலட்ச ரூபாய் என்று Capitation fees வாங்குகிறார்கள்; 10 இலட்சம் ரூபாய் என்று வாங்குகிறார்கள்; அது உறுப்பினர்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால் அரசாங்கக் கல்லூரிகளிலே 5 இலட்ச ரூபாயை முன்பணமாகக் கொடுத்துவிட்டுப் போகிற நேரத்தில் அந்த 5 இலட்ச ரூபாயை நாம் திருப்பிக் கொடுத்துவிடுகிறோம்.

சிலபேர் கேட்கலாம். தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 5 இலட்ச ரூபாய் எங்கேயிருந்து கிடைக்கும் என்று. அப்படி ஒரு குறை இருக்குமானால் அவர்களுக்கு, படிப்பதற்குச் சில வங்கிகள் கடன் கொடுக்கின்றன. அந்தக் கடனையும் அரசாங்கமே ஏற்பாடு செய்து அந்த மாணவர்களையும் சேர்த்துக்கொள்வதற்கு இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

வேலூரிலும் தூத்துக்குடியிலேயும் இந்த ஆண்டு முதற்கட்டமாக அந்தக் கல்லூரிகள் தொடங்கப்படும். அடுத்த கட்டமாகக் கன்னியாகுமரியிலும், விழுப்புரத்திலும் அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும்.

சித்த மருத்துவத்தைப் பொறுத்தவரையிலே இந்த அரசாங்கம் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. எப்போதும் இல்லாத அளவுக்கு ஒரு கவுன்சிலை ஏற்படுத்தியிருக்கிறோம். ஐ.ஏ.எஸ். அதிகாரி - லட்சுமிகாந்தன் தலைமையிலே நாம் ஒரு கவுன்சிலை ஏற்படுத்தியிருக்கிறோம்.

அடுத்து மருந்து விநியோகத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தின் விநியோக முறையைப்போல் வேறு எங்கேயும் கிடையாது.

**தமிழகத்தைப் பின்பற்றும் பஞ்சாப்**

கம்ப்யூட்டர் நெட்ஒர்க் மூலமாகத் தலைமையிடத்திலிருந்து - சென்னையிலிருந்து விநியோகிக்கப்படுகின்றன.

கன்னியாகுமரியின் ஒரு கோடியிலே மருந்து இல்லை என்று காலை 10 மணிக்குச் சொன்னால் அதைக் கம்ப்யூட்டர் மூலம் தெரிந்துகொண்டு மறுநாள் காலை 10 மணிக்கெல்லாம் அங்கே அந்த மருந்துகள் போய்சேரக் கூடிய வாய்ப்பினை நாம் பெற்றிருக்கிறோம். அந்த மருந்துகள் கூட டெண்டர் மூலமாகத்தான் பெறப்படுகின்றன. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுடைய குழு ஒன்று பரிசீலித்து, தேர்ந்தெடுத்த மருந்துகளை வழங்குகிறார்கள்.

தலைமைத் தேர்தல் ஆணையர் கில் அவர்களை, நாம் சந்திக்கச் சென்றிருந்தபோது; "தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட ஒரு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேஷன் இருக்கிறதாமே, அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்" - என்று கேட்டார்கள். நானும் எடுத்துச் சொன்னேன். அவர்கள் உடனடியாகப் பஞ்சாப் முதலமைச்சர் அவர்களிடம் தொடர்பு கொண்டு, யாரையாவது அனுப்பி தமிழ்நாட்டிலே இந்த மருத்துவ சேவைக்கழகம் எப்படி செயல்படுகிறது என்று பாருங்கள் எனத் தெரிவித்தார்கள். தமிழ்நாட்டில் செயல்படும் மருத்துவச் சேவை சர்வீஸைப் பார்த்து பஞ்சாபிலே ஆரம்பிக்கலாம் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய அளவில் நம்முடைய மருத்துவ சேவைக் கழகம் பணியாற்றிக் கொண்டிருக்கிறது".

- இவ்வாறு அமைச்சர் திரு. **ஆர்க்காடு வீராசாமி** அவர்கள் சட்டப்பேரவையில அறிவித்தார்.

## மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் திருமண நிதிஉதவித் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 60 ஆயிரம் பேர் பயன்பெற ரூ.60 கோடி ஒதுக்கீடு



- மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்
**திருமதி சற்குண பாண்டியன்**
(23.4.98-ல் சட்டமன்ற அறிவிப்பிலிருந்து)

**1996-97**-ஆம் நிதியாண்டில் 31,680 பெண்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தில் பயன்பெறும் வகையில் ரூ.31,680 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1997-98-ம் நிதியாண்டில் 37,000 பெண்கள் பயன்பெறும் வகையில் ரூ.37 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆகமொத்தம் 96-98 பிப்ரவரி மாதம் வரை 68,680 பெண்கள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

31.3.98 வரை நிலுவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும். மேலும் இத்திட்டத்திற்கு 98-99-ஆம் ஆண்டிற்கு ரூ.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளினை ஏற்று, அன்பளிப்பாகப் பல்வேறு கொடையாளர்களிடமிருந்து சுமார் ரூ.5 கோடியளவில் நிதி வசூலாகியது. அந்தத் தொகைக்கு வருமான வரிவிலக்கு அளிக்கவும் முதலமைச்சர் அவர்கள் வழிவகை செய்துள்ளார்.

தாய் தந்தையை இழந்த 20 வயது பூர்த்தியான 8-ஆம் வகுப்புவரை படிக்கவியலாத ஆதரவற்ற பெண்களுக்கான திருமணநிதி உதவித் திட்டத்தின்படி 1996-97ஆம் ஆண்டில் ரூ.2,000 ஆகவும், 1997-98 ஆண்டில் ரூ.3,000 ஆகவும் உயர்த்தப்பட்டது. பின்னர் 1998-99-ஆம் ஆண்டில் ரூ.5,000-ம் ஆகவும் உயர்த்தப்படுகிறது.

18 வயது பூர்த்தியான 8-ஆம் வகுப்பு வரை படிக்க இயலாத ஏழை விதவையரது மகள் திருமண நிதிஉதவித் திட்டத்திற்கான உதவித்தொகை 1997-98-ஆம் ஆண்டு ரூ.3,000 ஆகவும், 1998-99ஆம் ஆண்டு ரூ.5000 ஆகவும் உயர்த்தப்பட்டது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமணத் திட்டம், அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமணத் திட்டம் மற்றும் பார்வையற்றோரைத் திருமண செய்துகொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கு வழங்கப்படும் திருமண உதவித் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களின் கீழும் தம்பதியரின் ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருக்கவேண்டும் என்ற விதி நடைமுறையில் உள்ளது. அது இந்த ஆண்டு முதல் முழுமையாக நீக்கப்படுகிறது.

காது கேளாதவர்களைத் திருமணம் செய்ய முன்வரும் பேசும்திறன் மற்றும் காது கேட்கும் திறனுடையவர்களுக்கு, இந்த ஆண்டு முதல் ஒரு பாராட்டுச் சான்றிதழும், திருமணச் செலவிற்காக ரூ2,000-மும் தேசிய சேமிப்புப் பத்திரமாக ரூ.3,000-மும் இவ்வாண்டு முதல் வழங்கப்படும். இது ஒரு புதிய திட்டமாகும். ★






# 133 அடி உயர வள்ளுவர் சிலை அமைப்புப் பணி: முதலமைச்சர் கலைஞர் பார்வையிட்டார்

வான்புகழ் கொண்ட குறள் தந்த பெரும் பேராசான் வள்ளுவருக்குத் தமிழகத் தலைநகரில் வள்ளுவர் கோட்டம் கண்ட கலைஞர் அரசு, தென் குமரிமுனையில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவருக்குச் சிலை அமைத்திட முடிவெடுத்து 1990 - ஆம் ஆண்டு கழக ஆட்சிக் காலத்தில் அப்பணியின் தொடக்கவிழா நடைபெற்றது.

அப்பணி இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றப் படவிருக்கிறது என 1998-99ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெருமகிழ்ச்சியுடன் அறிவித்துப் பெருமிதம் கொண்டார்.

முக்கடலும் சங்கமிக்கும் குமரிமுனையில் நடைபெற்று வரும் அப்பணியினை கலைஞர் அவர்கள் 19.4.98 அன்று பார்வையிட்டுப் பணிகளைத் துரிதப்படுத்திட ஆணையிட்டார்.

சிலை அமைக்கும் பணி குறித்த விவரங்களையும், அதன் நுட்பங்களையும் அப்பணியை மேற்கொண்டு வரும் கணபதி ஸ்தபதி அவர்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் விளக்கிக் கூறினார்.

முதலமைச்சருடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. ஆர்க்காடு வீராசாமி, திரு. துரைமுருகன், திரு. தா. கிருட்டினன், திரு. ஆலடி அருணா, திரு. முல்லைவேந்தன், திரு.இரகுமான்கான், திரு.சமயநல்லூர் செல்வராஜ், திரு. சுரேஷ்ராஜன், திரு. ஜெனிபர் சந்திரன், முதலமைச்சர் அவர்களின் துணைவியார் திருமதி. தயாளு அம்மாள் ஆகியோரும் சென்றிருந்தனர்.

## கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப்புப்பணி

1975 - ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கன்னியாகுமரியில், விவேகானந்தர் நினைவு மண்டபம் அருகில் அமைந்துள்ள பாறையின் மீது திருவள்ளுவர் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்தார். அதன் அடிப்படையில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## பணிபற்றிய புள்ளி விவரங்களும் பணிப் பொறுப்பும்

திருவள்ளுவர் சிலை அமைக்க அரசு ஆணையிட்ட நாள் 24.7.1990 ஆகும். சிலை செய்வதற்கு ஒதுக்கீடு செய்த தொகையின் அளவு ரூ.360.15 இலட்சம்.

| | |
|---|---|
| கல்லால் சிலை வடிக்கும் சிற்பியின் பெயர் | திரு. வை.கணபதி ஸ்தபதி. |

அம்பாசமுத்திரம் (நெல்லை மாவட்டம்) பட்டுமலைக் குப்பம், (செங்கை மாவட்டம்) ஆகிய இடங்களில் உள்ள பாறைகளிலிருந்து கற்களை வெட்டி எடுத்து, பீடத்தையும் சிலையையும் சிற்பிகளைக் கொண்டு செதுக்கி, கன்னியாகுமரிக் கடற்கரைக்குக் கொண்டுவந்து இறக்கி வைத்திடும் பொறுப்பும், பாறைமீது கற்களைச் சேர்மானம் செய்து சிலையைக் கட்டிக் கொடுக்கும் பொறுப்பும் திரு.வை.கணபதி ஸ்தபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடற்கரையிலிருந்து வள்ளுவர் பாறைக்குச் சிற்பிகளையும், செதுக்கி முடித்திட்ட கற்களையும், பிற கட்டுமானப் பொருட்களையும் பாண்டூன் மூலம் எடுத்துச் சென்று ஸ்தபதியிடம் ஒப்படைக்கும் பொறுப்பும், மேடு பள்ளங்களாய்க் கிடந்த வள்ளுவர் பாறையின் முகட்டை வெட்டிச் சமன்படுத்திடும் பணியும், வள்ளுவர் பாறைக் கருகில் படகுத் துறை அமைத்திடும் பணியும் தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

## சிலை பற்றிய தொழில்நுட்பக் குறிப்புகள்

இது, முற்றிலும் கற்களால் நிர்மாணிக்கப்படும் திருவள்ளுவர் உருவச் சிலையாகும்.

| | | |
|---|---|---|
| திருவள்ளுவர் சிலையின் மொத்த உயரம் | : | 133 அடி |
| சிலையின் உயரம் மட்டும் | : | 95 அடி |
| பீடத்தின் உயரம் | : | 38 அடி |
| முகத்தின் உயரம் | : | 10 அடி |
| கொண்டை உயரம் | : | 5 அடி |
| மார்பளவு அகலம் (தோள்பட்டை சேர்த்து) | : | 30 அடி |
| கைத்தலத்தின் உயரம் | : | 10 அடி |
| கையில் பிடித்திருக்கும் ஏட்டின் நீளம் | : | 10 அடி |
| சிலை, ஆதாரபீடம் மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவற்றிற்குத் தேவையான கற்களின் மொத்த எடை | : | 3,681 டன் |
| சிலை மற்றும் பீடம் ஆகியவற்றின் மொத்த எடை | : | 7,000 டன் |

| | | கற்கள் | வரிகள் | உயரம் |
|---|---|---|---|---|
| ஆதாரபீடம் | : | 672 | 15 | 38 அடி |
| சுற்றுச்சுவர் | : | 1726 | 18 | 38 அடி |
| சிலை | : | 1283 | 21 | 95 அடி |
| மொத்தம் | : | 3681 | | 133 அடி |

சிலை நிற்கும் பீடத்தின் பரப்பளவு : 35'x25'=875 ச.அடி

இதைச்சுற்றி 38 அடி உயரம் கொண்ட
சுவர் அமைகிறது. அதன் பரப்பளவு : 63'x53'=3,339 ச.அடி

**பணி தொடங்கப் பெற்ற நாள்**

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைப்பணி
தொடங்கப் பெற்ற நாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 6.9.90 அன்று தொடங்கப் பெற்றது.

ஸ்தபதி பணி தொடங்கிய நாள் : 27.1.1991

**சிலை செதுக்கும் பணிகள் நடைபெற்ற இடங்கள்:**

1. சோழிங்கநல்லூர் (சென்னை)
2. அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி)
3. கன்னியாகுமரி

ஸ்தபதிக்கு உரிய நேரத்தில் தேவையான பணம் வழங்கப்
படாததால் அவர் தனது பணியை நிறுத்திய நாள் : 1.3.1995

முதற்கட்டத்தில் செய்திட்ட பணிகள் (1991 முதல் 28.2.94 வரை)

சிலைக்கும் பீடத்திற்கும் மொத்தமாக ஆகும் 3,681 கற்களில் 2,048 கற்கள் செதுக்கி முடிக்கப்பட்டிருந்தன.

எஞ்சியிருந்த பணி அளவு : 1633 கற்களுக்கான பணி 3681 கற்களைச் சேர்மானம் செய்திடும் பணி.

**இரண்டாம் கட்டப் பணிகள் (தொய்விற்குப்பின் தொடக்கம்)**

திருவள்ளுவர் சிலையை விரைவில் முடித்திட வேண்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறையில் 25.6.1997 அன்று சிறப்புக்கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதித்துறைச் செயலர், பொதுப்பணித்துறையைச் சேர்ந்த உயர் அலுவலர்கள் ஆகியோருடன் அமர்ந்து சிலை செய்வதற்கான மதிப்பீடு, செயல்முறைத் திட்டம், தேவைப்படும் கால அவகாசம், நிதி ஒதுக்கீடு ஆகியவை தொடர்பான அம்சங்கள் மிகவும் விரிவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. திரு. கணபதி ஸ்தபதி அவர்கள் கொடுத்த திருத்திய மதிப்பீடும், தமிழ்நாடு கட்டுமானக் கழகம் அளித்த திருத்திய மதிப்பீடும் பொதுப்பணித்துறை ஆய்வு செய்து கொடுத்ததின் அடிப்படையில் திருத்திய மதிப்பீட்டுத் தொகையான ரூ.614.00 இலட்சம் திரு. கணபதி ஸ்தபதி அவர்களுக்கும், ரூ.172 இலட்சம் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திற்கும் 3.7.1997 அன்று அரசு அங்கீகரித்தது.

> **தி**ருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம்; அவர் வாழ்ந்த மண்ணில் வாழத் தக்கவர்கள் நாம் என்பதைப் பேச்சினால் அல்ல; செயலினால் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்.
>
> \- அறிஞர் அண்ணா

இடைக்காலத் தொய்வுக்குப் பிறகு திருவள்ளுவர்
சிலை அமைக்கும் பணி தொடங்கப்பட்ட நாள் : 1.9.1997

திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூ. : 614 இலட்சம்

**வள்ளுவர் பாறையில் சேர்மானப்பணி**

1.3.1995க்குப் பிறகு நின்றுவிட்ட பணிகளை விரைவாக முடித்திட வேண்டி 12.12.1996 அன்று அரசு ஆணையிட்டு மீண்டும் திருவள்ளுவர் சிலை அமைகின்ற பணிகள் தொடங்கப்பட்டன.

வள்ளுவர் பாறைக்குப் பாண்டூன் மூலம்
கொண்டு செல்லப்பட்ட கற்கள் : 209

மேற்கண்ட கற்களில் சேர்மானம்
செய்யப்பட்ட கற்கள் : 88 (2 வரிகள்) திண்டு வரி (levelling course) மற்றும் ஆதார பீட முதல் வரி

தற்போது வள்ளுவர் பாறைக்குக் கல் எடுத்துச் செல்ல உதவும். படகுத் துறை சின்னமுட்டம் படகுத் துறை (சின்ன முட்டத்திலிருந்து வள்ளுவர் பாறைக்குள்ள கடல் வழித்தூரம் 3 கி.மீ.)

**உபரிப் படகுத்துறை அமைப்பதன் அவசியம்**

தற்பொழுது பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகப் படகுத் துறையின் மூலம் விவேகானந்தர் நினைவு மண்டபம் செல்லும் பயணிகள் எண்ணிக்கை பெருகிவிட்டதால் அத்துறையை வள்ளுவர் சிலைக் கட்டுமானப் பணிக்குப் பயன்படுத்த இயலாது என்று பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துவிட்டதால் மீனவர் படகுத்துறையான சின்னமுட்டத்திலிருந்து கற்களைக் கொண்டுசெல்ல வேண்டியதாயிற்று. ஆனால் 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள் முதல் மூன்று மாதங்கள் சின்னமுட்டம் படகுத் துறையிலிருந்து பாண்டூன் மூலம் (படகு மூலம்) செதுக்கப்பட்ட கற்களைப் பாறைக்கு எடுத்துச் செல்ல இயலாது என்றும், அந்த நேரத்தில் மீனவர்கள் மீன் பிடிக்கும் பருவகாலப் பணியைத் தொடங்கி விடுவதால் சின்ன முட்டம் படகுத் துறையிலிருந்து கல் எடுத்துச் செல்லுவது இயலாது என்றும் தெரியவருகிறது. எனவே ஆகஸ்ட் திங்களுக்குள் தனியாகப் படகுத்துறை ஒன்றினை அமைத்திடல் அவசியம் ஆகும்.

மேலும் திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணி முடிவடைந்த பின்பு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகமாகும் என்பதாலும், தனியான படகுத் துறை இருப்பின், இப்போது விரைவில் சிலைக்குத் தேவையான கற்கள் மற்றும் பொருட்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் கொண்டு செல்ல வசதியாக இருக்கும் என்பதாலும், புதிய படகுத் துறை ஒன்றினை விரைவில் அமைத்திட வேண்டியிருக்கும்.

**நிதியும், நிதி ஒதுக்கீடும்**

| | தமிழ்நாடு கட்டுமானக் கழகம் (இலட்சத்தில்) | ஸ்தபதி (இலட்சத்தில்) |
|---|---|---|
| திருத்திய மதிப்பீடு | ரூ. 172.00 | ரூ. 614.00 |
| இதுவரை வழங்கப்பட்டது | ரூ. 83.00 | ரூ. 272.58 |

**பணியை முடித்திட வகுத்துக்கொண்ட கால அளவு**

| | |
|---|---|
| ஆதார பீடம் | 5 மாதம் |
| சிலை | 10 மாதம் |
| சுற்றுச்சுவர் | 6 மாதம் |
| சிலை முடித்திடும் நாள் | ஆகஸ்ட் 1999க்குள் |

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



